அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

# தொழில் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2015-2016

## மானியக் கோரிக்கை எண்.27

**பி. தங்கமணி**
தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

# தொழில் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2015– 2016

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1 – 7 |
| 1. | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | 8 – 29 |
| 2. | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 30 – 50 |
| 3. | தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் | 51 – 60 |
| 4. | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | 61 – 77 |
| 5. | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் | 78 – 93 |
| 6. | தமிழ்நாடு உப்பு நிறுவனம் | 94 – 108 |
| 7. | தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் | 109 – 117 |
| 8. | தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் | 118 – 125 |
| 9. | தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் | 126 – 143 |
| 10. | தமிழ்நாடு கனிம நிறுவனம் | 144 – 151 |
| 11. | புவியியல் மற்றும் சுரங்கத்துறை | 152 – 160 |
| 12. | சர்க்கரைத் துறை | 161 – 171 |

# தொழில் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2015 – 2016

### முன்னுரை

தொலைநோக்கு மற்றும் ஆற்றல் மிக்க நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையின்கீழ், கீர்த்திமிகு கடந்த காலத்தையும் ஆற்றல் மிகு நிகழ்காலத்தையும் நம்பிக்கையூட்டுகிற எதிர்காலத்தையும் தமிழ்நாடு கொண்டுள்ளது. தற்போது தொழில் வளர்ச்சியில் இந்திய மாநிலங்களுள் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. தமிழ்நாட்டின் தற்போதைய நிலை பின்வருமாறு: -

மத்திய அரசின் திட்ட ஆணைக் குழு டிசம்பர் 2014ல் வெளியிட்ட தகவல் புத்தகத்தில் இடம்பெற்ற தகவலின்படி, 2013–14ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSDP) நிலையான மதிப்பு-2005–ன்படி **ரூ.4,80,618 கோடி** என்ற மதிப்புடன் இந்திய மாநிலங்களிடையே பொருளாதாரத்தில் இரண்டாவது



இடத்தை வகிக்கிறது. 2013–14ஆம் ஆண்டில் அகில இந்திய வளர்ச்சி விகிதமான 4.74 சதவிதத்தை விட தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.29 சதவிதமாக உள்ளது.

இந்திய அரசின் மத்திய புள்ளியியல் நிறுவனத்தின் (CSO) 2012–13 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர தொழில் ஆய்வு அறிக்கையின்படி, தமிழ்நாடு, பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

- தொழிற்சாலைகளின் எண்ணிக்கை **(36,869)** அடிப்படையில் தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் முதலிடம் பெறுகிறது.
- தொழிற்சாலைகளில் வேலை நியமனம் பெற்றுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை **(16,02,447)** அடிப்படையில், தமிழ்நாடு முதலிடம் பெறுகிறது.
- பணிபுரியும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கையின் **(19,65,020)** அடிப்படையில் தமிழ்நாடு முதலிடம் பெறுகிறது.
- மூலதன முதலீட்டின் அடிப்படையில் **(ரூ.2,92,260.06 கோடி)** தமிழ்நாடு மூன்றாம் இடம் பெறுகிறது .

- தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களுடைய மொத்த வருவாய் மதிப்பின் **(6,19,525.33 கோடியில்)** அடிப்படையில், தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது.

மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை வளர்ச்சி ஆணையரின் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி 2013–14–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் **1,16,393** புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு இந்தியா அளவில் முதன்மையில் உள்ளது. இது நாடு முழுவதும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை துவக்க ஊக்கப்படுத்தப்பட்ட அளவில் 32.04 சதவீதமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2000 முதல் மே 2015 வரை **ரூ. 93,725 கோடியளவிற்கு** அந்நிய நேரடி முதலீட்டினை ஈர்த்து மகாராஷ்டிரா மற்றும் புது தில்லி தலைநகர் பகுதிக்கு (ஹரியானா மாநிலத்தில் குர்கான், மற்றும் உத்திரப்பிரதேசத்தின் நொய்டா உட்பட) அடுத்ததாக மூன்றாம் இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. ஏப்ரல் 2011–ல் **ரூபாய் 33,105 கோடி** ஒன்று திரட்டப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டு மதிப்புடன் **தமிழ்நாடு நான்காம் இடத்தை பிடித்தது.** மேலும், மே 2011



முதல் மே **2015** வரையிலான காலத்தில் தமிழகத்தின் அதிகரிக்கப்பட்ட அந்நிய நேரடி முதலீடு **ரூ.60,620 கோடியாகும் .**

அசோசெம் (ASSOCHAM) பிப்ரவரி **2015** வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, வளர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்த ஒரு ஒப்பீட்டு பகுப்பாய்வு என்ற தலைப்பில், வளர்ச்சிக்கான காரணிகளான பொருளாதாரம், தொழில் வளர்ச்சி ஒருங்கிணைந்த கட்டமைப்பு வசதி, மின்சாரம், சாலைகள், சுகாதாரம், வருவாய் மற்றும் சமபங்கீடு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகிய குறியீடுகளில், ஒன்பது குறியீடுகளில் **எட்டு குறியீடுகளில் முன்னிலை பெற்றுள்ளதால் தமிழ்நாட்டினை, இந்தியாவின் "Best Performing State"** என்று அறிவித்துள்ளது.

இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் (CMIE) வெளியிட்டுள்ள தகவல்களின்படி, மார்ச் **2011**ல் முதலீடு செய்வதற்கு உறுதி செய்யப்பட்ட முதலீடு **ரூ.7,38,233.88 கோடியாக** இருந்தது. இதன் மதிப்பு ஜுன் 2015–ல் **ரூ.9,99,943.80 கோடியாக** அதிகரித்துள்ளது. ஏப்ரல் 2011

முதல் ஜுன் 2015 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடு ஈர்த்துள்ள கூடுதல் முதலீடு **ரூ 2,61,709.92 கோடியாகும்.**

இந்திய அரசின் வணிகம் மற்றும் தொழில் அமைச்சகத்தைச் சேர்ந்த தொழில் கொள்கை – உருவாக்கத்துறையால் (DIPP) வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, தமிழ்நாடு மே 2011 முதல் ஜுன் 2015 வரையிலான காலக்கட்டத்தில் IEM (Industrial Entrepreneurs Memorandum) மூலமாக ரூ.1,33,753 கோடியை திரண்ட முதலீடாக ஈர்த்துள்ளது.

இந்திய ஏற்றுமதி மைய கூட்டமைப்பின் (FIEO) அறிக்கையின்படி 2013–14ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த ஏற்றுமதி ரூ.**2,15,400** கோடி அளவிற்கு உயர்ந்து இந்திய மாநிலங்களுள் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. 2010–2011ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 9 சதவிகிதமாக இருந்த தமிழ்நாட்டின் பங்கு 2014–2015ம் ஆண்டில் 11.58 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

இன்று, அதிக அளவில் தொழில் வளர்ச்சி அடைந்த மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக திகழ்கிறது. மென்பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்ப சேவை இனங்களைத் தவிர, மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரிபாகங்கள் உற்பத்தி,



ஜவுளி, மின்னணு வன்பொருள் உற்பத்தி, தோல் பொருட்கள் உற்பத்தி, கனரக பொறியியல் பொருட்கள் உற்பத்தி ஆகிய பலதரப்பட்ட உற்பத்தி இனங்களுக்கான தலைமையகமாக தமிழ்நாடு விளங்குகிறது.

தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் நிலவுவதாலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நல்லதொரு வரவேற்பு இருப்பதாலும் தமிழ்நாட்டில் முதலீடுகள் அதிகரித்துள்ளன. மே 2011 முதல் இந்நாள் வரை, தமிழக அரசு 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையெழுத்திட்டுள்ளது. இவற்றின் முதலீட்டு அளவு **ரூ 31,706 கோடியாகும்.** இதன் மூலம் **1.62 லட்சம் நபர்களுக்கு** நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு கிடைக்கும். இது தவிர, ஏப்ரல் 2011 முதல் ஜுன் 2015 வரை தொழில் துறையின் கீழ் உள்ள தொழில் வழிகாட்டி மையம் (Guidance Bureau), ஒற்றைச் சாளர முறையின் வாயிலாக 53க்கும் அதிகமான முதலீட்டு திட்டங்கள் வாயிலாக ரூ.**11,391.81 கோடியை** ஈர்த்துள்ளது.

இந்தியாவிலேயே மிக பெரிய தொழில் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு

விளங்குகிறது. தொழில் துறையில் தமிழகத்தை மேலும் வளர்ச்சி பாதையில் பயணிக்க மாநில அரசு **"உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015"–**யினை செப்டம்பர் 09 மற்றும் 10–ல் சென்னை வர்த்தக மையத்தில் நடத்தவுள்ளது. இம்மாநாட்டில் உட்கட்டமைப்பு உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் ஒரு இலட்சம் கோடி அளவிற்கு முதலீட்டினை திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொலைநோக்கு ஆவணம் 2023 (Vision 2023) –ல் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைய இந்த அரசு உறுதிப் பூண்டுள்ளது. தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் மிகுந்த தொழில் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்றாகவும், மற்ற மாநிலங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் விளங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



## 1. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து தொழில் வளாகங்களை அமைத்து தொழில் நிறுவனங்களுக்கு பருவகாலக் கடன் வாயிலாக நிதியுதவியும் வழங்கி வந்தது. கடந்த 2000–ம் ஆண்டு வரை, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொழில் வளாகங்களை உருவாக்கிப் பராமரித்தலோடு அந்நிறுவனங்களுக்கு பருவகாலக் கடன் வாயிலாக நிதியுதவி வழங்கும் பணிகளையும் மேற்கொள்ளும் ஒரு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகமாக செயல்பட்டு வந்தது. எனினும், 2001–ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் தொழில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணியில் அதிக கவனம் செலுத்தும் நோக்கில், தொழில் வளாகங்கள் / பூங்காக்களை உருவாக்கி அவற்றைப் பராமரிப்பு செய்யும் பணியை மட்டும் செய்து வருகிறது. அரசின் வழிகாட்டுதலில் சிப்காட் நிறுவனத்தின் முற்போக்கு செயல்பாடுகளால் திருவாளர்கள் ஹூண்டாய், ரெனால்ட் & நிசான், டேம்லர், செய்ன்ட் கோபைன், சாம்சங், டெல், அசோக் லேலண்ட், குரோத் லிங்க், அப்பலோ டயர்ஸ், மிஷ்லன் டயர்ஸ், இந்தியா

யமஹா போன்ற பல பெருந்தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழிற்கூடங்களை சிப்காட் தொழில் வளாகங்களில் ஏற்கனவே நிறுவியுள்ளதன் காரணமாக மாநிலத்தின் பொருளாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றத்தில் ஒரு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், சிப்காட் நிறுவனம், அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகை வழங்கும் தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாகவும் (Nodal Agency) செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிக முதலீடு மற்றும் பெருமளவு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் பெருந்தொழில், உயர் பெருந்தொழில் மற்றும் மிக உயர்ந்த பெருந்தொழில் நிறுவனங்களுக்கு பல்வேறு ஊக்க நிதியுதவிகள் வழங்கப்படுகிறது.

**1.1. நிறுவன செயல்பாடு**

**1.1.1. தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் / வளர்ச்சி மையங்களை அமைத்தல்**

சிப்காட் நிறுவனம், இதுவரை, மாநிலத்தின் 12 மாவட்டங்களில், கையகப்படுத்தப்பட்ட சுமார் 31,645 ஏக்கர்



நிலப்பரப்பில் 20 தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் / வளர்ச்சி மையங்களை (6 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட) உருவாக்கியுள்ளது. அதில் ஒதுக்கீட்டிற்குரிய 24,115 ஏக்கர் நிலப்பரப்பில் இதுவரையில் 2,275 தொழில் நிறுவனங்களுக்கு, 19,843 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் ரூ.**1,02,283 கோடி** முதலீடும், சுமார் **6.00 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

**1.1.2. புதிதாக உருவாக்கப்படும் தொழில் வளாகங்கள் / பூங்காக்கள்**

தற்போது, 13 புதிய தொழில் வளாகங்கள் / பூங்காக்களை 2015–16 ஆம் ஆண்டில் உருவாக்குவதற்காக கீழ்குறிப்பிட்டுள்ள நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

i ஒரகடம் தொழில் வளர்ச்சி மையம் விரிவாக்கம் - 2 (வைப்பூர் – மாத்தூர்) (616.30 ஏக்கர்)

ii செய்யாறு தொழில் வளாக விரிவாக்கம் (2300.57 ஏக்கர்)

iii மதுரை தொழில் பூங்கா (1478.71 ஏக்கர்)

iv. தூத்துக்குடி தொழில் வளாகம் நிலை–2 (1179.86 ஏக்கர்)
v. திண்டிவனம் தொழிற்பூங்கா (720.27 ஏக்கர்)
vi. மணப்பாறை தொழிற்பூங்கா (திருச்சி மாவட்டம்) (1077.05 ஏக்கர்)
vii. நெமிலி தொழிற்பூங்கா (639.94 ஏக்கர்)
viii. பணப்பாக்கம் தொழிற்பூங்கா (வேலூார் மாவட்டம்) (1112.41 ஏக்கர்)
ix. ஓசூர் தொழில் வளாகம் – நிலை 3 (834.57 ஏக்கர்)
x. சிவகங்கை தொழிற்பூங்கா (1451.28 ஏக்கர்)
xi. விருதுநகர் தொழிற்பூங்கா (2540.40 ஏக்கர்)
xii. இராமநாதபுரம் தொழிற்பூங்கா (224.65 ஏக்கர்)
xiii. ஓசூர் தொழில் வளாகம் – நிலை 4 (1882.36 ஏக்கர்)

**1.1.3. நிலவங்கி**

தொழில் முனைவோர்களுக்கு தேவைப்படும் தொழில் மனையினை உடனடியாக வழங்கும் பொருட்டு சிப்காட் நிறுவனம் நிலவங்கி ஒன்றினை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நில வங்கி தரிசு மற்றும் சாகுபடிக்கு உதவாத நிலங்களை கொண்டு உருவாக்கப்படுகிறது.



இதற்காக வேலூார், கிருஷ்ணகிரி, தருமபுரி, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் பெரம்பலூார் மாவட்டங்களில் சுமார் 12,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்த அரசின் நிர்வாக அனுமதி கோரும் பிரேரணைகள் பல்வேறு நிலைகளில் பரிசீலனையில் உள்ளன.

**1.2. தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி**

தொழில் வளர்ச்சியினை தென் மாவட்டங்களில் ஊக்குவிக்கும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் அறிவித்துள்ளபடி, சிப்காட் நிறுவனம் இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஒன்பது தென்மாவட்டங்களில் 20,650 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் ரூ.25,000 கோடி முதலீடும் சுமார் 1,00,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் உருவாகும். 3,740 ஏக்கர் நிலம் (சிவகங்கை மாவட்டத்தில் 1451 ஏக்கர் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் 2540 ஏக்கர்) தற்போது கையகப்படுத்தப்பட்டு வரும் நிலையில் இதர மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட

நிலங்களை கையகப்படுத்துவது தொடர்பான பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

## 1.3. சிறப்பு ஊக்க உதவித் திட்டங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 7.5.2013 அன்று சட்டமன்றப்பேரவை விதி 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, தென் மாவட்டங்களில் தற்போது உள்ள மற்றும் அமைய உள்ள சிப்காட் தொழிற் பூங்காக்களில் தொழிற்சாலைகளை அமைக்கும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்காணும் சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

1. சிப்காட் நிறுவனத்தால் 50 சதவிகித மானிய விலையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். இம்மானியம் சிப்காட் நிறுவனத்திற்கு அரசால் நேரடியாக திரும்ப அளிக்கப்படும்.

2. நிலம் பத்திர பதிவுக்கான முத்திரைத் தாள் கட்டணத்தில் 100 சதவிகித விலக்கு அளிக்கப்படும்.

3. மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிக்கப்படும்.

4. தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்படும்.



5. மதிப்புக் கூட்டிய வரி அதாவது VAT அடிப்படையிலான சலுகைகள் பெற தற்போது நடைமுறையில் உள்ள குறைந்த பட்ச முதலீட்டுத் தொகையான ரூ. 50 கோடி என்பது 10 கோடி ரூபாயாக குறைக்கப்படும்.

மேற்காணும் சிறப்பு சலுகைகளின் கீழ், சிப்காட் இதுவரையில் தொழில் வளாகங்கள் / தொழில் வளர்ச்சி மையங்களான நிலக்கோட்டை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, மானாமதுரை மற்றும் கங்கை கொண்டானில் 61.26 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது.

## 1.4. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

அன்னிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காகவும், ஏற்றுமதியை அதிகரிப்பதோடு பெருமளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், சிப்காட் நிறுவனம் அதன் தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் கீழ்க்கண்ட ‘குறிப்பிட்ட வகை தொழில் சார்ந்த’ ஆறு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது.

- திருப்பெரும்புதூரில் உயர் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் (541.70 ஏக்கர்)
- ஒரகடத்தில் உயர் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் (347.66 ஏக்கர்)

- பெருந்துறையில் பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் (263.19 ஏக்கர்)
- கங்கைகொண்டானில் போக்குவரத்து பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் (255.00 ஏக்கர்)
- இராணிப்பேட்டையில் பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் (260.00 ஏக்கர்)
- பர்கூரில் கிரானைட் தொழில்கள் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் (379.96 ஏக்கர்)

திருவாளர்கள் டெல் இந்தியா பிரைவேட் லிமிடெட், சான்மினா, நோக்கியா சிமென்ஸ், ஏடிசி டயர்ஸ், விப்ரோ போன்ற பல பெருந்தொழில் நிறுவனங்கள் பெரும் முதலீட்டில் தங்களது தொழிற்கூடங்களை சிப்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் துவக்கியுள்ளன. இதுவரை, 1,024.36 ஏக்கர் நிலம் 45 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 60,241 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 1.5. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தமிழக அரசு இதுவரை 66 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் செய்துகொண்ட 80 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (விரிவாக்கத் திட்டங்கள் உள்பட) மூலம் சுமார் ரூபாய் 83,302 கோடி முதலீட்டுடன் தமிழகத்தில்



தொழில் தொடங்க கையெழுத்திட்டுள்ளது. இவற்றில் 41 நிறுவனங்கள் சிப்காட் தொழில் வளாகங்களிலேயே நிறுவப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். மொத்தம் 41 நிறுவனங்களில் 28 நிறுவனங்கள் தங்களது தொழிற்கூடங்களை சிப்காட் வளாகங்களில் நிறுவி ஏற்கனவே உற்பத்தியை துவங்கிவிட்டன. மற்ற நிறுவனங்களும் தங்கள் தொழிற்கூடங்களை விரைந்து நிறுவி வருகின்றன. புரிந்துணர்வு ஒப்பந்த நிறுவனங்களின் மொத்த முதலீடு ரூ.24,033.20 கோடி ஆகும். இதன் மூலம் 53,585 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்.

## 1.6. தொழில் வளாகங்களில் உட்கட்டமைப்புப் பணிகள்

பெரும் முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும் மாநிலத்தின் வேலைவாய்ப்பைப் பெருக்கும் வகையிலும் 2014–2015 ஆம் ஆண்டில் ரூபாய் 190.57 கோடி மதிப்பீட்டில் சிப்காட் நிறுவனத்தின் தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் சாலைகள், தண்ணீர் வசதி, தெருவிளக்குகள், கழிவுநீர் அகற்று வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று 24.7.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட

அறிவிப்பிற்கிணங்க, **2014–15**ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிப்காட் தொழில் பூங்கா தேர்வாய் கண்டிகையில் ரூ. **51.41** கோடி செலவில் ஒருங்கிணைந்த உட்கட்டமைப்புகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. பிள்ளைபாக்கத்தில் ரூ. **24.47** கோடி செலவில் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. பர்கூரில் உள்நாட்டு கட்டணப்பகுதியில் ரூ. **57.57** கோடியிலும், கிரானைட் தொழில்கள் சார்ந்த சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ரூ.**38.88** கோடியிலும், வல்லம் – வடகாலில் ரூ.**125.23** கோடியிலும், நிலக்கோட்டையில் ரூ.**8** கோடியிலும் மேலும், கங்கைகொண்டானில் ரூ.**6.04** கோடி மதிப்பீட்டிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவல்லாமல், பழைய தொழில் வளாகங்களான கும்மிடிப்பூண்டியில் ரூ.**20.48** கோடியில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இருங்காட்டுகோட்டையில் ரூ.**20.89** கோடியிலும், கடலூரில் ரூ.**4.79** கோடியிலும், மானாமதுரையில் ரூ.**4.67** கோடியிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மொத்தம் ரூ.293.00 கோடிக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளப். இதில், இதுவரை, ரூ.123.63 கோடி அளவிற்கு செலவிடப்பட்டுள்ளது. மீத பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது. **2015–16**ஆம் ஆண்டில் ஒசூரில் ரூ.**20** கோடியிலும், புதுக்கோட்டையில் ரூ.**5.00** கோடியிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது



## 1.7. சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை

சிப்காட் நிறுவனம், கீழ்க்கண்ட தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி சிறப்புத் தொழில் பெருவழிச் சாலைகளை (**Industrial Corridor of Excellence**) உருவாக்குவதற்காக ஆய்வறிக்கை தயாரித்துள்ளது.

1. சென்னை – பெங்களூரு தொழில் பெருவழிச் சாலை (CBIC) : இது மத்திய அரசின் திட்டம் – டிட்கோ இதன் முகவாண்மை செயல் நிறுவனம் (NODAL OFFICE)
2. மதுரை – தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் – சேலம்

இச்சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை, தொழில் துறையில் பின்தங்கிய தென்மாவட்டங்களில் சுற்றுச் சூழலை பாதுகாத்து மேம்பட்ட பொருளாதார மற்றும் தொழில்

வளர்ச்சியை உருவாக்கிட செயல்படுத்தப்பட உள்ளது. இவ்வழித்தடம் தரமான சாலைகள், இரயில் தொடர்பு வசதி, சிறப்பு நிதி பிராந்தியமாகவும் செயல்படுவதோடு மற்ற தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளான நகரியங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், போன்ற பிற வசதிகளையும் பெற்றிருக்கும். இத்திட்டம் பிராந்தியத்தை பகுதிவாரியாக மேம்படுத்துவதாக அமையும்.

இத்திட்டம் 9 லிருந்து 10 ஆண்டுகளில் 40,000 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலமாக ரூபாய் 1,90,000 கோடி தொழில் முதலீட்டை ஈர்க்கும் எனவும் அதனால் 18 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மதுரை–தூத்துக்குடி தொழில் பெருவழிச் சாலைக்கான திட்ட அமைப்பை அரசு அங்கீகரித்துள்ளது. அதன்படி, தமிழ்நாடு கட்டமைப்பு வாரியம் (Tamil Nadu Infrastructure Development Board) உயர்நிலை அமைப்பாகவும், சிப்காட் நிறுவனம் திட்ட ஒருங்கிணைப்பு முகவராகவும் செயல்படும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக சிப்காட் நிறுவனம் மதுரை–தூத்துக்குடி தொழில் பெருவழிச்சாலை மேம்பாட்டுக் கழகம் (Madurai Thoothukudi Industrial Corridor



Development Corporation Limited) என்ற பெயரில் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை ரூ.10.00 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீட்டுடன் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை 17.04.2015–ல் ஏற்படுத்தியுள்ளது. பெருவழிச் சாலைக்கான நில எடுப்பு பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

### 1.8. இருங்காட்டுக்கோட்டையில் ஆயத்த ஆடைப் பூங்கா

சிப்காட் இருங்காட்டுக்கோட்டை தொழிற் பூங்காவில் 123.83 ஏக்கர் நிலப்பரப்பில் ஆயத்த ஆடைப் பூங்கா ஏற்படுத்தப்பட்டு அதில் ஒதுக்கீட்டுக்கான மொத்த நிலமும் 36 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைத் தவிர, பணிபுரியும் பெண்களுக்கான தங்குமிடம், குழந்தைகள் காப்பகம், மருத்துவக்கூடம், வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம், சிற்றுண்டிச்சாலை போன்ற சிறப்பு உட்கட்டமைப்பு வசதிகளும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 1.9. இருங்காட்டுக்கோட்டையில் காலணிப் பொருட்கள் தயாரிக்கும் பூங்கா

சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்காவில் 52.63 ஏக்கர் நிலப்பரப்பில் காலணிப்

பொருட்கள் தயாரிக்கும் பூங்காவினை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை, 13 நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதன் மூலம் சுமார் 750 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

### 1.10. திறன் மேம்பாட்டு மையங்கள்

சிப்காட் நிறுவனம், இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக, திறன் மேம்பாட்டு மையங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் தொழில் வளர்ச்சி மையத்தில் ஒரு திறன் மேம்பாட்டு மையம் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்க் கண்டிகை தொழில் பூங்காவில் ஒரு திறன் மேம்பாட்டு மையம் அமைத்திட முனைந்துள்ளது. இம்மையங்களில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் சிப்காட் தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் உள்ள தொழில் நிறுவனங்களில் வேலைக்கு பரிந்துரைக்கப்படுவர்.

### 1.11. தங்குமிட வசதி

சிப்காட் நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களின் சக்திக்கேற்ற



வகையில் குடியிருப்பினை ஏற்படுத்தும் நோக்கில் அவர்கள் தங்குவதற்காக அனைத்து வசதிகளுடன் கூடிய இரண்டு தங்குமிடங்களை (Dormitories) ஆண்கள் மற்றும் பெண்களுக்காக தனித்தனியாக திருப்பெரும்புதூரில் கட்டி முடித்து பயன்படுத்தி வருகிறது. இதேபோன்று, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தாலுக்காவில் உள்ள நெருப்பெரிச்சல் கிராமத்தில் இரண்டு தங்குமிடங்கள் சுமார் 17 கோடி ரூபாய் செலவில் அமைத்திட முனைந்துள்ளது. இதில் பெண்கள் தங்குமிடத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 1.12. திருப்பெரும்புதூர் தாலுக்காவில் புதிய தொழில் பூங்காக்களுக்கான தண்ணீர் வசதி

தற்போது, சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழில் பூங்காக்களுக்காக செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 5 MGD தண்ணீர் பெற்று வருகிறது. மேற்படி தொழில் பூங்காக்கள் விரிவாக்கம் செய்யப்பட்டதாலும், வல்லம்–வடகால் மற்றும் வைப்பூர்–மாத்தூர் ஆகிய புதிய திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாகவும், சிப்காட் நிறுவனத்தின் தண்ணீர் தேவை 5 MGD லிருந்து 10 MGD ஆக

உயர்ந்துள்ளது. தண்ணீர் தேவையை நிறைவு செய்யும்பொருட்டு சிப்காட் நிறுவனம் 10 MGD கொள்திறன் கொண்ட மூன்றாம் கட்ட சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் பெறும் திட்டத்தை (TTRO plant) சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்துடன் இணைந்து கோயம்பேட்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்திற்கான ஒப்புந்தப் புள்ளிகள் பெறப்பட்டு 2017–ல் இத்திட்டம் நிறைவேற்றப்படும் எனவும், சுத்திகரிக்கப்பட்ட நீர் ஜனவரி 2018–ல் கிடைக்கும் எனவும் சென்னை மாநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1.13. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் அபாயகரமான கழிவுகளை தகுந்த முறையில் மாற்றி வெளியேற்ற அக்கழிவுகளை சுத்திகரித்து, சேமித்து அகற்றும் மிகப்பெரிய திட்டம் கும்மிடிப்பூண்டி ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற்பூங்காவில் 26.91 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு கழிவுகள் மேலாண்மை நிறுவனம் மூலம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இதுபோன்றதொரு திட்டத்தை, தூத்துக்குடி சிப்காட் தொழில் வளாகத்தில்



ஒன்றும் பெருந்துறை சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் மற்றொன்றும் என தலா 20 ஏக்கரில், தொழிற்சாலை கழிவுகள் மேலாண்மை சங்கத்தின் மூலம் செயல்படுத்திட சிப்காட் நிறுவனம் முனைந்துள்ளது. சுற்றுச்சூழல் ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான முன் நுழைவு அனுமதி, தொழிற்சாலை கழிவு மேலாண்மை சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு இடங்களுக்கான சுற்றுசூழல் சான்று, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கை தொழிற்சாலை மேலாண்மை கழிவு சங்கத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

### 1.14. பசுமை தொழிற் பூங்காக்களாக உயர்த்துதல்

சுற்றுச்சூழலை பாதுகாப்பதும், அழிந்துவரும் வனங்களை உயிர்ப்பிப்பதும் அத்தியாவசியம் என்பதை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் உள்ள சிப்காட்டின் 20 தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் உள்ள சாலைகளின் இருபுறமும் 10 மீட்டர் இடைவெளியில் ரூபாய் 5 கோடி செலவில் மரங்களை நட்டு அவற்றை சிறப்பாக பேணி வளர்க்க சிப்காட் முனைந்துள்ளது. அதற்காக, மாநில அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை மற்றும் சிப்காட்

நிறுவனத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது. சிறுசேரி மற்றும் தேர்வாய் கண்டிகை ஆகிய தொழில் வளாகங்களில் 4200 மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### 1.15. நிலத்தடி நீர் மேம்பாடு

24.07.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப்பேரவை விதி 110–ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, சிப்காட் நிறுவனத்தின் மூன்று தொழிற் வளாகங்கள் / பூங்காக்களில் உள்ள நீர்நிலைகளில் நிலத்தடி நீரை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் ரூபாய் 6 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். மேலும் சிப்காட் தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் / வளர்ச்சி மையங்களிலுள்ள 42 கழிவுநீர் தொட்டிகள் ஒவ்வொன்றும் சுமார் ரூ.40 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும். அதன்படி, தூத்துக்குடி, பெருந்துறை, கும்மிடிபூண்டி, நிலக்கோட்டை, மானாமதுரை மற்றும் ஒசூர் (Phase - II) சிப்காட் தொழில் வளாகங்களில் உள்ள கழிவுநீர் குட்டைகளை ரூ.260.33 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்து மழைநீர் சேமிப்பு குட்டைகளாக மாற்றியமைக்க 20.03.2015–ல் நடைபெற்ற



சிப்காட் நிறுவன இயக்குநர் குழும கூட்டத்தில் அனுமதிப் பெற்று வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### 1.16. சிப்காட் இருங்காட்டுக்கோட்டை மற்றும் வல்லம் – வடகால் தொழிற் பூங்காக்களில், சரக்கு வாகன முனையம் (Truck Terminal) ஏற்படுத்துதல்.

போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் நோக்கில் கனரக வாகன முனையம் சிப்காட் தொழில் பூங்கா இருங்காட்டுகோட்டையில் ரூ. 10.50 கோடி மதிப்பில் சிப்காட் சொந்த நிதியில் முதலில் அமைத்து பின்பு ASIDE மானியம் பெற திட்டமிட்டுள்ளது. கனரக வாகனம் முனையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதே போல் சிப்காட் தொழில் பூங்கா கனரக வாகன முனையம் வல்லம் வடகாலில் 10 ஏக்கரில் சுமார் ரூ.10 கோடி மதிப்பில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கட்டுமானப் பணிகள் நவம்பர் 2015–ல் முடிவடையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### 1.17. சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் / கூட்டாண்மை சமூகப் பொறுப்பு செயல்பாடுகள்

சிப்காட் நிறுவனம், அதன் தொழில் வளாகங்களுக்காக நிலங்களை கையகப்படுத்தும்போது, அப்பகுதிகளுக்கு அருகில் உள்ள மக்களுக்கு புதிய பள்ளிக் கட்டடங்கள்

கட்டுதல், தங்குமிடங்கள் கட்டுதல், குடியிருப்புகளுக்கான கழிப்பறை வசதிகள் போன்ற கூடுதல் வசதிகளை சமூக மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களுக்காக, 2014–15 ஆம் ஆண்டில், சுமார் ரூ.4 கோடியை காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளில் வைப்பீடாக செலுத்தியுள்ளது.

## 1.18. தொழில் உட்கட்டமைப்பு தொகுப்பு நிதி

சிப்காட் தொழிற்பூங்காக்கள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்காக, தமிழக அரசின் பங்களிப்பான ரூ.20 கோடி மற்றும் சிப்காட் நிறுவனத்தின் பங்களிப்பு ரூ.80 கோடியை சேர்த்து ரூ.100 கோடியில் "தொழில் உட்கட்டமைப்பு தொகுப்பு நிதியம்" ஒன்றினை இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்த நிதி தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளிருந்து தொழிற் பூங்காக்களுக்கு அணுகு சாலை கட்டுமான பணிகளுக்கும், சிறிய பாலங்கள் கட்டுமான பணிகளுக்கும், இணைப்பு சாலைகள் விரிவாக்கத்திற்கும், மாசு கட்டுப்பாட்டுக்கான பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் புதிய குடிநீர் வசதி உருவாக்குதல் மற்றும் நீர் ஆதாரங்களை கண்டறிதல் ஆகியவற்றிற்காக



பயன்படுத்தப்படும். 28.11.2014–ல் ரூ.80 கோடியை சிப்காட் பங்களிப்பாக செலுத்தப்பட்டுள்ளது.

## 1.19. நிதி செயல்பாடு

சிப்காட் நிறுவனம் 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இலாபம் ஈட்டி வருவதோடு, கடந்த ஆறு ஆண்டுகளாக அரசுக்கு 25 சதவீத ஆதாய பங்குத் தொகையை அளித்து வந்ததோடு 2013–14ஆம் ஆண்டில் 30 சதவீத ஆதாய பங்குத் தொகையான ரூ.17.37 கோடியை அளித்துள்ளது. 2013–14ல் சிப்காட் நிறுவனம் துவக்க ஆண்டான 1971 முதல் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகபட்சமாக ரூ.196.47 கோடியை நிகர இலாபமாக (வரிக்குபின்) ஈட்டியுள்ளது.

## 1.20. முகவாண்மைச் செயல்பாடு (Nodal Agency)

பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அரசின் தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாகவும் (Nodal Agency) சிப்காட் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. அரசாணைகளின் அடிப்படையில், பல்வேறு ஊக்க நிதி உதவிகள் முறையே, அரசுக்கு செலுத்திய மதிப்புக் கூட்டு வரியின் மீது மென்கடன், முதலீடு மேம்பாட்டு

மானியம் (அரசுக்கு செலுத்திய மதிப்புக் கூட்டு வரி திரும்பப் பெறுதல்), முதலீட்டு மானியம், கழிவு நீர் சுத்திகரிப்பு (ETP) வசதிகளை ஏற்படுத்துவதற்கு மானியம், மின்சார வரி திரும்பப் பெறுதல் மற்றும் பயிற்சி மானியம் வழங்கப்பட்டு வருகிறது.



## 2. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), தனியார் தொழில் முனைவருடன் கூட்டு சேர்ந்து பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளை நிறுவி மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசால், 1965ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். மேலும் டிட்கோ தமிழ்நாட்டில் பெரும் முதலீடுகள் மற்றும் மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கும் பெருந்தொழில் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டப் பணிகளை நிறுவுவதற்கும் வழிவகை செய்கிறது.

இரும்பு மற்றும் எஃகு பொருட்கள், கைக்கடிகாரங்கள், மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், ஜவுளி, இரசாயன உரங்கள், பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், மலர் வளர்ப்பு, பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், தோல் பொருட்கள் ஆகியவற்றினை உற்பத்தி செய்யும் கூட்டுத் துறை நிறுவனங்களை டிட்கோ நிறுவனம் நிறுவியுள்ளது. மேலும், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், உயிரி தொழில்நுட்பப் பூங்காக்கள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், வேளாண் ஏற்றுமதி மண்டலம் மற்றும்

சிறப்பு முதலீட்டு மண்டலங்கள் உள்ளிட்ட திட்டங்களில் டிட்கோ முதலீடு செய்து வருகிறது.

டைட்டன் இன்டஸ்டிரீஸ், மகிந்திரா வேர்ல்டு சிட்டி, அசெண்டாஸ் ஐ.டி.பார்க், டைடல் பார்க், டைசல் பயோ பார்க் I & II, ஐ.டி. எக்ஸ்பிரஸ்வே, சென்னை வர்த்தக மையம், தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ், கோயம்புத்தூர் டைடல் பார்க் மற்றும் எல். அன்ட் டி கப்பல் கட்டும் நிறுவனம் போன்றவை டிட்கோவின் சில வெற்றிகரமான கூட்டு நிறுவனங்களாகும்.

இந்நிறுவனத்தின் முதலீட்டு மதிப்புத் தொகையான ரூ.464.23 கோடி பெரும்பாலும் கூட்டுத்துறை நிறுவனங்களில் பங்கு முதலீடுகளாகவும் மற்றும் நடப்புத் திட்டங்களில் முதலீடுகளாகவும் உள்ளது.

டிட்கோ, தற்போது தரமணியில் தகவல் தொழில்நுட்பச் சேவைக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம், திருவள்ளூர் மாவட்டம் எண்ணூரில் திரவ நிலை எரிவாயு முனையம், கடலூரில் பெட்ரோலிய சுத்திகரிப்புத் திட்டம், நாங்குனேரி, பெரம்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், சென்னைக்கு அருகில் வானூர்தி பூங்கா திட்டம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம்



மாவட்டங்களில் இரசாயனப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்களின் முதலீட்டுப் பகுதிக்கானத் திட்டம், ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மேலும், திருவள்ளூர் மாவட்டத்தில் பாலிமர்ஸ் பொருட்கள் உற்பத்தி வளாகத் திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரிய பூங்கா திட்டம், சென்னைக்கு அருகில் கதிர்வீச்சு மூலம் ஒருங்கிணைந்த உணவுப் பதப்படுத்தும் மையத் திட்டம், நாகப்பட்டினத்தில் ஓர் ஆழ்கடல் துறைமுகம் மற்றும் எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் அதனைச் சார்ந்த மிதக்கும் திரவ நிலை எரிவாயு முனையம் அமைக்கும் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் டைசல் உயிரியல் பூங்கா III, செங்கல்பட்டு அருகில் மருத்துவ பூங்காத் திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய முதலீட்டு மற்றும் உற்பத்தி மண்டலம், இராமநாதபுரம் மாவட்டத்தில் சூரிய வெப்பச் சலன முறையில் மின் தயாரிப்பு மற்றும் கடல் நீர் சுத்திகரிப்புத் திட்டம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மின்னணுவியல் உற்பத்தி வளாகம் அமைக்கும் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை டிட்கோ நிறுவனம் எடுத்து வருகிறது.

## 2.1. ட்ரில் இன்ஃபோ பார்க் நிறுவனம்

டிட்கோ, தரமணியிலுள்ள 25.27 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு மையத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டத்தை, டாடா ரியால்டி மற்றும் இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத் துறையில் அமைத்து வருகிறது.

இத்திட்டத்திற்கான திருத்தி அமைக்கப்பட்ட திட்ட மதிப்பு சுமார் ரூ.4,000 கோடி ஆகும். முதற்கட்டமாக, 34 இலட்ச சதுர அடியில் நான்கு கட்டிட அடுக்குகள் கட்டி முடிக்கப்பட்டு, அதில் காக்னிசென்ட், இன்ஃபோஸிஸ், மைண்ட் ட்ரீ, ஹெச்பி, டிசிஎஸ், சிஸ்கோ, விப்ரோ, சிட்டி பேங்க், ஃபிடிலிட்டி, பெர்ஷிங், சைன்டிபிக் பப்லிஷிங் சர்வீஸஸ், சைடெல், ஐநாடிக்ஸ் போன்ற முன்னணி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இரண்டாம் கட்டமாக, 12 இலட்ச சதுர அடியில் கூடுதல் தகவல் தொழில் நுட்ப இடம், ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு மையம் மற்றும் பணி சூழ் தனி அறைகள் ஆகியவற்றிற்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்திற்கான முழுமையான



கட்டுமானப் பணிகள் 2016–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 18000 நபர்களுக்கு நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு உருவாகும்.

## 2.2. வானூர்தி தொழில் பூங்கா

தமிழகத்தில் வானூர்தி தொழில் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் நோக்கில், வானூர்தி வடிவமைப்பு, பொறியியல், உற்பத்தி, சேவை மற்றும் பராமரிப்பு அனைத்தும் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த வானூர்தி தொழில் பூங்காவினை டிட்கோ நிறுவனம் நிறுவி வருகிறது. இத்திட்டத்திற்காக, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை ஒட்டியப் பகுதியில் 50 ஏக்கர் பரப்பளவில் விமானங்கள் பழுதுபார்க்கும் பணிமனை ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், திருப்பெரும்புதூரில் சிப்காட் நிறுவனம் கையகப்படுத்தி உள்ள நிலங்களில் சுமார் 300 ஏக்கர் நிலத்தினை வானூர்திகளுக்கான உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்யும் பொருட்டு ஒரு பிரத்யேக தொழில் பூங்கா அமைக்கும் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாணைக்கு இணங்க, சிப்காட்

நிறுவனம் முதற்கட்டமாக 258 ஏக்கர் நிலத்தை வானூர்தி பூங்கா அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்துள்ளது.

டிட்கோ நிறுவனத்தின் தொடர் முயற்சியால் தற்பொழுது 12 நிறுவனங்களுக்கு இத்தொழில் பூங்காவில் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் 3 நிறுவனங்கள் நில ஒதுக்கீடு கோரி தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன. மேலும், 15 நிறுவனங்கள் இப்பூங்காவில் தங்களது தொழில் பிரிவுகளை அமைக்க ஆர்வம் காட்டியுள்ளன. இந்த 30 நிறுவனங்கள் மூலம் ஏறத்தாழ ரூ.3000 கோடி முதலீடு பெறப்படும் மற்றும் இதன் மூலம் சுமார் 5000 நபர்கள் வேலை வாய்ப்பை பெறுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இப்பூங்காவில் 30 முதல் 40 வானூர்தி தொழில் நிறுவனங்களை 2016 ஆம் ஆண்டுக்குள் நிறுவுவதற்கான முயற்சிகளை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

## 2.3. திரவ நிலை எரிவாயு இறக்குமதி முனையம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் இந்தியன் ஆயில் நிறுவனமும் இணைந்து திருவள்ளூர் மாவட்டம், காட்டுப்பள்ளி கிராமம், எண்ணூர் துறைமுகம் அருகில், சுமார்



ரூ.5170 கோடி முதலீட்டில், திரவநிலை எரிவாயு இறக்குமதி முனையம் ஒன்றினை அமைத்து வருகிறது.

இந்த முனையம் ஆண்டொன்றுக்கு 50 லட்சம் மெட்ரிக் டன் திரவ நிலை எரிவாயுவை பயன்படுத்தி, நாளொன்றுக்கு சுமார் 180 இலட்சம் கனமீட்டர் எரிவாயுவை மாநிலத்தில் உள்ள மின் உற்பத்தி ஆலை, உரத்தொழில் மற்றும் இதர தொழிற்சாலைகள், வீட்டுத் தேவைகள் மற்றும் போக்குவரத்து துறைகளுக்கு விநியோகம் செய்யும். இத்திட்டத்தின் செயல்பாட்டை விரைவுபடுத்துவதற்காக, கடந்த 22.03.2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், டிட்கோவும் இந்தியன் ஆயில் நிறுவனமும் ஒப்பந்தம் செய்துள்ளன.

இத்திட்டத்திற்கான தொழில்நுட்பப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை, இத்திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே எண்ணூர் துறைமுகத்தின் விரிவாக்கத் திட்டங்களுக்காக டிட்கோ வழங்கிய நிலங்களிலிருந்து, சுமார் 130 ஏக்கர் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற இந்தியன் ஆயில் எல்.என்.ஜி

பிரைவேட் லிமிடெட் (Indian Oil LNG Pvt. Ltd,) என்ற கூட்டுத்துறை நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக திரவ நிலை எரிவாயு சேமிப்பு கிடங்குகளின் கட்டுமான பணிகளுக்கான ஆணைகள் இந்தியன் ஆயில் நிறுவனத்தினால் ஜுன் 2015ல் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2018–ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.4. நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின் பெட்ரோலிய சுத்திகரிப்பாலை திட்டம்

டிட்கோவும் நாகார்ஜுனா பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனமும் இணைந்து உருவாக்கிய கூட்டுத்துறை நிறுவனமான நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தினால் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைத் திட்டம் கடலூர் மாவட்டம், திருச்சோபுரத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 120 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும். இதற்கான மொத்த முதலீடு சுமார் ரூ.27,000 கோடி என மதிப்பிடப்பட்டு, பிப்ரவரி, 2015 வரை சுமார் ரூ.8100 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ஆண்டொன்றுக்கு 60 இலட்சம் மெட்ரிக் டன்



உற்பத்தித் திறனுள்ள பிரிவு கட்டி முடிக்கப்பட்டு, 2017ஆம் ஆண்டில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.5. பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி வளாகம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள வாயலூர் கிராமத்தில் சுமார் ரூ.294 கோடி முதலீட்டில் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி வளாகம் ஒன்றினை உருவாக்கி வருகிறது. இவ்வளாகம், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் சுமார் 84 சிறிய மற்றும் நடுத்தர தொழிற்பிரிவுகள் அமைக்க ஏதுவான, சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகள் உடையதாக இருக்கும். இவ்வளாகம் முழுமையாக செயல்படும்போது, சுமார் ரூ.2100 கோடி முதலீட்டை ஈர்க்கும் என்றும், 25,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயன துறையினால் அறிவிக்கப்பட்ட கொள்கையின்படி, இத்திட்டத்திற்கு திட்ட முதலீட்டு செலவில் 50 சதவீதம் வரை ரூ.40 கோடிக்கு மிகாமல் மத்திய அரசிடமிருந்து மானியமாக பெறலாம். இத்திட்டத்திற்கு, மத்திய அரசின் இரசாயனம்

மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறை தமிழகத்தில் நிறுவுவதற்கு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை **13.04.2012** அன்று அளித்துள்ளது. டிட்கோ நிறுவனத்தால் ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் இறுதி ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு டிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனம் இணைந்து ஒரு சிறப்பு நோக்கு நிறுவனத்தை (SPV) அமைப்பதற்கான ஒப்புதலை அரசு அளித்துள்ளது. கடந்த **20.10.2014** அன்று டிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனங்கள் இதற்கான ஒப்பந்தம் செய்துள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு பாலிமர் இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் என்ற கூட்டுத்துறை நிறுவனம் துவக்கப்பட்டுள்ளது.

மேலும், டிட்கோ, பொன்னேரி தாலுக்கா, வாயலூார் மற்றும் காட்டுப்பள்ளி கிராமங்களில் தன்வசமிருந்த சுமார் **306** ஏக்கர் நிலங்களை தமிழ்நாடு பாலிமர் இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் நிறுவனத்திடம் இத்திட்டத்திற்காக ஒப்படைத்துள்ளது. இத்திட்டத்திற்கான மத்திய அரசின் இறுதி



ஒப்புதல் பெறப்பட்டவுடன் இத்திட்டம் முழுவீச்சில் செயல்படுத்தப்படும்.

## 2.6. கிருஷ்ணகிரி சிறப்பு பொருளாதார மண்டலம்

திருவாளர்கள் ஜி.எம்.ஆர். இன்ஃப்ராஸ்டிரச்சர் நிறுவனம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் **2800** ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ.**2,300** கோடி முதலீட்டில் ஒரு பல்பொருள் சிறப்பு பொருளாதார மண்டல திட்டத்தை ஜி.எம்.ஆர் கிருஷ்ணகிரி எஸ்இஇசட் (SEZ) லிமிடெட் என்ற கூட்டுத்துறை நிறுவனம் மூலம் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த ஜி.எம்.ஆர் நிறுவனம் கூட்டுத் துறை நிறுவனத்தின் பெயரில் சுமார் **1300** ஏக்கர் பட்டா நிலங்களை கையகப்படுத்தி உள்ளது. இத்திட்டத்திற்கு உத்தேசித்துள்ள இடங்களை ஒருங்கிணைப்பதற்காக சுமார் **400** ஏக்கர் அரசு நிலங்களை டிட்கோ மூலம் கூட்டுத்துறை நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு, சிறப்பு பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பில் திருத்தம் மற்றும் கொள்கை ரீதியாக மாற்றம் செய்ததினால், தற்போது GMR

நிறுவனம் **2,101.50** ஏக்கர் நிலப்பரப்பில், சில குறிப்பிட்ட துறைகளுக்கான சிறப்பு பொருளாதார மண்டலத்தை உள்ளடக்கிய ஒரு சிறப்பு முதலீட்டு மண்டலத்தை (Special Investment Region) பல கட்டங்களாக செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக, **639.47** ஏக்கர் நிலப்பரப்பில் நுண்ணிய தொழில் நுட்பம், மோட்டார் வாகன தொழில் நுட்பம் மற்றும் மின்னணுவியல் தொழில் நுட்பம் சார்ந்த தொழில்களை செயல்படுத்த இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது.

### 2.7. சென்னை – பெங்களூரு தொழில் வளாக வழி திட்டம்

சென்னை – பெங்களூரு தொழில் வளாக வழி திட்டம், தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் **2023** ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் வளாக வழி திட்டங்களில் ஒன்றாகும். இத்தொழில் வளாகவழி திட்டம் தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை ஆகிய 7 மாவட்டங்கள் வழியே செல்லும் தேசிய நெடுஞ்சாலை - **46**–ன் இருபக்கமும் **75** கிலோ மீட்டர் வரையிலான அகன்ற நிலப்பரப்பில் அமையும்.

இத்தொழில் வளாக வழி திட்டத்தின் இருபுறங்களிலும் பல ஒருங்கிணைந்த சிறப்பு முதலீட்டு பகுதிகள்



உருவாக்கப்படும். இத்தகைய சிறப்பு முதலீட்டு பகுதிகள் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடனும் சாலை மற்றும் இரயில் வழியாக சென்னை, எண்ணூர், காட்டுப்பள்ளி துறைமுகங்களுக்கு சரக்குகள் கொண்டு வருவதற்கான பிரத்தியேக வழித்தடங்களுடனும், மின்சாரம், பொது உள்கட்டமைப்பு வசதிகளுடனும் கூடிய தன்னிறைவுப் பெற்ற தொழில் நகரியங்களாக உருவாக்கப்படும்.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை ஜப்பான் இண்டர்நேஷனல் கோ–ஆபரேஷன் முகமை (JICA) என்ற நிறுவனம் தயாரித்து வருகிறது. இத்தொழில் வளாகத் தடத்தில் பொன்னேரி தொழில் முனையம் உட்பட மூன்று தொழில் முனையங்கள் அமைய வாய்ப்புள்ளதாக கண்டறிந்து தனது அறிக்கையை கடந்த ஜனவரி **2014**–ல் மத்திய அரசிடம் இம்முகமை (JICA) சமர்ப்பித்தது.

பொன்னேரி தொழில் முனையத்தை மேம்படுத்துவது தொடர்பான அறிக்கையை JICA நிறுவனம் ஜுன் **2015**–ல் தமிழக அரசிடமும் மத்திய அரசின் தொழிற் கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையிடமும் சமர்ப்பித்துள்ளது.

**2.8. டைசல் உயிரி தொழில் நுட்பப் பூங்கா – 3, கோயம்புத்தூர்**

கோயம்புத்தூரில் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான 10 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.55 கோடி செலவில் (நிலத்திற்கான செலவினை தவிர்த்து) டைசல் பயோபார்க்–3–யினை டிட்கோ மற்றும் டைடல் பார்க் நிறுவனங்கள் இணைந்து செயல்படுத்தும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 24.7.2014 அன்று சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் அறிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. டைசல் நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் ஆணைப்படி, இப்போதைய முதலீட்டாளர்களிடம் ரூ.40 கோடி ஈட்டுத்தொகை முதலீடாக 27.01.2015 அன்று கோரப்பட்டது. மத்திய அரசின் ASIDE நிதியாக ரூ. 10 கோடி பெற 10.11.2014 அன்று வழிகாட்டி குழுமத்தி்மும் (Guidance Bureau) தமிழ்நாடு உயிரி தொழில் நுட்பக் கொள்கை 2014–ன் கீழ் ரூ.5 கோடி உதவி நிதி பெறுவதற்காக 03.03.2015 அன்று தமிழ்நாடு அரசிடமும் முன்மொழிவு



சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ரூ.10 கோடி ASIDE நிதிக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. உயர் கல்வித் துறையின் அரசாணை (நிலை) எண் 180, உயர்கல்வித் துறை, நாள் 15.10.2014–ன்படி அண்ணா பல்கலைக்கழகம் 10 ஏக்கர் நிலத்தினை டைசல் நிறுவனத்திற்கு 20.11.2014 அன்று ஒதுக்கீடு செய்துள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு சம்பந்தப்பட்ட ஆய்வுக்காக (EIA Study) 21.01.2015 அன்று M/s.ABC Techno Labs India Pvt. Ltd. என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தக் கடிதம் (Letter of Award) வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கட்டட வல்லுநராக M/s. Taamaesek Engineering Consortium நிறுவனம், திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவின் கட்டுமானப் பணி ஜுன் 2018ல் நிறைவு பெற டைசல் நிறுவனம் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

**2.9. மருத்துவப் பூங்கா திட்டம்**

எச்.எல்.எல். லைஃப்கேர் லிமிடெட் என்கிற இந்திய அரசு நிறுவனத்துடன் இணைந்து, காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டுக்கு அருகில் ரூ.130 கோடி திட்ட செலவில் 330

ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு மருத்துவப் பூங்கா திட்டத்தை டிட்கோ செயல்படுத்தும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **24.7.2014** அன்று சட்டமன்ற விதி **110–**ன்கீழ் அறிவித்தார்கள். இந்த மருத்துவ பூங்கா, நாட்டில் முதன்மையான மருத்துவ பூங்காவாக மருத்துவ கருவிகள் மற்றும் உபகரணங்கள் மண்டலம், உயிரி தொழில்நுட்பம், உயிரி தகவல் மண்டலம், அடைகாப்பு வசதி மற்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மண்டலம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் கொண்டு அமையும். இம்மருத்துவப் பூங்கா திட்டத்தினை திருவாளர்கள் எச்.எல்.எல்.லைஃப்கேர் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத்துறையில் செயல்படுத்த, டிட்கோ நிறுவனத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான கூட்டுத்துறை ஒப்பந்தத்தில் கையொப்பமிட மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. டிட்கோ இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

### 2.10. இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம்

மத்திய அரசின் தேசிய உற்பத்தி கொள்கையின் (நவம்பர் 2011) அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு



தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம் ஒன்றினை டிட்கோ நிறுவனம் உருவாக்கும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **24.7.2014** அன்று சட்டமன்றப்பேரவை விதி **110–**ன் கீழ் அறிவித்தார்கள். இந்த முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலத்திற்காக தற்போதுள்ள சாலை மற்றும் இரயில் போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்படும். மேலும் தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் தண்ணீர் தேவைக்காக கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் ஒன்றும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மேம்பாட்டு வசதிகளை இம்மண்டலத்தில் உருவாக்குவதற்கு சுமார் ரூ.**6525** கோடி முதலீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்களிப்பு சுமார் ரூ.**6375** கோடி எனவும் மாநில அரசின் பங்களிப்பு சுமார் ரூ.**150** கோடி எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. மத்திய அரசின் தேசிய உற்பத்தி கொள்கையில் தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலங்கள் உருவாக்க விவரிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில், இம்மண்டலம் முறையாக அறிவிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளில் செயல்படும்.

தமிழக அரசு, மேற்குறிப்பிட்ட தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் உருவாக்குவதற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை மத்திய அரசிடமிருந்து கடந்த பிப்ரவரி 2015–ல் பெற்றுள்ளது. இம்மண்டலத்தை உருவாக்குவதற்காக ஒரு திட்ட அறிக்கையை டிட்கோ நிறுவனம் செப்டம்பர் 2015–ல் தயாரித்து முடிக்கும். இம்மண்டலத்தை உருவாக்குவதற்கான இறுதி ஒப்புதலை பெறுவதற்கு மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றுதம் மேம்பாட்டுத் துறையிடம் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

### 2.11. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வாலிநோக்கத்தில் சூரிய வெப்பச் சலன முறையில் மின் தயாரிப்பு மற்றும் கடல் நீர் சுத்திகரிப்புத் திட்டம்

50 மெகாவாட் திறன் கொண்ட சூரிய வெப்ப சலனமுறை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்துடன் 15 எம்.எல்.டி கடல் நீர் சுத்திகரிப்புத் திட்டம் ஒன்றை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடலாடி வட்டம் வாலிநோக்கத்தில் உள்ள உப்பு உற்பத்தி வளாகத்தில் டிட்கோ நிறுவனம் உருவாக்கும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர்



அவர்கள் 24.7.2014 அன்று சட்டமன்றப்பேரவை 110–ன் கீழ் ஒரு அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பு உற்பத்தி வளாகத்தின் ஒரு பகுதியான சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு சுமார் ரூ.1,500 கோடி முதலீடு தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் 30 சதவீதம் மூலதனப் பங்காகவும், 70 சதவீதம் கடன் தொகையாகவும் இருக்கும். இத்திட்டத்திற்காக, டிட்கோ நிறுவனம் குறைந்தவட்டியில் நிதி ஆதாரம் பெறுவதற்காக ஜெர்மன் டெவலப்மென்ட் வங்கியை (German Development Bank) அணுகியதன்பேரில், இவ்வங்கியானது டிட்கோ நிறுவனத்தின் முன்மொழிவை பரிசீலனைச் செய்ய தனது விருப்பத்தினை தெரிவித்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த ஆலோசகர் நிறுவனம் மூலம் விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிக்கும் பணியையும் டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. திட்ட அறிக்கை செப்டம்பர் 2015–ல் தயாரித்து முடிக்கப்படும்.

## 2.12. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மின்னணுவியல் உற்பத்தி வளாகம் அமைக்கும் திட்டம்

டிட்கோ நிறுவனம் ஜி.எம்.ஆர் இன்ஃப்ராக்ஸ்டெக்சர் நிறுவனத்துடன் (GIL) இணைந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.920 கோடி திட்ட செலவில் சுமார் 527 ஏக்கர் நிலப்பரப்பில் மின்னணுவியல் உற்பத்தி வளாகத் திட்டம் ஒன்றை உருவாக்கும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 24.7.2014 அன்று சட்டமன்றப்பேரவை விதி 110–ன் கீழ் அறிவித்தார்கள். இந்த மின்னணுவியல் உற்பத்தி வளாகம் அறிவுசார் மையம், பல்திறன் மேம்பாட்டு மையம், உற்பத்திக்கு ஆதரவாக செயல்படும் மையம், பன்னாட்டு கருத்தரங்கு மையம் மற்றும் தொழிலாளர் விடுதி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

மத்திய அரசு கொள்கை அளவில் சில மாற்றங்களை செய்து இருப்பதால், தற்போது ஜி.எம்.ஆர். நிறுவனம் முதற்கட்டமாக, 100 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 198.50 கோடி மதிப்பீட்டில் உத்தேசித்துள்ள சிறப்பு முதலீட்டு மண்டலத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. மேலும், வெளிச்சந்தையில் தேவைகளுக்கேற்ப இது பின்னர் விரிவுப்படுத்தப்படும். இந்த சிறப்பு முதலீட்டு மண்டலத்தில்



அமைய உள்ள நிறுவனங்கள் மத்திய அரசின் திருத்திய சிறப்பு முதலீட்டு தொகுப்பு சலுகைகளைப் பெற்று பலனடைய முடியும்.

## 3. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாக கொண்டு, செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்க தமிழக அரசால் 1979ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கரூர் மாவட்டம், புகளூரில் இந்நிறுவனத்தின் காகித ஆலை அமைந்துள்ளது. இந்த ஆலையின் உற்பத்தி, ஆண்டொன்றுக்கு 90,000 மெ.டன் உற்பத்தித் திறனுடன், 1985ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆலையின் ஆண்டு உற்பத்தித்திறன் நான்கு கட்டங்களில் 4,00,000 மெ.டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆலையின் காகிதக் கூழ் உற்பத்தித் திறனும், நாளொன்றுக்கு 250 மெ.டன்னிலிருந்து, படிப்படியாக 1,180 மெ.டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 3.1. குறிக்கோள்

**“புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, உலகத்தரம் வாய்ந்த, சுற்றுச்சூழலுக்கு உகந்த, காகிதங்களைத் தயாரிப்பதில் முதன்மை நிறுவனமாகத் திகழுதல்”.**

இந்நிறுவனம், உலகிலேயே கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாக உபயோகப் படுத்துவதில் முதலிடத்தையும், இந்தியாவில் அச்சு மற்றும் எழுது காகித உற்பத்தியில்



இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. இந்நிறுவனத்தில் தமிழக அரசு 35.32 விழுக்காடு பங்கும், தமிழ்நாடு அரசுசார்ந்த நிறுவனங்கள் 4.06 விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள், பரஸ்பர நிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் வசமும் உள்ளது.

இந்நிறுவனம், காகிதம் உபயோகிப்பாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப, பல்வேறு வகையான உயர்ரக காகிதங்களைத் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம், தனது உற்பத்திப் பொருளை இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருவதோடு சுமார் 18 சதவீத உற்பத்திப் பொருளை உலகளவில் 40 நாடுகளுக்கு மேல் ஏற்றுமதி செய்து வருகிறது.

இந்நிறுவனம், 35.5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவி உள்ளது. மேலும், சுய தேவைக்காக மொத்தம் 103.62 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி பிரிவுகளை ஆலைக்குள் நிறுவியுள்ளது. ஆலையின் தேவைக்குப்பின் மீதமுள்ள 10 மெகாவாட் உபரி மின்சாரம் நடப்பாண்டில் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிறுவனம், நாளொன்றுக்கு 300 மெ.டன் உற்பத்தித் திறன் கொண்ட, உபயோகப்படுத்திய காகிதங்களிலிருந்து, மைநீக்கம் செய்யப்பட்ட காகிதக்கூழ் தயாரிக்கும் பிரிவினை 2013ஆம் ஆண்டில் நிறுவியுள்ளது.

இந்நிறுவனம் காகிதத் தயாரிப்பில் உருவாகும் திடக் கழிவுகளான சுண்ணாம்பு கழிவு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, நாளொன்றுக்கு 600 மெ.டன் உற்பத்தித் திறன் கொண்ட, சிமெண்ட் தொழிற்சாலையை 2013ஆம் ஆண்டில் ஆலையின் வளாகத்திற்குள் நிறுவியுள்ளது.

**3.2. 2014–15 ஆம் ஆண்டில் உற்பத்தி மற்றும் பயன்பாட்டளவு**

2014–15ஆம் ஆண்டின் மொத்த உற்பத்தி 3,73,259 மெ.டன்னாகும். உற்பத்தி பயன்பாட்டளவு 93.3 விழுக்காடாகும்.

**3.3. 2014–15 ஆம் ஆண்டிற்கான விற்பனை மற்றும் இலாபம்**

2014–15ஆம் ஆண்டின் விற்பனை ரூ.2152.37 கோடி மற்றும் வரிக்கு முன் இலாபம் ரூ.230.13 கோடி ஆகும். கடந்த



ஆண்டின் வரிக்கு முன் இலாபமான ரூ.202.68 கோடியை விட இது கூடுதலாகும்.

**3.4. ஈவுத்தொகை**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் திறமையாகவும் இலாபகரமாகவும் இயங்கி, தனது பங்குதாரர்களுக்குத் தொடர்ந்து ஈவுத் தொகையை அளித்து வருகிறது. 2012–13 ஆம் ஆண்டில் நிறுவனம் 50 விழுக்காடு ஈவுத் தொகையை வழங்கியுள்ளது. 2013–14 ஆண்டிற்கான ஈவுத்தொகை விகிதத்தை 60 விழுக்காடாக நிறுவனம் உயர்த்தியுள்ளது. இதன்படி, இந்நிறுவனம் தமிழக அரசுக்கு 2013–14ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகையாக ரூ.14.66 கோடியினை வழங்கி உள்ளது.

**3.5. ஏற்றுமதி**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதியில், இந்நிறுவனம் இந்தியாவில் முதன்மையாகத் திகழ்கிறது. 2014–15 ஆம் ஆண்டில், 72,815 டன் அளவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

### 3.6. வேலை வாய்ப்பு

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2,126 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினையும் ஏறத்தாழ 3,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளித்து வருகிறது.

### 3.7. 2014–15 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

1. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், நாளொன்றுக்கு 100 டன் உற்பத்தித்திறன் கொண்ட ஈரப்பதம் உள்ள நுண்ணிய கால்சியம் கார்பனேட் (Wet Ground Calcium Carbonate) ஆலையை Build – Own – Operate (BOO) என்ற முறையில் (கட்டுதல், சொந்தமாக்குதல், செயலாக்குதல்) ஆலையின் வளாகத்திற்குள் நிறுவி உள்ளது.

2. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், நாளொன்றுக்கு 200 மெ.டன் உற்பத்தித் திறன் கொண்ட வீழ்படிந்த கால்சியம் கார்பனேட் (Precipitated Calcium Carbonate) ஆலையை Build – Own - Operate என்ற முறையில் (கட்டுதல், சொந்தமாக்குதல், செயலாக்குதல்) ஆலையின் வளாகத்திற்குள் நிறுவி உள்ளது.



### 3.8. 2015–16 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள்

1. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் திறன் கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்குகாகித அட்டை தயாரிக்கும் ஆலையினை, திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி, மணப்பாறை தாலுக்கா, மொண்டிப்பட்டி வருவாய் கிராமத்தில் மற்றும் அதைச் சுற்றியுள்ள வறட்சியான பகுதியில், 874 ஏக்கர் நிலப்பரப்பில், ரூபாய் 1500 கோடி முதலீட்டில் நிறுவி வருகிறது. இத்திட்டத்தின் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டம், 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவு செய்யப்படும். இந்த ஆலை, வறட்சி மிகுந்த பகுதியில் அமைக்கப்படுவதால், இப்பகுதியின் பொருளாதாரம் மேம்படும். இந்த ஆலையின் மூலம், 2000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்த அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் இயந்திரம், இந்தியாவிலேயே அதிக உற்பத்தித் திறன் கொண்டதாகவும், மிகவும் நவீனமானதாகவும் இருக்கும். இத்திட்டம் நிறைவு பெறும் போது, இந்நிறுவனத்தின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெ.டன்னிலிருந்து, 50 சதவிகிதம் உயர்ந்து, 6 இலட்சம் மெ.டன்னாக இருக்கும். இதனால், இந்திய அளவில், இந்நிறுவனத்தின் மொத்த உற்பத்தி நான்காம் இடத்திலிருந்து மூன்றாம் இடத்திற்கு உயரும்.

2. இந்நிறுவனத்தின் சிமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறன் தற்போது நாளொன்றுக்கு 600 மெட்ரிக் டன்னிலிருந்து 900 மெட்ரிக் டன்னாக ரூபாய் 30 கோடி செலவில் விரிவாக்கப்படும். இத்திட்டத்தினை டிசம்பர் 2015–க்குள் நிறைவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. கரூர் மாவட்டம், மாயனூரில் 38.40 ஏக்கர் பரப்பளவில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையிலிருந்து, மதிப்பு



கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் மையம் ஒன்றினை ரூ.40 கோடி செலவில் அமைத்து வருகிறது. இந்த மையத்தில், காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையிலிருந்து, நோட்டுப் புத்தகம், பாடபுத்தகம், சிறிய அட்டை பெட்டி தயார் செய்தல் போன்ற, காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டை உற்பத்தி செய்யும் 15 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட உள்ளது. இத் திட்டத்தை டிசம்பர் 2015–க்குள் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மையத்தின் மூலம், சுமார் 500 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

4. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மென்பொருள் தொழில் நுட்பப் பிரிவின் (Information Technology section) சேவை மையத்தை (server) தற்போதைய தேவைக்கு ஏற்ப ரூ.12 கோடி செலவில் மேம்படுத்தும். இத்திட்டத்தை டிசம்பர் 2015க்குள் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.9. கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (Corporate Social Responsibility)

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தனக்கான சமுதாய பொறுப்பு கொள்கைகளை வரையறுத்துள்ளது. இதன்படி, ஒவ்வொரு ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டில் ஈட்டிய நிகர இலாபத்தில் 2 சதவிகிதத் தொகையை, தொழிற்சாலையை சுற்றிலும் உள்ள பகுதிகளில் கல்வி, குடிநீர், மருத்துவ வசதி, தொழில் பழகுநர் பயிற்சி திட்டம், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் இதர பணிகளுக்காக இந் நிறுவனம் செலவிடுகிறது. 2014–15 ஆம் ஆண்டில் சமுதாய நலப்பணிகளுக்காக ரூ 3.72 கோடி செலவிட்டுள்ளது.

## 3.10. விருதுகள்

1. மும்பையிலுள்ள Dun & Bradstreet வியாபார தகவல் நிறுவனம், காகித உற்பத்தி துறையில், “இந்தியாவின் முதன்மையான ஆலையாக” **(Top Indian company under the sector Paper)** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை தொடர்ந்து மூன்றாவது முறையாக



தேர்ந்தெடுத்து “Dun & Bradstreet Corporate Award 2014”–ஐ வழங்கியுள்ளது.

2. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், “சிறந்த உற்பத்திச் செலவு மேலாண்மைக்கான தேசிய விருது 2013”–ஐ, “பெரிய தனியார் உற்பத்தி நிறுவனங்கள்” என்ற பிரிவின் கீழ் முதன்மை விருதைப் பெற்றுள்ளது. இந்த தேசிய விருது, நிறுவனம் சிறந்த உற்பத்திச் செலவு மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொண்டதற்காக, இந்திய உற்பத்திச் செலவு கணக்காயர்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

3. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2013–14 ஆம் ஆண்டிற்கான, இந்திய காகித உற்பத்தி கூட்டமைப்பினால் (IPMA - Indian Paper Manufacturers Association) இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை வழங்கப்படும் “ஆண்டின் சிறந்த காகித ஆலை” என்ற உயரிய விருதினை பெற்றுள்ளது. இதற்கு முன்பு 2011–12 ஆம் ஆண்டிற்கான இந்த உயரிய விருதினையும் இந்நிறுவனம் பெற்றுள்ளது.

## 4. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

**1949** ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் சர்க்கரை, சிமெண்ட், ஜவுளி, ஜவுளி இயந்திரம், காகிதம் மற்றும் அலுமினியம் போன்ற பல முக்கிய தொழில் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இந்நிறுவனம் விளங்குகிறது. நாட்டில் மாநில நிதி கழகங்களின் (SFC) முன்னோடியான இக்கழகம் குறு, சிறு, நடுத்தர, பெருந் தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் சேவை நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கி வருகிறது. இக்கழகம் தொழிற்கடன் வழங்கும் தனது செறிந்த அனுபவத்தினால் பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி உதவிகள் அளித்து, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை ஊக்குவித்து வருகிறது. இக்கழகம் அளித்து வரும் மொத்த நிதி உதவியில் **90** விழுக்காடுக்கு மேலாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் மொத்த நிதி உதவியில் **40** விழுக்காடு முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கும் வழங்கப்படுகிறது.



இந்நிறுவனம் **31.3.2015** வரை **1,17,817** நிறுவனங்களுக்கு ரூ.**13,100.64** கோடி கடன் உதவி வழங்கியுள்ளது. **31.03.2015** தேதி நிலவரப்படி, இந்நிறுவனம் வழங்கியுள்ள கடன் நிலுவைத் தொகை ரூ.**1,670.27** கோடியாகும்.

தமிழக அரசின் தொடர்ந்த ஆதரவினாலும் மற்றும் இக்கழக பணியாளர்களின் குவிந்த முயற்சியாலும், இக்கழகம் **2003 – 2004** ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடந்த **12** வருடங்களாக சிறப்பான முறையில் நிகர இலாபம் ஈட்டி வருகிறது. மேலும் **2014–15**–ஆம் நிதியாண்டில் ரூ.**25.73** கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டியது. **2013–14** ஆம் நிதியாண்டில், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் பங்குகளில், இக்கழகம் முதலீடு செய்ய, தமிழக அரசு ரூ.**37.50** கோடி நிதியுதவி வழங்கியது. அரசால் வழங்கப்பட்ட இந்தத் தொகை இக்கழகத்தில் அரசின் பங்கு மூலதனமாக **2014–15** ஆம் நிதியாண்டில் மாற்றப்பட்டது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தால் இக்கழகத்திற்கு ரூ.**35.82** கோடி மதிப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட **59,70,126** பங்குகளின் சந்தை மதிப்பு, தற்போது ரூ.**41.52** கோடியாக உயர்ந்துள்ளது.

### 4.1. பங்கு மூலதனம்

**31.03.2015** அன்றுள்ளவாறு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பங்கு மூலதனம் **ரூ.321** கோடியாகும். அதன் விவரம் பின்வருமாறு :

(ரூ.கோடியில்)

| **பங்குதாரர் (Share holder)** | **பங்கு மூலதனம் (Share Capital)** | |
|---|---|---|
| | (ரூ.கோடியில்) | விழுக்காடு (%) |
| தமிழ்நாடு அரசு | 303.52 | 94.55 |
| இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) | 17.00 | 5.30 |
| புதுச்சேரி மாநில அரசு | 0.15 | 0.05 |
| காப்பீட்டுக்கழகங்கள், வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் | 0.33 | 0.10 |
| மொத்தம் | **321.00** | **100.00** |

### 4.2. திட்டங்கள்

தொழிற்சாலைகளின் பல்வேறு தேவைகளை / வேண்டுதல்களை பூர்த்தி செய்யும் வண்ணம் தமிழ் நாடு தொழில் முதலீட்டு கழகத்தால் செயல்படுத்தப்படும் சில



திட்டங்கள். புதிய தொழிற்சாலை தொடங்க, ஏற்கனவே இயங்கும் தொழிற்சாலைகளை விரிவாக்க, பொது காலக்கடன், தமிழக அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS), தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், குறு மற்றும் சிறு தொழில் நிறுவன நிதித் திட்டம், காற்றாலைக் கடன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் / தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் – பட்டியல் நிதியுதவித் திட்டம், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட சேவை நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனத் திட்டம். சில சிறப்புத் திட்டங்கள் பின்வருமாறு :

### 4.2.1. (i) பொது காலக்கடன் (General Term Loan)

இக்கழகம், புதிய உற்பத்தி மற்றும் சேவை துறைகளில், தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கும், நவீனமாக்குவதற்கும் உற்பத்தியை பன்முனைப்படுத்துவதற்கும், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்குகிறது.

பொது / தனி வரையறுக்கப்பட்ட நிறுமங்களுக்கு காலக்கடன் ரூ.30 கோடி வரையிலும் மற்றும் தனி உரிமையாளர் / கூட்டாண்மை நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூ.15 கோடி வரையிலும் வழங்கப்படும். தொழில் முனைவோரின் பங்களிப்பு மொத்தத் தொழில் மதிப்பீட்டில் 33.33 சதவீதமாகும். கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம், திட்டங்களின் அடிப்படையில் 7 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம். முதல் 6 மாதங்களிலிருந்து 2 ஆண்டுகள் வரை அசல் தொகையினை தவிர்த்து வட்டியை மட்டும் செலுத்தும் சலுகை வழங்கப்படுகிறது.

### 4.2.2. (ii) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur cum Enterprise Development Scheme - NEEDS)

படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்டு 2012–13 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழக அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், தொழில் முனைவோருக்கு திட்ட மதிப்பீட்டின் உச்சவரம்பு ரூ.1



கோடிக்கு மிகாத தொழில்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிகபட்சமாக ரூ. 25 இலட்சம் மூலதன மானியமாக மாநில அரசு வழங்கும். மேலும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் வட்டியில் 3 சதவீதம் தள்ளுபடியும் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோரின் பங்களிப்பு சிறப்பு பிரிவினருக்கு 5 சதவீதமாகவும், மற்ற பிரிவினருக்கு 10 சதவீதமாகவும் உள்ளது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

### 4.2.3. (iii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (Entrepreneurs Development Scheme)

இந்நிறுவனம், பொருளாதாரம் மற்றும் சமுதாய அடிப்படையில் பின்தங்கிய சூழ்நிலையிலிருந்து வரும் துணைப் பிணையம் அளிக்க இயலாத புதிய தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் விதமாக "Entrepreneurs Development Scheme" (EDS) என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காட்டினை தொழில் முனைவோரின் மூலதனமாகக் கொண்டு ரூ.5 இலட்சம் வரை பிணையமில்லாமல், ஒன்று

அல்லது இரண்டு நபர்களின் உத்தரவாதத்துடன், நிறுவனம் நிர்ணயத்துள்ள வரம்புக்குட்பட்டு கடன் வழங்கப்படும்.

### 4.2.4.(iv) போக்குவரத்து வாகனக்கடன் (Transport Operators Scheme)

பொது உபயோகத்திற்கான சரக்குப் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் வழித்தட உரிமம் உள்ள பயணிகள் பேருந்துகள் ஆகியவை வாங்க கடனுதவி வழங்கப்படும். தொழில் முனைவோரின் பங்களிப்பு 15–லிருந்து 30 சதவீதமாகும்.

### 4.2.5. (v) இயந்திர நிதியுதவித் திட்டம் (Equipment Finance Scheme)

நடைமுறையில் நன்றாக செயல்படும் நிறுவனங்களுக்கு, இயந்திரம் வாங்குவதற்கு இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கப்படும். திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காட்டினை தொழில் முனைவோர் தங்கள் பங்காக அளிக்க வேண்டும். இது தொழில் முனைவோருக்கு பயனுள்ளதாக இருக்கும்.



### 4.2.6. (vi) மின்னாக்கிகள் வாங்குவதற்கான கடன் திட்டம் (Generator Loan Scheme)

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) இத்திட்டத்தின் கீழ் மின்னாக்கிகள் வாங்குவதற்கு கடன் வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து 07.12.2012 முதல் இத்திட்டத்தின் கீழ் 25 சதவீதமாக இருந்த தொழில் முனைவோரின் பங்களிப்பு, 10 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. மின்னாக்கி கடன்களை தொழில் முனைவோர் மேலும் எளிதாக பெறுவதற்கேற்ப, பிணைச் சொத்து விதிகளையும் இந்நிறுவனம் தளர்த்தியுள்ளது.

### 4.2.7. (vii) காற்றாலைத் திட்டம் (Wind Power Project)

தொழில் முனைவோர்கள் காற்றாலைகளை நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்து அதனைத் தமது தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதோடு அல்லாமல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடம் விற்பனை செய்யவும் இத்திட்டத்தின் கீழ் நிலம், துணைக் கருவிகள், மின் கருவிகள் வாங்குவதற்கும் மற்றும் காற்றாலைகள் நிறுவுவதற்கும் கடன் வழங்கப்படும்.

### 4.2.8. (viii) நவீன அரிசி ஆலைகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனத் திட்டம் (Working Capital Term Loan for Manufacturing units / Rice Mill units)

இயங்கி வரும் நவீன அரிசி ஆலைகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் நடைமுறை மூலதனத் தேவைகளை இத்திட்டம் நடைமுறைக் காலக் கடன் மூலம் பூர்த்தி செய்யும். இத்திட்டம் தொழில் நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் அரிசி ஆலைகளிலிருந்தும் சிறந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.1.50 கோடி வரை கடனுதவி அளிக்க இயலும். பொதுவாக இந்த நடைமுறை காலக்கடனை 42 மாத தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

### 4.2.9. (ix) பட்டியல் நிதியுதவித் திட்டம் (Bill Financing Scheme)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் / தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ஆகியவற்றின் சிறு குறு மற்றும் நடுத்தர ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் நிதியுதவியினை வழங்கும் பொருட்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்நிறுவனங்களுடன்



புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் பகுதி / முழு நேர வேலைக்கான சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவன ஒப்பந்ததாரர்களும் இத்திட்டத்தின் மூலம் பிணைய சொத்து ஏதுமின்றி எளிதான விதிமுறைகளின் கீழ் இந்த பட்டியல் நிதியுதவி திட்டத்தில் விரைவில் கடன் பெறலாம்.

## 4.3. மானியம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநில அரசு மற்றும் மத்திய அரசு வழங்கும் கீழ்க்காணும் மானியங்களுக்கான முகவராக செயல்பட்டு வருகிறது.

### 4.3.1. தமிழக அரசின் மானியம்

**i) பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்**

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பின்தங்கிய வட்டாரங்களிலும், சிப்காட் / சிட்கோ தொழிற்பேட்டைகளிலும் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மீது 25 சதவீதம் அதாவது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை

மானியமாக வழங்கப்படும். தொழிற்சாலை விரிவாக்கத்திற்காக வாங்கப்படும் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பு 25 சதவீதம் கூடுதலாகவும் மற்றும் மூன்று ஆண்டுகளின் சராசரி விற்பனையை விட 25 சதவீதம் கூடுதலாக இருக்கும்பட்சத்தில் தொழிலை மேற்கொண்டு விரிவுபடுத்தவும் இந்த மானியம் வழங்கப்படுகிறது. 2014–15ஆம் ஆண்டில் இக்கழகம் மாநில மூலதன மானியமாக (State Capital Subsidy) ரூ.10.10 கோடி பட்டுவாடா செய்துள்ளது.

### ii) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்ட மானியம்

இந்த திட்டத்தின் மூலம் 2014–15ஆம் ஆண்டில், இக்கழகம் மூலதன மானியமாக (Capital Subsidy) ரூ.5.48 கோடி மானியம் பட்டுவாடா செய்துள்ளது.

### iii) மின்னாக்கி மானியம்

19.03.2012 முதல் 125 KVA திறன் கொண்ட மின்னாக்கிகளுக்கு வரை மானியம் என்றிருந்ததை மாற்றி 320 KVA வரை திறன் கொண்ட மின்னாக்கிகளுக்கு இயந்திர விலையில் 25 சதவீதம் மானியமாக, அதாவது அதிகபட்சமாக



நிறுவனம் ஒன்றுக்கு ரூ.1.5 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இக்கழகம், 31.03.2015 வரை 384 நிறுவனங்களுக்கு ரூ.4.65 கோடி மின்னாக்கி மானியம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

### iv) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டித் தள்ளுபடி வழங்கும் திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் 03.09.2012லிருந்து கடன் பெறும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டி தள்ளுபடி வழங்கும் அரசு திட்டத்தின் மூலம், 31.03.2015 வரை ரூ.1585.01 கோடி கடன் அனுமதிக்கப்பட்டு, 3,686 நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. தமிழக அரசு இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்கிறது.

### 4.3.2. மத்திய அரசின் மானியம்

மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மத்திய அரசு வழங்கும் மானியங்களுக்கான முகவராக செயல்பட்டு வருகிறது.

### i) கடன் சார்ந்த மூலதன மானியம் (Credit Linked Capital Subsidy)

- ஒரு நிறுவனத்திற்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மீது 15 சதவீதம் மானியம் அதாவது அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும்.

2014–15ஆம் ஆண்டில் மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையிடம் இருந்து கடன் சார்ந்த மூலதன மானியத் திட்டத்தின் (Credit Linked Capital Subsidy Scheme) கீழ், இக்கழகம், 103 நிறுவனங்களுக்கு ரூ.6.20 கோடி பட்டுவாடா செய்துள்ளது.

### ii) ஜவுளி மேம்பாட்டு நிதி மானியம் (Textile Upgradation Fund Subsidy)

#### அ) வட்டி மானியம் மற்றும் மூலதன மானியம்

நெசவு பதனிடுதல், ஆயத்த ஆடைகள் (ரெடிமேடு) மற்றும் நூற்பாலை, தொழில் நுட்பமுடைய நெசவு மற்றும் நாடா



இல்லா புதிய நெசவுத்தறி (New shuttleless loom weaving units) போன்ற ஜவுளி துறை பிரிவுகளுக்கு, குறிப்பிட்ட வகை இயந்திரங்களுக்கு 2%/5%/6% வட்டி மானியம் மற்றும் 10%/15% மூலதன மானியம் வழங்கப்படும். குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் அல்லாத நிறுவனங்களுக்கும் இச்சலுகை மத்திய அரசினால் வரையறைக்கு உட்பட்டு வழங்கப்படும்.

#### ஆ) விளிம்பு தொகை உதவி மானியம் (Margin Money Assistant Subsidy)

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME), பொருத்தும் விசைத்தறி இயந்திரங்களுக்கும் மற்றும் நூற்பாலை, நெசவு பதனிடுதல், ஆயத்த ஆடை, பின்னலாடை, நெசவு, சணல் பிரிவு, ஜமுக்காளம் தயாரிப்பு ஆகிய ஜவுளித் தொழில்களுக்கும் 8%/15%/30% விளிம்பு தொகை மானியம் (Margin Money Subsidy) குறிப்பிட்ட வகை இயந்திரங்களுக்கு வழங்கப்படும். இச்சலுகை மத்திய அரசினால் வரையறைக்கு உட்பட்டு வழங்கப்படும்.

2014–15ஆம் நிதியாண்டில் 31 நிறுவனங்கள் (வட்டி மற்றும் மூலதன மானியம்) பொருட்டு எழும்பிய ரூ.119.98

இலட்சத்திற்கான உரிமை கோரிக்கைகள் (Claims) மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 31–03–2015 வரை இத்திட்டத்தின் கீழ் வட்டி மானியமாக ரூ.44.75 இலட்சம் வழங்கப்பட்டது.

### iii) உணவு பதனிடும் தொழிலுக்கான மானியம் (Food Processing Industries Subsidy)

தகுதியுடைய முதலீட்டுக்கு இம் மானிய விதிமுறைகளின்படி 25 சதவீத மானியம், அதிகபட்சமாக ஒரு நிறுவனத்திற்கு ரூ.50 லட்சம் வரை வழங்கப்படும்.

### 4.4. காப்பீடு

கடந்த மூன்று ஆண்டுகளாக இக்கழகம் காப்பீட்டு முகவராக செயல்படத் தொடங்கியது. காப்பீடு வர்த்தகம் மூலம் 2014–15ஆம் ஆண்டில் ரூ.15.49 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

### 4.5. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் – தொழில் முனைவோர் அதிகம் விரும்பும் நிதிக் கழகம்

வர்த்தக வங்கிகளிடமிருந்து கடும் போட்டி இருப்பினும் முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள், கிராமப்புறங்களில் வசிக்கும் தொழில் முனைவோர்கள், மற்றும்



சமூக ஆதரவு குறைந்த தொழில் முனைவோர்கள் ஆகியோர்களின் முன்னுரிமை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமே. இதற்கு இக்கழகத்தின் வெளிப்படையான நடைமுறை / செயல்பாடு, விரைந்து கடன் வழங்குதல், கடன் திருப்பிச் செலுத்துவதற்கு நீண்ட காலத் தவணை மற்றும் தொழில் முனைவோர் கடன் மற்றும் மானியத்தை ஓர் இடத்திலேயே பெறுவதற்கு ஏதுவாக இயங்குவது போன்றவையே காரணங்களாகும்.

### 4.5.1. சாதனைகள்

இக்கழகத்தின் முக்கிய செயல்பாடுகளான கடன் அனுமதித்தல், வழங்குதல் மற்றும் வசூலித்தல் ஆகிய துறைகளில் மே 2011 முதல் 31.03.2015 வரையிலான காலத்தில் சாதனைகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

| செயல்பாடுகள் | 11.05.2011 – 31.03.2015 வரை (தோராயமாக) |
|---|---|
| கடன் அனுமதித்தது (பட்டியல் நிதியும் சேர்த்து) | 4451.36 |
| கடன் வழங்கியது | 3700.50 |
| கடன் வசூலித்தது | 4058.97 |

### 4.5.2. 2014–15 ஆம் நிதியாண்டின் செயல்பாடு

(ரூ. கோடியில்)

| விபரம் | எய்தப்பட்ட சாதனை 2013–2014 | இலக்கு 2014–15 | எய்தப்பட்ட சாதனை 2014–15 |
|---|---|---|---|
| கடன் அனுமதி தொகை | 1236.87 | 1500 | 1478.15 |
| கடன் வழங்கும் தொகை | 1021.64 | 1300 | 1220.18 |
| கடன் வசூல் தொகை | 1106.91 | 1266 | 1320.85 |

2014–15ஆம் நிதியாண்டில், இக்கழகம் அளித்த நிதியுதவியில் 60 சதவீதம் பொறியியல்/ மோட்டார் வண்டி பாகங்கள், ஜவுளி, பிளாஸ்டிக் மற்றும் உணவு பதனிடும் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 4.5.3. 2015–16 மற்றும் 2016–17 ஆம் ஆண்டுகளுக்கான தொழில் கடன் வழங்குவதற்கான செயல் திட்டங்கள்

(ரூ. கோடியில்)

| வருடம் | கடன் அனுமதி தொகை | வழங்கக் கூடிய தொகை | வசூல் செய்யக் கூடிய தொகை |
|---|---|---|---|
| 2015–16 | 1600 | 1400 | 1300 |
| 2016–17 | 1700 | 1500 | 1400 |



## 5. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) 1976 பிப்ரவரி 11 ஆம் தேதி தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) ஒரு துணை நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. டிட்கோ நிறுவனம் வைத்திருந்த மூலதனப் பங்குகளை அரசுக்கு மாற்றிவிட்டதால், அதன் தொடர்ச்சியாக 1994ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம், அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

### 5.1. டான்செம் நிறுவனத்தின் ஆலைகள்

1. அரியலூர் சிமெண்ட் ஆலை, அரியலூர் மாவட்டம்
2. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, ஆலங்குளம், விருதுநகர் மாவட்டம்
3. தமிழ்நாடு கல்நார் ஆலை (துகடு), ஆலங்குளம், விருதுநகர் மாவட்டம்
4. தமிழ்நாடு கற்குழாய் ஆலை, விருத்தாசலம், கடலூர் மாவட்டம்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், மேற்கண்ட ஆலைகள் மூலம் சிமெண்ட் மற்றும் சிமெண்ட் சார்ந்த பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

இந்நிறுவனத்தின் ஆண்டு செயல்பாட்டு வருவாய் (Annual Turn Over) ரூ.250 கோடி ஆக உள்ளது. குத்தகை மற்றும் சொந்த நிலங்களின் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி சிமெண்ட் உற்பத்தி செய்து, அரசுத் துறை நிறுவனங்களுக்கு, குறிப்பாக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், கல்வித் துறை, கூட்டுறவுத் துறை போன்ற துறைகளுக்கும் சலுகை விலையில் சிமெண்ட் வழங்கி வருகிறது.

மாநிலத்தின் பின்தங்கிய மாவட்டங்களான விருதுநகர் மற்றும் அரியலூரில் மாவட்டங்களில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

இவையல்லாமல், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறைக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து சிமெண்ட் கொள்முதல் செய்து கொடுப்பதிலும், பல்வேறு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் கீழ் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான சிமெண்டினைக் குறிப்பிட்ட



காலத்திற்குள் விநியோகம் செய்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்புப் பணியிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது.

ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்திய "அம்மா சிமெண்ட் விற்பனைத் திட்டத்தின்" மூலம் பயனாளிகளுக்கு மிகக் குறைந்த விலையில் சிமெண்ட் கிடைக்கும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றின் கிட்டங்கிகளின் மூலம் தொடர்ந்து விநியோகம் செய்வதற்கு தேவையான ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் வெற்றிகரமாக செயலாற்றி வருகிறது.

### 5.1.1. அரியலூர் சிமெண்ட் ஆலை

அரியலூர் சிமெண்ட் ஆலை 1979 ஆம் ஆண்டு உலர்பத தொழில் நுட்பத்தில் (Dry Process) ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெ.டன் உற்பத்தி திறனுடன் உருவாக்கப்பட்டது. இந்த ஆலைக்கு சொந்தமாக 1952 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட கள்ளங்குறிச்சி மற்றும் ஆனந்தவாடி ஆகிய இரண்டு சுரங்கங்கள் உள்ளன.

அரியலூரில் தற்போது 234 நிரந்தரப் பணியாளர்கள் பணியில் உள்ளனர். 450 ஒப்பந்த தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர்.

### 5.1.2. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) 1969 ஆம் ஆண்டு ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெ. டன் ஆண்டு உற்பத்தித் திறனுடன் ஈரப்பத தொழில் நுட்பத்தில் (Wet process) துவக்கப்பட்டது. டான்செம் நிறுவனம் 1976 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட போது, ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை தன் வசம் எடுத்துக்கொண்டது. 2003 ஆம் ஆண்டிலிருந்து ஒரு கிளிங்கர் சூளை இயக்காமல் நிறுத்தப்பட்டதால் ஆலையின் தற்போதைய உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மெ.டன்னாக உள்ளது. ஈரப்பத தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதன் காரணமாக உற்பத்தி செலவு உலர்பத தொழில்நுட்பத்தை விட சுமார் 30 முதல் 40 விழுக்காடு வரை அதிகரித்ததால் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து ஒரு சில வருடங்களைத் தவிர ஏனைய ஆண்டுகளில் இவ்வாலை தொடர்ந்து நட்டத்தை ஈட்டி வருகிறது. தற்போது இவ்வாலையில் 170 நிரந்தரப் பணியாளர்களும் 140 ஒப்பந்த தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர்.



### 5.1.3. தமிழ்நாடு கல்நார் தகடு ஆலை, ஆலங்குளம்

டான்செம் நிறுவனம், ஆலங்குளத்தில் 1981 ஆம் ஆண்டு கல்நார் தகடு ஆலை ஒன்றை அமைத்தது. தற்போது அதனுடைய உற்பத்தித் திறன் 28,800 மெட்ரிக் டன் ஆகும். இதனுடைய முக்கிய மூலப்பொருட்கள் கல்நார் இழை மற்றும் சிமெண்ட் ஆகும். தற்போது இவ்வாலையில் 65 பணியாளர்கள் பணியில் உள்ளனர்.

### 5.1.4. தமிழ்நாடு கற்குழாய் ஆலை, விருத்தாசலம்

அரசின் வழிகாட்டுதலின்படி, 1989 ஆம் ஆண்டு, டான்செம் நிறுவனம் டாசெல் நிறுவனத்திடமிருந்த கற்குழாய் ஆலையை தன்னுடன் இணைத்துக் கொண்டது. ஆலையின் ஆண்டு உற்பத்தித் திறன் 5400 மெ.டன் ஆகும். தற்போது இவ்வாலையில் 11 பணியாளர்கள் பணியில் உள்ளனர்.

## 5.2. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் வணிக செயல்பாடுகள்

### 5.2.1. அம்மா சிமெண்ட் விற்பனை திட்டம்

ஏழை மற்றும் நடுத்தரவர்க்க மக்கள் தங்கள் சொந்த வீடு கட்டும் போது ஏற்படும் துயர்களைத் துடைக்கும் பொருட்டு, திருச்சி மாவட்டம், திருவரங்கத்தில் 05.01.2015

அன்று தமிழக அரசு அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டம் மூலம் சிமெண்ட் மூட்டை ஒன்றுக்கு ரூ.190/– என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், இத்திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள 470 இடங்களில் உள்ள கிட்டங்கிகளுக்கு விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு சலுகை விலையில் மூட்டை ஒன்றுக்கு ரூ.190/– என்ற விலையில் வழங்குவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

இத்திட்டத்தின்படி, பொதுமக்கள் வீடு பழுது பார்க்க மற்றும் புதுப்பிக்க குறைந்தது 10 மூட்டைகள் முதல் அதிகபட்சமாக 100 மூட்டைகள் வரை பெற்றுக்கொள்ளலாம். 1500 சதுர அடிக்கு உட்பட்டு புதிய வீடு கட்டுபவர்கள், அதிகபட்சமாக 750 மூட்டைகள் வரை பெற்றுக்கொள்ள இயலும்.

இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் செயல்படுகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் துணை முகமைகளாக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும்



பஞ்சாயத்து ராஜ் துறை தங்களின் கிட்டங்கிகள் முறையே 220 மற்றும் 250 மூலமாக செயல்படுத்துகின்றன. இத்திட்டம் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 29.08.2015 வரை 7,02,152 மெட்ரிக் டன் (1,40,43,040 மூட்டைகள்) சிமெண்ட் கொள்முதல் செய்யப்பட்டு 6,74,936 மெட்ரிக் டன் (1,34,98,720 மூட்டைகள்) விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 5.2.2. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறைக்கு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மூலம் விநியோகிக்கப்படும் சிமெண்ட் மற்றும் தனியார் உற்பத்தியாளர்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் சிமெண்ட்டின் விபரம்

தமிழக அரசால் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சி திட்டங்களுக்கு ஆண்டுக்கு சுமார் 12 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட் தேவைப்படுகிறது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழக அரசு நிர்ணயித்த விலையில் ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய 4 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட்டை விநியோகம் செய்து வருகிறது. மீதமுள்ள தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்

ஒப்பந்தப்புள்ளி மூலமாக குறைந்த விலையில் சிமெண்ட் கொள்முதல் செய்து வழங்குகிறது.

**2011–12** முதல் **2015–16** (ஜுலை **2015** வரை) சிமெண்ட் விநியோகம் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

(மெட்ரிக் டன்னில்)

| **ஆண்டு** | **மொத்தம்** |
|---|---|
| 2011–12 | 6,22,848 |
| 2012–13 | 16,47,474 |
| 2013–14 | 11,87,821 |
| 2014–15 | 9,38,364 |
| 2015 ஜுலை வரை | 3,21,550 |

**5.2.3. குறைந்த விலையில் அரசுத் துறைகளுக்கு நேரடியாகவும் மற்றும் அரசுத் துறை ஒப்பந்ததாரர்களுக்கு சிமெண்ட் விற்பனை பற்றிய விபரம்**

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் ஆண்டு தோறும் அரசு நிர்ணயிக்கும் விலையில் அரசு துறைகளுக்கு சிமெண்ட் விநியோகம் செய்வதோடு, ஒப்பந்ததாரர்கள் முழு பணிபொறுப்பு அடிப்படையில் (Turn Key) செயல்படுத்தும்



திட்டங்களுக்கு பொதுப்பணித் துறையால் நிர்ணயிக்கப்படும் விலையில் சிமெண்ட் விநியோகம் செய்து வருகிறது.

(மெட்ரிக் டன்Qல்)

| ஆண்டு | சிமெண்ட் |
|---|---|
| 2011–12 | 62,128 |
| 2012–13 | 51,910 |
| 2013–14 | 25,601 |
| 2014–15 | 18,947 |
| 2015 ஜுலை வரை | 5,534 |

**5.2.4. திறந்தவெளிச் சந்தையில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மூலம் சிமெண்ட் விற்பனை பற்றிய விபரம்**

மாநிலத்திலுள்ள பொது மக்களுக்கு பயன்படும் வகையில், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அதனுடைய அரியலூர் மற்றும் ஆலங்குளம் ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட்டினை திறந்த வெளிச் சந்தையில் முகவர்கள் மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்து

வருகிறது. இதன் மூலம் சிமெண்ட் விலையை கட்டுப்படுத்த இயலும்.

(மெட்ரிக் டன்Qல்)

| ஆண்டு | சிமெண்ட் |
|---|---|
| 2011–12 | 22,381 |
| 2012–13 | 1,12,464 |
| 2013–14 | 1,80,499 |
| 2014–15 | 2,47,303 |
| 2015 ஜூலை வரை | 1,30,709 |

திறந்தவெளிச் சந்தையில் பொது மக்களுக்கு குறைந்த விலையில் சிமெண்ட் கிடைக்கும் பொருட்டு, விற்பனையை மேலும் அதிகரிக்கவும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**5.3. சாதனைகள்**

**5.3.1. பசுமை மேம்பாடு திட்டத்தின் கீழ் மரம் வளர்ப்பு திட்டம்**

சிமெண்ட் உற்பத்தியினால் ஏற்படுகின்ற மாசுகளை கட்டுப்படுத்த மரம் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் அரியலூர் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைகளின் சுரங்கப்



பகுதிகளில் நீலகிரி தைல (Eucalyptus) மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

**அ) அரியலூர் சிமெண்ட் ஆலை**

1999 ஆம் ஆண்டு தமிழக வனத்துறையுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் 2,13,040 மரக்கன்றுகள் கள்ளங்குறிச்சி சுரங்கப்பகுதியில் 133.15 ஹெக்டேர் நிலப்பரப்பில் நடப்பட்டுள்ளன. அதேபோல் 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் கள்ளங்குறிச்சி மற்றும் ஆனந்தவாடி சுரங்கப்பகுதிகளில் 2,61,220 மரக்கன்றுகள் 105.75 ஹெக்டேர் நிலப்பரப்பில் நடப்பட்டுள்ளன.

**ஆ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை**

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை சுரங்கப் பகுதிகளில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் மொத்தம் 1,135 ஏக்கரில் 11,35,000 நீலகிரி தைல (Eucalyptus) மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும் இனிவரும் காலங்களில் தமிழ்நாடு

சிமெண்ட்ஸ் நிறுவனம் மிக பெரிய அளவில் மரம் வளர்ப்பு திட்டத்தை விரிவு படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

**5.4. ஆலை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்டங்கள்**

பணியாளர்களுக்கு சீருடைகள், பாதுகாப்பு காலணிகள், மழை பாதுகாப்பு உடை (Rain Coat) கண் மற்றும் காது பாதுகாப்பு கவசங்கள் மற்றும் டவல், வெல்லம், தேங்காய் எண்ணெய், மற்றும் சோப்பு ஆகியவை வழ*f*கப்பட்டு வருகிறது. டான்செம் நிறுவனம் மேலும் தனது பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதிகள், இலவச சுத்திக்கரிக்கப்பட்ட குடிநீர், மருந்தக வசதிகளுடன் கூடிய முழுமையான மருத்துவ வசதி மற்றும் பணியாளர்களின் குழந்தைகளுக்காக அனைத்து வசதிகளுடன் கூடிய மூன்று மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் நிறுவப்பட்டு தரமான கல்வி வழங்கப்பட்டு வருகிறது.



**5.5. 2015–16 மற்றும் 2016–17 ஆண்டுகளுக்கான செயல் திட்டங்கள்**

**5.5.1. அரியலூர் சிமெண்ட் ஆலை விரிவாக்கம்**

ரூ.542.52 கோடி செலவில் அரியலூர் சிமெண்ட் ஆலையின் உற்பத்தி திறனை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெ.டன்னிலிருந்து 15 இலட்சம் மெ.டன்னாக உயர்த்தும் விரிவாக்கத் திட்டத்திற்கான அரசாணை 14.8.2014 அன்று வெளியிடப்பட்டு தற்பொழுது ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. வரும் செப்டம்பர் மாத இறுதியில் இவ்வேலைகளுக்கான பணி ஆணை வழங்கப்படும். விரிவாக்கப் பணிகள் பணி ஆணை வழங்கப்பட்ட நாளில் இருந்து 20 முதல் 22 மாதங்களில் நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5.5.2. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை நவீனமயமாக்கல்**

2011–12 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், ரூ.165 கோடி செலவில் ஆலங்குளம் ஆலை நவீனப்படுத்தப்படும் என அரசு அறிவித்தது. பல்வேறு நிலையில் நவீனமயமாக்கும் திட்டம் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் ஒரு அங்கமாக சுரங்க மேம்பாட்டு

செலவினங்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்டு விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்டச் செலவினம் 20 சதவீதம் கூடுதலாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. சுண்ணாம்பு கல் இருப்பு, சுரங்க செலவினங்கள், டான்செம் நிறுவனத்தின் நிதி நிலைமை மற்றும் அது தொடர்புடைய காரணிகளை ஆராய்ந்தப் பின் ஆலை நவீனமயமாக்கும் பணி தொடங்கப்படும்.

### 5.5.3. சுற்றுச்சூழல் நிர்வகிப்பு

மத்திய மற்றும் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியங்களின் அளவு கோல்களுக்கு ஏற்ப அரியலூர் சிமெண்ட் ஆலையில் உள்ள கிளிங்கர் சூளை–I மற்றும் சூளை–II ஆகியவற்றிற்கு இரண்டு புகை சுத்திகரிப்பான்கள் RABH (Reverse Air Bag House) ரூ.16.11 கோடியில் நிறுவுவதற்கான பணி ஆணை அல்ஸ்டாம் (M/s.Alstom) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. முக்கிய இயந்திரங்கள் அரியலூர் ஆலையை வந்தடைந்தன. இத்திட்டத்தின் அனைத்து பணிகளும் அக்டோபர் 2015 க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



### 5.5.4. புதிய பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பணியமர்த்தல்

ஏற்கனவே நவீனமயமாக்கும் பணி தொடங்கப்பட்ட நிலையில் அதன் தேவைக்கு ஏற்ப தொழில் நுட்பம், செயல் பிரிவு, பண்டக சாலை, உற்பத்தி மற்றும் பராமரிப்பு மற்றும் சுரங்கம் ஆகிய பிரிவுகளில் உள்ள பணியாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, குழு அமைக்கப்பட்டு அதனடிப்படையில் தேவைப்படுகின்ற பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரை பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.5.5. விற்பனை விரிவாக்க கொள்கை

டான்செம் நிறுவனம் தற்பொழுதுள்ள விற்பனை பகுதிகளை விரிவாக்கம் செய்து ஏற்கனவே உள்ள முகவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி உற்பத்தியாகின்ற சிமெண்டினை வெளிச்சந்தையில் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது. எனவே புதிய முகவர்கள் நியமனம் செய்தல் மற்றும் விற்பனைக்கான விளம்பர யுக்திகளை மேற்கொண்டு சிமெண்ட் விற்பனையை அதிகப்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மொத்த சிமெண்ட் தேவை சுமார் 209 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். இதில் தமிழ்நாடு தனியார் உற்பத்தியாளர்களின் மூலம் 145.60 (69.65%) இலட்சம் மெட்ரிக் டன்னும் அண்டை மாநில உற்பத்தியாளர்களின் மூலம் 55.80 (26.53%) இலட்சம் மெட்ரிக் டன்னும், டான்செம் டன்னும், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மூலம் 1.60 (0.80%) இலட்சம் மெட்ரிக் டன்னும், சிமெண்ட் விநியோகம் செய்யப்பட்டு தமிழ்நாட்டின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. 2014–15ம் நிதியாண்டில் சிமெண்ட் தரத்திற்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தி, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தை ஒரு முன்னோடி நிறுவனமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



## 6. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

உப்பு உற்பத்தியில் குஜராத்திற்கு அடுத்த இரண்டாவது மிகப் பெரிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இந்தியாவில் ஆண்டொன்றுக்கு சுமார் 230 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் மொத்த உப்பு உற்பத்தியில் சுமார் 11 சதவீதம் அதாவது 26 இலட்சம் டன் உப்பு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஒன்று மட்டுமே இந்திய அளவில் மாநில அரசுக்கு சொந்தமான உப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனமாகும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், வாலிநோக்கம் கிராமத்தில் பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தி அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் வேலை வாய்ப்பு தேடி அண்டை மாவட்டங்களுக்கு செல்வதை தடுக்கும் நோக்கில் 1974 ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. மேலும் 5520 ஏக்கர் நிலத்தினை நீண்ட கால குத்தகை அடிப்படையில் அரசு இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. இந்நிறுவனம் வாலிநோக்கத்தை சுற்றி

அமைந்துள்ள சுமார் **15** கிராமங்களை சேர்ந்த **1350** தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளது.

### 6.1. நிறுவனத்தின் குறிக்கோள்

மிகவும் பின்தங்கிய இராமநாதபுர மாவட்ட பகுதியினை மேம்படுத்திட, உத்வேகம் அளித்தல், நலிந்த பிரிவினருக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி வழங்குவதன் வாயிலாக அவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல், கடல் வளத்தினை முழுமையாக பயன்படுத்தி உப்பு மற்றும் உப்பை அடிப்படையாக கொண்டுள்ள கடல் சார்ந்த வேதிப் பொருட்களை உற்பத்தி செய்தல், பள்ளி செல்லும் மாணவர்கள், மகளிர் மற்றும் பொது மக்களிடையே பரவலாக காணப்படுகின்ற நுண் ஊட்டச்சத்து அதாவது இரும்பு மற்றும் அயோடின் சத்து குறைபாடுகளை களையும் பொருட்டு, அயோடின் கலந்த மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை வழங்குதல்.

### 6.2. நிறுவனத்தின் செயல்பாடுகள்

#### 6.2.1. "அம்மா" உப்பு வெளிச்சந்தையில் அறிமுகம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **11.06.2014** அன்று பொது மக்கள் பயன்பெறும் வகையில் மூன்று வகை



அம்மா உப்புக்களான சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு **(ரூ.10)** இருவித செறிவூட்டப்பட்ட உப்பு **(ரூ.14)** மற்றும் குறைந்த அளவு சோடியம் உள்ள உப்பு **(ரூ.21)** ஆகியவற்றை தரத்துடன் குறைந்த விலையில் விற்பனை செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இது போன்ற உப்புகளை தனியார் உப்பு நிறுவனங்கள் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த உப்பு கிலோ ரூ.**14** முதல் ரூ.**21** வரைக்கும், இருவித செறிவூட்டப்பட்ட உப்பு கிலோ ரூ.**21–க்கும்** மற்றும் குறைந்த அளவு சோடியம் உள்ள உப்பு கிலோ ரூ.**25க்கும்** வெளிச்சந்தையில் விற்பனை செய்து வருகின்றன.

அம்மா உப்பிற்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளதால் தமிழ்நாடு உப்பு நிறுவனம் அனைத்து மாவட்டங்களுக்கும் மொத்த விற்பனை விநியோகஸ்தர்களை நியமனம் செய்து 29.8.2015 வரை சுமார் **6,760 மெ. டன்** அம்மா உப்பினை விற்பனை செய்துள்ளது.

பொது மக்களிடையே அயோடின் கலந்த கல் உப்பிற்கும் மிகுந்த வரவேற்பு உள்ளதால் தமிழ்நாடு உப்பு நிறுவனம் "அம்மா உப்பு" திட்டத்தின் கீழ் 2014 நவம்பர் மாதத்திலிருந்து

கல் உப்பு கிலோ ரூ.8 என்ற குறைந்த விலையில் வெளிச்சந்தையில் விற்பனை செய்து வருகிறது.

பொது மக்கள் பயன் பெரும் பொருட்டு, மேற்கண்ட மூன்று வகையான "அம்மா" உப்பினை, தமிழக அரசு பிப்ரவரி 2015 முதல் அனைத்து நியாய விலை கடைகளிலும் வழங்கி வருகின்றது.

மேலும், அம்மா உப்பினை இந்தியா முழுவதும் விற்பனை செய்யும் பொருட்டு டெல்லி, குஜராத், இராஜஸ்தான், மகாராஷ்ட்ரா, பஞ்சாப், கர்நாடகா, கேரளா, ஆந்திர பிரதேசம், ஹரியானா மற்றும் உத்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் விற்பனை செய்ய தமிழ்நாடு உப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அம்மா உப்பினை 5 கிலோ மற்றும் 25 கிலோ பைகளிலிட்டு உபயோகிப்பவர்களுக்கு வசதியாக மருத்துவமனைகள், விடுதிகள் மற்றும் உணவகங்களுக்கு வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

### 6.2.2. தொழிற்சாலைகளுக்கு உகந்த உப்பு தயாரித்தல்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஆண்டிற்கு சுமார் 1.75 இலட்சம் டன் தொழிற்சாலைக்கு உகந்த நல்ல தரமுடைய உப்பினை உற்பத்தி செய்கிறது. இந்நிறுவனம் உற்பத்தி



செய்கின்ற உப்பு, தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் அமைந்துள்ள இரசாயன தொழிற்சாலைகளால் தரமுடையதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இந்நிறுவனம் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைக்குகந்த உப்பிற்கு மிகப் பெரிய அளவில் சந்தை வாய்ப்புக்கள் உள்ளது.

### 6.2.3. கூடுதல் பகுதி மேம்படுத்துதல்

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம், மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில், 2320 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்பட்டு, 2014–15–ம் ஆண்டிலிருந்து அப்பகுதியில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. கூடுதலாக மேம்படுத்தப்பட்ட இப்பகுதியுடன் சேர்த்து, மொத்தமுள்ள 5500 ஏக்கர் நிலப்பரப்பினை பயன்படுத்தி உப்பு உற்பத்தி மேற்கொள்வதன் மூலம் வருங்காலங்களில் உப்பு உற்பத்தி 3 இலட்சம் மெ.டன்னாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

### 6.2.4. உப்புக் கழுவும் இயந்திரம் நிறுவுதல்

இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தில் உள்ள மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் ஒரு மணி நேரத்திற்கு 100 மெ.டன் திறனுடைய உப்புக் கழுவும் இயந்திரம் நிறுவும் பணிகள் நடைப்பெற்று வருகின்றது. இதன் மூலம்

உற்பத்தி செய்யப்படும் உப்பின் தரத்தினை மேம்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

### 6.2.5. உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவுதல்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், உற்பத்தி செய்கின்ற உப்பைக் கொண்டு அதன் மதிப்பு கூட்டப்பட்ட பொருளாகிய சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பொருட்டு ரூபாய் 563 இலட்சம் மதிப்பீட்டில் உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவ உள்ளது. இந்த தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு சுமார் 40,000 மெ.டன் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு உற்பத்தி செய்யப்படும். ஒப்பந்தப் பணிகள் முடிந்து உப்பு சுத்திகரிப்பு ஆலை அமைக்கும் பணி திருவாளர்கள் ஸ்ரீராம் இன்ஜினியரிங், தூத்துக்குடி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை அமைக்கும் பணி 2015–16ஆம் நிதியாண்டுக்குள் நிறைவு பெறும்.

### 6.2.6. செறிவூட்டப்பட்ட உப்பு (Fortified Salt)

தமிழ்நாடு உப்பு நிறுவனம், துவங்கிய காலத்திலிருந்து தொழிற்சாலைக்கு உகந்த உப்பினை உற்பத்தி செய்தது.



நாளடைவில், அதன் உற்பத்தி நடவடிக்கைகளை விரிவுப்படுத்தி அயோடின் கலந்த உப்பு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு (தூள் மற்றும் கல் உப்பு வடிவில்) ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகிறது. மேலும், இந்நிறுவனம் இரும்பு சத்து கலந்த உப்பினை உற்பத்தி செய்வதற்கான இயந்திரத்தினை 1987ல் நிறுவி, இரும்பு சத்து கலந்த உப்பு உற்பத்தியில் ஒரு முன்னோடி நிறுவனமாக திகழ்கிறது. தற்போது, தமிழ்நாடு, கர்நாடகம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களுக்கு பொதுமக்கள் மற்றும் பள்ளி செல்லும் மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு பொது விநியோகத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டத்திற்கு செறிவூட்டப்பட்ட உப்பினை வழங்கி வருகிறது.

### 6.2.7. இரும்புச் சத்து கலந்த உப்பு (Iron Fortified Salt)

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழக அரசின் சுகாதாரத் துறையுடன் இணைந்து, இரும்புச்சத்து குறைபாட்டினை நிவர்த்தி செய்வதில் கடந்த 22 ஆண்டுகளாக செயலாற்றி வருகின்றது. தமிழ்நாடு உப்பு நிறுவனம், ஐதராபாத்திலுள்ள தேசிய ஊட்டச் சத்து மையம் (NIN) உருவாக்கிய அளவீட்டின்படி, இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பினை தமிழக

அரசின் மதிய உணவுத் திட்டத்திற்கு 1991 ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகின்றது.

### 6.2.8. அயோடின் கலந்த உப்பு (Iodised Salt)

தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த உப்பினை அத்தியாவசியமான உணவு பொருளாக பொது விநியோக திட்டத்தில் வழங்குவதற்கான அரசின் ஆணையினை பெற்று வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களிடையே காணப்படும் அயோடின் பற்றாக் குறையால் உண்டாகும் நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு, கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தின் எல்லா பகுதிகளிலும் குறிப்பாக மலைப் பிரதேசங்கள் உள்பட அயோடின் கலந்த உப்பினை குறைந்த விலையில் வழங்கி வருகிறது.

இதன் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள், அயோடின் கலந்த உப்பு உபயோகிப்பவரின் சதவிகிதம் உயர்ந்ததில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் மிகப்பெரிய பங்காற்றியுள்ளது.

அயோடின் கலந்த உப்பினை தொடர்ந்து பயன்படுத்துவதால் பின்வரும் நோய்களை கட்டுப்படுத்திட இயலும்.



அ. முன்கழுத்து கழலை நோய்
ஆ. மனச்சிதைவு
இ. கற்பதில் குறைபாடு
ஈ. சமனற்ற மூளை செயல்பாடு
உ. உடல் வளர்ச்சி குன்றுதல்
ஊ. கருச்சிதைவு
எ. குழந்தை இறப்பு (அல்லது) குழந்தை இறந்து பிறத்தல்
ஏ. செவிடு மற்றும் வாய் பேச முடியாமை
ஐ. தைராய்டு சுரப்பியின் செயல்திறன் குறைதல்

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் அயோடின் கலந்த உப்பின் விற்பனை தற்போது ஆண்டொன்றுக்கு 30,000 மெ. டன் அதிகரித்துள்ளது.

### 6.2.9. இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பு

தமிழ்நாடு உப்பு நிறுவனம் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தியில் முன்னோடி நிறுவனமாக திகழ்கிறது. இந்நிறுவனம் இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்வதில் இருவிதமான முறைகளை பின்பற்றுகின்றது.

1. ஐதராபாத்திலுள்ள தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் (NIN) வரையறுத்துள்ள அளவீட்டின்படி உற்பத்தி செய்யப்படுகின்ற இருவித செறிவூட்டப்பட்ட உப்பில் உணவுக்கேற்ற பெரஸ் சல்பேட் (Ferrous Sulphate) நுண்ணூட்ட காரணியாக பயன்படுத்தப்படுகிறது.

2. கனடா நாட்டில் இயங்கும் மைக்ரோ நியூட்ரியண்ட் இனிசியேடிவ் (MI) வரையறுத்துள்ள அளவிட்டின்படி, உற்பத்தி செய்யப்படுகின்ற இருவித செறிவூட்டப்பட்ட உப்பில் என்கேப்சுலேட்டடு பெரஸ் ப்யுமேரேட் (Encapsulated Ferrous Fumerate) நுண்ணூட்ட காரணியாக பயன்படுத்தப்படுகிறது.

இருவிதச் செறிவூட்டப்பட்ட உப்பு தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநில அரசுகளின் மதிய உணவு திட்டத்திற்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சராசரியாக 2500 மெ.டன் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் 'உலகளாவிய அயோடின் உப்பு திட்டத்தில்' (Universal Salt Iodisation programme) பங்கு பெற்று தீவிரமாக செயலாற்றி வருகிறது.

### 6.2.10. குறைந்த அளவு சோடியம் உள்ள உப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 11.06.2014 அன்று உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய் உள்ளவர்கள் பயன்பெறும் பொருட்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பினை அறிமுகம் செய்து வைத்தார்கள்.



### 6.2.11. புரோமின் உற்பத்தி

உப்பு உற்பத்தி செய்யப்பட்ட பின்னர் கிடைக்கும் பிட்டர்ன் எனப்படும் கழிவு நீரிலிருந்து புரோமின் எனப்படும் வேதிப் பொருள் தயாரிப்பதற்காக தமிழ் நாடு உப்பு நிறுவனம் சௌத் இண்டிய புரோமின் அண்டு அலைடு கெமிகல்ஸ் (SIBAC), தூத்துக்குடி என்ற தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை ஏற்படுத்தியுள்ளது. புரோமின் எனப்படும் வேதிப்பொருள் உப்பின் உப பொருளாகும். தமிழ்நாடு உப்பு நிறுவனம், முன்பு வீணாக கடலில் கலந்த கழிவுநீரில் இருந்து தற்போது புரோமின் தயாரிப்பதால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூபாய் 8 முதல் 10 இலட்சம் வரை வருவாய் ஈட்டி வருகிறது.

### 6.3. நிறுவனத்தின் முக்கிய சாதனைகள்

1. இந்தியாவிலேயே முதன் முறையாக 1991ஆம் ஆண்டிலிருந்து இரும்பு சத்து செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.
2. 2001 ஆம் ஆண்டில் இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை அறிமுகம் செய்துள்ளது.

3. அயோடின் கலந்த கல் உப்பு இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில் கிலோ ஒன்று ரூபாய் 3.50க்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றது.

4. 2012ஆம் ஆண்டு இந்நிறுவனம் முதன் முறையாக மிக உயர்ந்தபட்ச உற்பத்தியாக 1,78,675 மெ. டன் உப்பு உற்பத்தி செய்துள்ளது.

5. உப்பு உற்பத்தியினை 1.75 இலட்சம் மெ.டன்னிலிருந்து 3 இலட்சம் மெ.டன்னுக்கு உயர்த்திட, கூடுதலாக 2200 ஏக்கர் நிலப்பரப்பினை மேம்படுத்தி உற்பத்தியை துவக்கி உள்ளது.

6. "**அம்மா உப்பு"** நான்கு வகைகளில், அதாவது சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு, குறைந்த அளவு சோடியம் உள்ள உப்பு மற்றும் அயோடின் கலந்த கல் உப்பு ஆகிய நான்கு வகையான உப்புக்கள் குறைந்த விலையில் வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது.

## 6.4. ஐஎஸ்ஓ தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தொழிற்சாலைக்கு உகந்த உப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் அதன் தரமான நிர்வாக அமைப்பிற்காக ஐஎஸ்ஓ (ISO) 9001:2008 தரச்சான்றிதழ் பெற்றுள்ளது.



தமிழ்நாடு உப்பு நிறுவனம் இந்திய தர நிர்ணய ஆணையம் நிர்ணயித்துள்ள ஐஎஸ் (IS) 7224:2006 என்ற தர நிர்ணய அளவீட்டின்படி அயோடின் கலந்த உப்பினை உற்பத்தி செய்து பொது விநியோகத் திட்டத்திற்கு விநியோகம் செய்து வருகிறது. மேலும். இந்நிறுவனம் 2012 ஆம் ஆண்டு தரமான அயோடின் கலந்த உப்பு உற்பத்தி செய்ததற்காக Food Safety Standard Association of India (FSSAI) என்ற அமைப்பின் சான்றிதழை பெற்றுள்ளது.

## 6.5. புதிய பரிசோதனைக் கூடம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் தனது உற்பத்தி பொருட்களின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் கெயின் (GAIN) என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் (அகில உலக மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து கண்காணிப்பு நிறுவனம்), ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு நவீன ஆய்வுக் கூடங்களை அண்மையில் நிறுவி உள்ளது. இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள ஆய்வுக் கூடத்தில் அதன் உற்பத்திப் பொருட்களை பரிசோதிப்பதோடு மட்டுமல்லாது செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்திக்காக பெறப்படுகின்ற வேதிப் பொருட்களின் தரமும் பரிசோதிக்கப்படுகிறது.

## 6.6. அயோடின் கலந்த கல் உப்பின் உற்பத்தியை அதிகரித்தல்

அயோடின் கலந்த கல் உப்பு உற்பத்தியை அதிகரித்திடும் வகையில், கெயின் (GAIN) என்ற சர்வதேச தொண்டு நிறுவனம் ரூ.90 இலட்சம் மதிப்பிலான இயந்திரங்களை வழங்கி உள்ளது. இதன் மூலம் மாதம் 6000 டன் அளவிற்கு அயோடின் கலந்த கல் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

## 6.7. நிறுவனத்தின் தொழிலாளர் நல நடவடிக்கைகள்

தமிழ் நாடு உப்பு நிறுவனம் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்கள் பணிபுரியும் இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், தேநீர் மற்றும் பிஸ்கெட் போன்றவை வழங்கப்பட்டு வருகிறது. சூரிய வெப்பத்திலிருந்து காக்கும் பொருட்டு உப்பள பணியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு சாதனங்களான கருப்பு மூக்குக் கண்ணாடி, முழுங்கால் வரை நீளமுள்ள காலணிகள் மற்றும் இதரவற்றை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.

அதோடு மட்டுமல்லாது, சட்டப்படியாக வழங்கக்கூடிய அனைத்து சலுகைகளும் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும்,



தொழிலாளர்களின் உடல் நலனை கருத்தில் கொண்டு அவ்வப்போது மருத்துவ முகாம்களை தமிழ்நாடு உப்பு நிறுவனம் நடத்தி வருகின்றது.

தொழிலாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக புதியதாக 5 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் (RO System) ரூ. 35 இலட்சம் செலவில் மாரியூர், வாலிநோக்கம், உப்பு உற்பத்தி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

## 6.8. உப்பு நிறுவனத்தின் சமூகப் கூட்டாண்மை பொறுப்பு – பங்களிப்பு

இந்நிறுவனம் வாலிநோக்கத்தை சுற்றி அமைந்துள்ள சுமார் 15 கிராமங்களை சேர்ந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளது. இந்நிறுவனம், நிறுவன சமூக கூட்டாண்மை பொறுப்பின் ஒரு பகுதியாக வாலிநோக்கத்தை சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் இயங்கும் பள்ளிகளுக்கு மேஜை, நாற்காலி போன்றவற்றை வழங்கியுள்ளது. மேலும், இராமநாதபுரத்தில் நடந்த புத்தக கண்காட்சிக்காக 2014 – 2015–ஆம் ஆண்டு 2 இலட்ச ரூபாயினை தமிழ் நாடு உப்பு நிறுவனம் வழங்கியுள்ளது.

## 7 தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் பெரிய அளவிலான புதிய முதலீட்டு கருத்துருக்களை ஈர்க்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசால் **1992** ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (சுருக்கமாக தொழில் வழிகாட்டி என அழைக்கப்படுவது) அமைக்கப்பட்டது. மேலும், பெரிய அளவிலான தொழில் திட்டங்களுக்கு அனுமதிகளை பெற்றுத் தருகின்ற ஒற்றைச் சாளர ஆவண மையமாக செயல்படுதல் மற்றும் ஏற்றுமதி சம்பந்தமாக உட்கட்டமைப்பு முதலானவற்றை மேம்படுத்த அசைடு திட்டத்தினை செயல்படுத்துதல் ஆகியவை வழிகாட்டி நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆகும்.

**2014-15** ம் ஆண்டு, தொழில் வழிகாட்டி நிறுவனம் ரூ.**6498.80** கோடி அளவிலான **14** பெரிய தொழில் திட்டங்களை வெற்றிகரமாக ஈர்த்துள்ளது. இதில் ரூ.**4137.50** கோடி அளவிலான முதலீடுகள் தி/ள். எம்.ஆர்.எப் மற்றும் யமஹா போன்ற புரிந்துணர்வு திட்டங்களாகும்.



இதைத்தவிர 2014-15ல் **12** நிறுவனங்கள் ரூ.**2361.30** கோடி அளவிற்கு வழிகாட்டி நிறுவனத்தால் ஒற்றைச் சாளர முறையின் கீழ் கையாளப்பட்டது.

வழிகாட்டி நிறுவனம் கடும் முயற்சியினை மேற்கொண்டு இந்த பெரிய தொழில் திட்டங்களை ஈர்த்துள்ளது.

இந்த திட்டங்களின் தற்போதைய நிலை கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது:

| வ. எ ண். | பெயர் | தயாரிப்பு | முதலீடு (ரூ. கோடியில் ) | நேரடி வேலை வாய்ப்பு | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | எம் ஆர் எப் (விரிவாக்கம்) | டயர் | 4000 | 1500 | பெரம்பலூர் |
| 2 | ஜே.கே.டயர் (விரிவாக்கம்) | டயர் | 1401,60 | 500 (கூடுதலாக) | ஸ்ரீபெரும்புதூர் |
| 3 | தாகாசாகோ இண்டர்நேஷனல் இந்தியா பிரைவேட் லிட் | Flavours and Fragrances | **60.54** | **60** | அசெண்டாஸ் தொழில் நகரியம் |
| 4 | போர்ஸ் மோட்டார்ஸ் லிட் | Engine Assembly for BMW | **45.08** | **60** | மகேந்திரா வெர்ல்டு சிட்டி |
| 5 | டொயோடா போஸ்கோ ஆட்டோ மோட்டிவ் இந்தியா லிமிடெட் | ஸ்டீல் பிரஸ் பார்ட்ஸ் | **173.42** | **216** | கிருஷ்ணகிரி ஓசூர் வட்டம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | பிரட்டானியா இண்டஸ்டிரிஸ் லிமிடெட் | பேக்கரி பொருட்கள் | 71.04 | 1136 | சிப்காட் வளாகம் பெருந்துறை |
| 7 | சந்தார் டெக்னாலெஜிஸ் | வீல் அசம்பளி | 10.28 | 60 | சிப்காட் வளாகம் ஒரகடம் |
| 8 | சுப்ராஜிட் இன்ஜினியரிங் லிமிடெட் | ஆட்டோ மேட்டிவ் கேபில்ஸ் யமஹா | 24.60 | 245 | சிப்காட் வளாகம் வல்லம் வடகால் |
| 9 | மெட்டல் பவுடர் கம்பெனி லிமிடெட் | Aerated autoclaved concrete blocks | 26.38 | 120 | சிப்காட் வளாகம் தோர்வாய் கண்டிகை |
| 10 | இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட் | ஆர் & டி சென்டர் உதிரி பாகங்கள் கிட்டங்கி | 137.50 | 500 | சிப்காட் வளாகம் வல்லம் வடகால் |
| 11 | விஸ்டியான் இன்டீரியர் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் | ஆட்டோ மொபைல் உதிரி பாகங்கள் | 120.22 | 608 | சிப்காட் வளாகம் வல்லம் வடகால் |
| 12 | கோனே எலிவேட்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட் | எலிவேட்டர் மற்றும் உதிரிபாகங் கள் | 375.74 | 663 | சிப்காட் வளாகம் பிள்ளை பாக்கம் |
| 13 | டெல்டா ஃபார்மா | ஃபார்மா பொருட்கள் | 42.00 | 150 | உத்திரமேரூர் |
| 14 | ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட் | Ware Housing | 10.40 | 30 | மாதவரம் |
| | | **மொத்தம்** | **6498.80** | **5848** | |



**2015 ம் ஆண்டு (ஏப்ரல் முதல் ஜுன் வரை) 9 பெரிய தொழில் திட்டங்களை ஒற்றைச் சாளர முறையின் கீழ் ரூ.2088.09 கோடி அளவிலான முதலீடுகள் வழிகாட்டி நிறுவனத்தால் ஈர்க்கப்பட்டன.**

| வ. எண். | பெயர் | தயாரிப்பு | முதலீடு (ரூ. கோடியில்) | நேரடி வேலை வாய்ப்பு | இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | இண்டர் நேஷனல் பேக்கரி புராடக்ட்ஸ் லிமிடெட் | பேக்கரி பொருட்கள் | 32.98 | 150 | சிப்காட் ஒரகடம் தொழில் பூங்கா |
| 2 | ஜோகோ கார்பரேசன் (M/s.Zoho Corporation) | ஐடி/ஐடிஇஸ் | 800 | 5700 | மறைமலை நகர் |
| 3 | ஐடிசி லிமிடெட் | உணவு பொருட்கள் | 60 | 850 | திருவொற்றியூர் |
| 4 | ஐடிசி லிமிடெட் | உணவு பொருட்கள் | 716.10 | 1948 | வடுகபட்டி வேலூர் கிராமம், புதுக்கோட்டை மாவட்டம் |
| 5 | செய்யார் SEZ விரிவாக்கம் | புட்வேர் | 100 | 5000 | சிப்காட் செய்யார் SEZ |
| 6 | மாருசான் அஜினோ மோட்டோ இந்தியா பிரைவேட் லிமிடெட் | ராமென் நூடுல்ஸ் | 100 | 50 | ஒன்ஹப் தொழில் பூங்கா |
| 7 | மண்ணா புட் பிரைவேட் லிமிடெட் | பேக்கரி பொருட்கள் | 34.6 | 450 | தனிச்சயாம் வாடிப்பட்டி கிராமம், மதுரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | M/s.Heat & Control (South Asia) P.Ltd. | உணவு பதப் படுத்துதல் Packaging & Distribution equipment | 64.41 | 70 | மகேந்திரா வேல்ர்ட் சிட்டி |
| 9 | கல்ஃப் ஆயில் | பெட்ரோலியம் பொருட்கள் | 180 | 300 | எண்ணூர் |
| | **மொத்தம்** | | **2088.09** | **14518** | |

## 7.1. உலக முதலீட்டாளர்கள் மாநாடு

தமிழ்நாடு அரசு "உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015"யினை செப்டம்பர் திங்கள் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சென்னையில் நடத்த உள்ளது. இந்த மாநாட்டினை நடத்துவதற்கான எல்லா விதமான நிகழ்ச்சி நிரல்கள், செலவினங்கள் மற்றும் வெற்றிகரமாக நடத்துவதற்கான பொறுப்புகள் வழிகாட்டி நிறுவனத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பல தரப்பட்ட கீழ்க்கண்ட குழுக்களுடன் கலந்து ஆலோசித்து அந்த அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.



14.2.2015 அன்று நடந்த மாநாட்டு வேலைகள் துவ விழாவில் வழிகாட்டி நிறுவனம் கீழ்க்கண்டவற்றை செய்து முடித்துள்ளது.

1. Knowledge Partner-யை தேர்ந்தெடுத்தல்
2. Creative, Design & Media Partner-யை தேர்ந்தெடுத்தல்
3. பிரான்ஸ், யு.கே. ஜப்பான் தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர், தைவான் போன்ற நாடுகளில் கண்காட்சி கூட்டங்கள் (Road Show) நடத்தப்பட்டன.
4. அகமதாபாத், மும்பை, கொல்கத்தா, டில்லி, பெங்களூரு, ஐதராபாத், பூனே ஆகிய உள்நாட்டுத் தலைநகரங்களிலும் கண்காட்சி கூட்டங்கள் (Road Show) நடத்தப்பட்டன.
5. Brochures, Flyers, Sector Profiles போன்றவைகள் பிரிண்ட் செய்யப்பட்டன.

## 7.2. பொருளாதார ஒப்பந்தத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடுதல்

### 7.2.1. பேஸ் டி லா லூாி சென்டர் ரீஜன் (Pays De La Loire and Center Region), பிரான்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

பிரான்ஸ் நாட்டிலிருந்து பெரிய அளவிலான முதலீடுகளை ஈர்க்கும் நோக்குடன், தொழில் துறையின் கீழ் செயல்படும் வழிகாட்டி நிறுவனம் Regional Council of the

Pays de la Loire, France and Regional Council of the Center Region, France ஆகிய நிறுவனங்களுக்கு இடையே **19.1.2015** அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டப்பட்டது.

### 7.2.2. கனகவா பிரிபெச்சூர் (Kanagawa Prefecture) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஜப்பான் நாட்டிலிருந்து பெரிய அளவிலான முதலீடுகளை ஈர்க்கும் நோக்குடன், தொழில் துறையின் கீழ் செயல்படும் வழிகாட்டி நிறுவனம் மற்றும் Kanagawa Prefecture நிறுவனத்திற்கும் இடையே **13.11.2014** அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

மேற்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டதின் மூலம் பிரான்ஸ் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 7.3. அசைடு (Assistance to States for Infrastructure Development for Exports and Allied Activities-ASIDE)

வழிகாட்டி நிறுவனம் - உறுப்பினர் செயலர் மாநில அளவிலான ஏற்றுமதி மேம்பாட்டு குழு – அசைடு குழுவிடம்



எல்லா நிதியுதவி சம்பந்தப்பபட்ட விவரங்களை 15-வது மாநில அளவிலான ஏற்றுமதி மேம்பாடு குழுவிடம் 9.**4.2015** அன்று வழங்கப்பட்டு, **6** திட்டங்களுக்கு ரூ.**56.50** கோடி ஒப்புதல் பெறப்பட்டது.

### 7.4. இணை பணிக்குழு கூட்டங்கள்

தமிழ் நாட்டில் ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு உதவும் பொருட்டு தலைமைச் செயலரை தலைவராக கொண்ட ஒரு இணை பணிக்குழு அமைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் அரசு இணை பணிக்குழு ஒன்றை அமைத்து அரசு ஆணை எண்.**15**, தொழில் துறை(எம்.ஐபி.**2**), தேதி **9.1.2012** அன்று வெளியிடப்பட்டது. உறுப்பினர் செயலராக வழிகாட்டி நிறுவனத்தின் செயல் துணைத் துலைவர் இருப்பார். இதுவரை இந்த இணை பணிக்குழுவின் கூட்டம் மூன்று முறை நடைபெற்றுள்ளது. இந்தக் குழுவின் கடைசிக் கூட்டம் **21.4.2015** அன்று நடைபெற்றது.

### 7.5. எண்ணூர் துறைமுகம்-கண்காணிப்புக் குழு கூட்டம்

**2013-14**ம் ஆண்டில் தொழில் துறை, தோஷிபா நிறுவன இடத்திலிருந்து எண்ணூர் துறைமுகம் வரையிலான சாலை இணைப்புக்காண கண்காணிப்புக் குழுவின் கூட்டங்களை

பலமுறை நடத்தியுள்ளது. இந்தக் குழுவின் கடைசி கூட்டம் 5.2.2015 அன்று நடைபெற்றது. எண்ணூர் துறைமுகம் வரையிலான சாலை இணைப்பு வேலைகள் முடிக்கப்பட்டது.



## 8. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

மேக்னசைட் தாது உருக்கு ஆலைகள் தயாரிக்கும் வெப்பம் தாங்கும் எரிகற்களுக்கு மிக முக்கியமான மூலப்பொருள் ஆகும். மேக்னசைட் கனிமம் (மெக்னிசியம் கார்பனேட் – $MgCO_3$) இந்தியாவில் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் மட்டுமே கிடைக்கக் கூடிய மதிப்பு மிக்க தாது ஆகும். 70 விழுக்காடு மேக்னசைட் தாது தமிழ்நாட்டில், குறிப்பாக சேலம் மாவட்டத்தில் கிடைக்கின்றது. உத்தரகான்ட், கர்நாடகா மற்றும் ஜம்மு–காஷ்மீர் போன்ற மாநிலங்களிலும் கூட இத்தாது கிடைக்கின்றது. சேலம் பகுதியில் கிடைக்கும் மேக்னசைட்டில் கேல்சியம் ஆக்ஸைட் குறைந்த அளவில் உள்ளது. மற்றும் அதன் வடிவ அமைப்பினால் பெரும்பாலும் சூளை எரிகற்கள் தயாரிக்க பயன்படுவதால் உலக அளவில் மிகவும் பிரசித்தி பெற்றவையாக உள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்படி கனிமத்தை பாதுகாக்கவும் தகுந்த முறையில் வெட்டி எடுக்கவும் ஜனவரி மாதம் 1979ஆம் ஆண்டு டேன்மேக் என அழைக்கப்படும் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை தமிழக அரசு நிறுவியது.

## 8.1. குறிக்கோள்

- தொழில்துறை வளர்ச்சிக்காக கனிமவளத்தை முறையாக பயன்படுத்தல்.
- இப்பகுதியின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்தல்.
- சுற்றுச் சூழல் மாசுபடாமல் காத்தல்.
- தேவையான கனிமத்தை பயன்படுத்தி அதிக அளவில் தரவாரியான பொருட்களை தயாரித்தல்.

## 8.2. சுரங்க குத்தகை

சேலம் மாவட்டத்தில் சேர்வராய் மலை அடிவாரத்தில் சேர்வராயன் தெற்கு வனச்சரகம், குரும்பப்பட்டி காப்பு காட்டில் 96.34 ஹெக்டேர் (238 ஏக்கர்) பரப்பளவில் டேன்மேக் சுரங்கம் அமைந்து உள்ளது. டான்மேக் நிறுவனம் திறந்தவெளி முறையில் (Open Cast Mines) சுரங்கத்தினை இயக்கி வருகிறது

## 8.3. உற்பத்தி பொருட்கள்

தற்போது, இந்நிறுவனம் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் மற்றும் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை பல்வேறு தரங்களில் உற்பத்தி செய்யப்படும்



இரு தொழிற்சாலைகளையும் சுரங்கத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நிறுவனம் ISO 9001–2008 (தர மேலாண்மை அமைப்பு) மற்றும் ISO 14001–2004 (சுற்றுச் சூழல் மேலாண்மை அமைப்பு) ஆகிய உலகத் தரச் சான்றிதழ்களை பெற்ற நிறுவனம் ஆகும். முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Dead Burnt Magnesite) மற்றும் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Lightly Calcined Magnesite) ஆகியவை பல தரங்களில் உற்பத்தி செய்யப்படும் மிக முக்கியமான பொருட்களாகும். மேக்னசைட்டை தோண்டி எடுக்கும் போது டுனைட் என்ற கனிமம் துணை தாதுவாக கிடைக்கின்றது.

## 8.4. சுரங்க நடவடிக்கைகள்

டேன்மேக் நிறுவனம், திறந்தவெளி சுரங்க இயக்க முறையில் முக்கியமான இயந்திரங்களைக் கொண்டு, மிகவும் தகுதி வாய்ந்த, அனுபவம் மிக்க சுரங்கப் பணியாளர்களைக் கொண்டு சுரங்கத்தை இயக்கி வருகிறது. இந்நிறுவனம், நவீன முறையில் விஞ்ஞான ரீதியாக சுற்றுச் சூழலைப் பாதுகாத்து கனிமத்தை வெட்டி எடுக்கின்றது.

ஆண்டொன்றுக்கு 1,20,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**8.5. சுழற் சூளைப் பிரிவு (Rotary Kiln Division)**

இப்பிரிவில் ஆண்டொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்க நவீனமயமாக்கப்பட்ட சுழற்சூளைப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. மேக்னசைட் தாது, பர்னஸ் ஆயிலைக் (Furnace Oil) கொண்டு அதிக அளவு வெப்பமான 1750 டிகிரி செல்சியசில் வெப்பப்படுத்தப்பட்டு முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்கப்படுகின்றது இது உருக்கு ஆலைகளுக்குத் தேவைப்படும் வெப்பம் தாங்கி கற்கள் (Refractory Bricks) மற்றும் மோனோலித்திக்ஸ் (Monolithics) தயாரிக்கப் பயன்படுகிறது.

**8.6. நிலைச் சூளைப் பிரிவு (Shaft Kiln Division)**

காஸ்டிக் கால்சைன்ட் மேக்னசைட் என்றழைக்கப்படும் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை தனது நிலைச் சூளைப் பிரிவில் உள்ள 5 செங்குத்தான நிலைச் சூளைகளைக் கொண்டு டேன்மேக் நிறுவனம் உற்பத்தி செய்கிறது.



இப்பிரிவின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 20,000 மெட்ரிக் டன்னாகும். மேக்னசைட் தாது 1000 டிகிரி செல்சியஸ் முதல் 1100 டிகிரி செல்சியஸ் வரையிலான வெப்பத்தில் பர்னஸ் ஆயிலைக் (Furnace Oil) கொண்டு வெப்பமயமாக்கப்பட்டு இரசாயன எதிர்வினை மூலம் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்கப்படுகிறது. இது கோதுமை அரைப்பதற்கு பயன்படும் அரவைக் கற்கள், மேக்னசைட் இரசாயனங்கள், கால்நடைத் தீவனம், கிரானைட் மெருகூட்ட தேவைப்படும் மெருகு கற்கள், ரேயான் மற்றும் காகித ஆலைகள் போன்றவற்றிற்கு பயன்படுகிறது.

**8.7. தரம்**

டான்மேக் நிறுவனம் அதி நவீன உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொண்ட முழுமையான ஆய்வகத்தைக் கொண்டுள்ளது. மேக்னசைட் தாது மற்றும் இங்கு தயாரிக்கப் படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் தரத்தை தொடர்ந்து ஆய்வு செய்து பராமரித்து வருவதன் மூலம் வாடிக்கையாளரின் திருப்தியை நிலைநாட்டி வருகின்றது.

## 8.8. 2014–15 ஆம் ஆண்டின் சாதனைகள்

- தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் விற்பனை வரலாற்றில், 2014–15ஆம் ஆண்டில், முதல் முறையாக விற்பனை ரூ 100 கோடியை கடந்துள்ளது.

- 2014–15ஆம் ஆண்டில், வரிக்கு முந்தைய இலாபமாக ரூ.24.22 கோடி ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் துவங்கப்பட்டதிலிருந்து இதுவே உயர்ந்த அளவாகும்.

- முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை உற்பத்தி செய்யும் சுழற்சூளை தொடர்ந்து 109 நாட்கள் இயங்கி இரண்டாவது முறையாக நிறுவனத்தின் வரலாற்று சாதனை படைத்துள்ளது.

- இந்நிறுவனம் நடப்பாண்டில் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை 28500 மெட்ரிக் டன் உற்பத்தி செய்துள்ளது. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிகம் ஆகும். (23,005 மெட்ரிக் டன்) இதனால் விற்பனை ரூ. 13 கோடி அதிகரித்துள்ளது.

- நிறுவனத்தின் நிகர மதிப்பீடு (Net Worth) 15 ஆண்டுகளுக்குப் பின் சாதகமாக மாறி, இதுவரை தொடர்ந்து வந்த நட்டம் முழுவதுமாக நீக்கப்பட்டு விட்டது.



## 8.9. 2015–16 மற்றும் 2016–17 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

(அளவு டன்னில்)

| விவரங்கள் | 2015 – 16 | | 2016–17 | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| கச்சா மேக்னசைட் | 1,20,000 | 1,20,000 | 1,20,000 | 1,20,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 30,000 | 30,000 | 30,000 | 30,000 |
| மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 20,000 | 20,000 | 20,000 | 20,000 |

## 8.10. விருதுகள்

2014–15ஆம் ஆண்டு நடைபெற்ற சுரங்கப் பாதுகாப்பு வார விழாவின் போது, தமிழ்நாடு மற்றும் கேரளா சுரங்க பாதுகாப்பு அசோசியேசன், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்திற்கு பின்வரும் விருதுகளை வழங்கி கௌரவித்து உள்ளது.

அ) பாதுகாப்பு சாதனங்கள் அணிதல் – முதல் பரிசு

ஆ) தொழிற்பயிற்சி மற்றும் பயிற்சிக் கூடம் – இரண்டாம் பரிசு

இ) தாது கையாளுதல் மற்றும் பணிமனை வசதிகள் – இரண்டாம் பரிசு

ஈ) வெடிமருந்து கிடங்கு மற்றும் வெடிமருந்து கையாளுதல் – இரண்டாம் பரிசு

மேலும் சுரங்க சுற்றுச் சூழல் மற்றும் தாது பாதுகாப்பு வார விழாவின் போது, சுரங்க சுற்றுச் சூழல் மற்றும் தாது பாதுகாப்பு கவுன்சில் மூலம் 2014–15 ஆம் ஆண்டில் பின்வரும் விருதுகள் டான்மேக் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

அ) கனிமக் கழிவு மேலாண்மை – முதல் பரிசு
ஆ) இரண்டாம் தர தாதுவை கையாளுதல் – இரண்டாம் பரிசு
இ) ஒட்டு மொத்த செயல்பாடுகள் – மூன்றாம் பரிசு



## 9. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் 1983–ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு நைட்ரோகிளிசரினை அடிப்படையாக கொண்ட வணிக ரீதியான வெடிமருந்துப் பொருட்களின் உற்பத்தியை 1986ஆம் வருடம் துவக்கியது. இந்நிறுவனத்திற்கு தேவையான நிதி, தமிழக அரசு, நிதி நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பங்குகளாகப் பெறப்பட்டு முதலீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் பங்கு மூலதனமாக ரூ.22.14 கோடி (82.14 சதவிகிதம்) தமிழக அரசும், ரூ.1.99 கோடி (7.42 சதவிகிதம்) தொழில் வளர்ச்சி வங்கி மற்றும் இந்திய தொழில் நிதி நிறுவனமும், ரூ.2.66 கோடி (9.86 சதவிகிதம்) பொது மக்களும், ரூ.2.87 இலட்சம் (0.11 சதவிகிதம்) நிறுவன ஊழியர்களும் மற்றும் ரூ.12.90 இலட்சம் (0.47 சதவிகிதம்) அயல்வாழ் இந்தியர்களும் முதலீடு செய்துள்ளனர்.

இந்நிறுவனம், வேலூர் மாவட்டம், காட்பாடி, கிறிஸ்டியான்பேட்டை கிராமத்தின் சிறிய குன்றின் மீது வனத்துறையின் 700 ஏக்கர் பரப்பளவில் பலவிதமான வெடிபொருட்கள் மற்றும் அதனைச் சார்ந்த

துணைப்பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கேற்ப பல்வகை கட்டமைப்பு வசதிகளுடன் அமைந்துள்ளது. இந்நிறுவனம் துவக்கப்பட்ட போது நைட்ரோகிளிசரின் தொடர்பான வெடிமருந்து பொருட்களை உற்பத்தி செய்து நல்ல இலாபத்தை ஈட்டியது. மேலும் இந்நிறுவனம் வெடியூக்கி, வெடித்திரி, கலவை வெடிமருந்து, எமல்ஷன் வெடிமருந்து மற்றும் எம்.எம்.ஏ.என். போன்ற உற்பத்தி பிரிவுகளும் இந்நிறுவனத்தால் துவக்கப்பட்டுள்ளது.

ஆண்டு வாரியாக துவக்கப்பட்ட பல்வேறு உற்பத்தி பிரிவுகளின் விவரங்கள் பின்வருமாறு

| உற்பத்தி பிரிவின் பெயர் | ஆண்டு | உற்பத்தி திறன் /ஆண்டு |
|---|---|---|
| வெடியூக்கி | 1988 | 45 மில்லியன் எண்ணிக்கை |
| வெடித்திரி | 1988 | 12 மில்லியன் மீட்டர்கள் |
| கலவை வெடிமருந்து | 1992 | 10000 மெட்ரிக் டன் |
| எமல்ஷன் | 2004 | 9000 மெட்ரிக் டன் |
| மோனோ மீத்தைல் அமீன் நைட்ரேட் (எம்.எம்.ஏ.என்) | 2007 | 6000 மெட்ரிக் டன் |

இந்நிறுவனம் 2002–2003 ஆம் வருடம் வரை இலாபத்தை ஈட்டியது. நைட்ரோகிளிசரின் வெடிமருந்துப்



பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு மத்திய அரசு 2004ஆம் வருடம் தடை விதித்தது. இத்தடைக்குப் பின் வெடிமருந்து உற்பத்தியில் இந்நிறுவனம் கடுமையான பின்னடைவை சந்தித்தது. தற்போது நிறுவனத்தில் 295 தொழிலாளர்களும், 69 பணியாளர்களும் மற்றும் 25 அலுவலர்களும் சேர்த்து மொத்தம் 389 நபர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

### 9.1. நோக்கம்

இந்நிறுவனம் சுரங்க, தாதுப் பொருட்கள் மற்றும் பூமி சம்மந்தமான எண்ணெய் வளம் போன்றவற்றை கண்டறிய, கிணறு தோண்டுதல் மற்றும் குகை அமைத்தல் போன்ற ஆக்கபூர்வ பணிகளுக்கு தேவையான தரமான வெடிமருந்து மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களை உற்பத்தி மற்றும் வேண்டுகின்ற நிறுவனத்திற்கு விற்பனை செய்வதே நோக்கமாக கொண்டுள்ளது.

### 9.2. குறிக்கோள்

1. வேலூர் மாவட்டத்தை (முன்னாள் வட ஆற்காடு மாவட்டம்) தொழில் துறையில் முன்னேற்றமடைய செய்வது.

2. தொழில் துறை மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

## 9.3. வெடிமருந்து உற்பத்தி

தற்போது தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தில் கீழ்க்கண்ட வெடிமருந்து பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன .

| வ. எண் | உற்பத்தி பொருள் | பயன்பாடுகள் |
|---|---|---|
| 1 | எமல்ஷன் | கிணறு தோண்டுதல், சுரங்கம் அமைத்தல் மற்றும் பாறை உடைத்தல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது |
| 2 | கலவை வெடிமருந்து | திறந்த வெளி சுரங்கங்களில் பயன்படுகிறது |
| 3 | வெடியூக்கி | வெடிமருந்தை வெடிக்க வைப்பதற்கு தேவைப்படும் துணைப்பொருள் |
| 4 | வெடித்திரி | வெடிமருந்தை வெடிக்க வைப்பதற்கு தேவைப்படும் துணைப்பொருள் |
| 5 | மோனோ மீத்தைல் அமீன் நைட்ரேட் (எம்.எம்.ஏ. என்) | அயல்நாடுகளில் தயாரிக்கப்படும் வெடிமருந்துகளுக்கு அடிப்படை வேதி பொருளாகும். |



## 9.4. நிறுவனத்தின் வெடிமருந்து உற்பத்தியில் எய்திய முன்னேற்றங்கள்

தமிழ் நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் பொதுவாக 5 வெடிமருந்து உற்பத்தி பிரிவுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அவையாவன, 1. எம்.எம்.ஏ.என். 2. எமல்ஷன் வெடிமருந்து, 3. கலவை வெடிமருந்து 4. வெடியூக்கி 5.வெடித்திரி. இவ்வைந்து பிரிவுகளில் எட்டப்பட்ட உற்பத்தி சாதனைகளும், முன்னேற்றங்களும் பின்வருமாறு .–

### 9.4.1. மோனோ மிதைல் அமீன் நைட்ரேட் ( எம்.எம்.ஏ.என்)

மோனோ மீத்தைல் அமீன் நைட்ரேட் கரைசல் (எம்.எம்.ஏ.என்.) என்ற அரிய வகை வேதிப்பொருள் இந்தியாவில் தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் மற்றும் கர்நாடகா கெல் டெக் நிறுவனம் ஆகிய இரு நிறுவனங்கள் மட்டுமே உற்பத்தி செய்து வருகின்றன.

எம்.எம்.ஏ.என் என்ற வேதிப்பொருளை கடலுக்கடியில் இருக்கும் கனிமங்களை எடுப்பதற்கு நடப்பாண்டில் ஓ.என்.ஜி.சி பரோடா மற்றும் அஸ்ஸாம் பிரிவுகளிலிருந்து ரூ. 2 கோடி அளவிற்கு பூமிக்கு அடியில் வெடிக்ககூடிய வெடிபொருட்கள் கொள்முதல் ஆணைகளை இந்நிறுவனம் பெற்றுள்ளது. இந்த வெடிமருந்து தயாரிப்பதற்கு

எம்.எம்.ஏ.என்.வேதிப்பொருள் உபயோகப்படுத்தப்படும். எம்.எம்.ஏ.என் வேதி பொருள் ஆஸ்திரேலியா, துருக்கி, அங்கோலா மற்றும் பொலிவியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. கடந்த வருடத்தின் உற்பத்தி அளவான 1040 மெட்ரிக் டன் என்பதைக் காட்டிலும் கடந்த நிதியாண்டில் இந்நிறுவனம் 1286.400 மெட்ரிக் டன் எம்.எம்.ஏ.என். உற்பத்தியை எய்தியுள்ளது. நடப்பு ஆண்டில் 1286.400 மெட்ரிக் டன் எம்.எம்.ஏ.என். ஏற்றுமதி செய்து இதன் மூலம் ரூ.793.96 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

**9.4.2. எமல்ஷன் அடிப்படையிலான வெடிமருந்து**

இப்பிரிவின் உற்பத்திப் பொருளான பவர்டெல் 90 என்ற வெடிமருந்து தனியார் துறைகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் மற்ற உற்பத்திப் பொருட்களான பவர்டெல் –1, பவர்டெல் –5, மற்றும் பவர்டெல் 80 போன்ற வெடிமருந்துகள் பொதுத்துறை நிறுவனங்களான எஸ்.சி.சி.எல், யு.சி.ஐ.எல் மற்றும் ெஹச்.சி.எல் போன்ற நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகிறது. இப்பிரிவில் கடந்த நிதியாண்டில் செய்யப்பட்ட உற்பத்தி அளவான 3194.513 மெட்ரிக் டன் என்ற அளவைக் காட்டிலும் நடப்பாண்டில் நிதியாண்டில் 3996.642



மெட்ரிக் டன் எமல்ஷன் அடிப்படையிலான வெடிமருந்து உற்பத்தியை எய்தியுள்ளது.

**9.4.3. கலவை அடிப்படையிலான வெடிமருந்து**

இப்பிரிவில் டெல்பிரைம் 83/125 மிமி, டெல்ஜெல்– 83/125 மிமி மற்றும் டெல்பிரைம் சிபிடி போன்ற வெடிமருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2014–15ஆம் நிதியாண்டில், இப்பிரிவின் உற்பத்தி கடந்த நிதியாண்டு அளவான 702.550 மெட்ரிக் டன்னிலிருந்து 877.750 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

**9.4.4. வெடியூக்கி**

இப்பிரிவு அதிகமான தொழிலாளர்களைக் கொண்டு செயல்படும் பிரிவாகும். இந்திய அரசு 10.01.2014 முதல் அம்மோனியம் நைட்ரேட் பயன்பாடு சம்பந்தமாக புது விதிகளை புகுத்தியது முதற்கொண்டு வெடியூக்கியின் உபயோகம் கணிசமான அளவில் குறைந்து விட்டது. இதனால் சந்தையில் வெடியூக்கிகளின் தேவையும் அதன் விலையும் மிகவும் குறைந்து விட்டது. இந்தப் பிரிவின் செயல்பாடு இதனால் இந்த வருடம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் இதே நாளில் எட்டப்பட்ட உற்பத்தி அளவான 253.769 இலட்சம்

எண்ணிக்கையை ஒப்பிடும்போது இவ்வருடத்தில் 179.917 இலட்சம் வெடியூக்கி உற்பத்தியை இப்பிரிவு எய்தியுள்ளது.

### 9.4.5. வெடித்திரி

இப்பிரிவில் வெடித்திரி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வெடித்திரியானது நிலத்தடி சுரங்கங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் சந்தையில் வெடித்திரி விற்பனையின் தேக்கநிலை காரணமாக இப்பிரிவில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சந்தையில் வெடித்திரியின் விற்பனைக்கு புத்துயிர் கொடுக்கவும், உற்பத்தி கொள்ளளவை அதிக அளவில் பயன்படுத்தவும் நிறுவனம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நிறுவனம் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து 5 இலட்சம் மீட்டர் ஏற்றுமதிக்கு ஆணை பெற்றுள்ளது. கடந்த ஆண்டின் இதே நாளில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி அளவான 22.330 இலட்ச மீட்டர்களைக் காட்டிலும் இவ்வாண்டில் 30.050 இலட்ச மீட்டர்கள் இப்பிரிவில் உற்பத்தி எய்தியுள்ளது.

### 9.5. நிதி நிலைமை

துவக்கப்பட்ட காலங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளின் காரணமாக 1986 ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரை



நிறுவனம் நஷ்டத்திலேயே இயங்கி வந்தது. எனவே நிறுவனம் பி.ஐ.எப்.ஆர்–க்கு பரிந்துரைக்கப்பட்டது. 1992 ஆம் வருடம் பி.ஐ.எப்.ஆர் புனரமைப்பு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து நிறுவனம் தனது உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தியதின் காரணமாக 1993–94 ஆம் ஆண்டு முதல் 2002–03 ஆம் ஆண்டு வரை இலாபத்தில் இயங்கியது. 01.01.2004 அன்று மத்திய அரசு இலாபத்தை ஈட்டித்தந்த முக்கிய உற்பத்தி பொருளான நைட்ரோகிளிசரின் வெடிமருந்துப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை மீது திடீரென தடை விதித்ததின் காரணமாக 2003–04 ஆம் ஆண்டு முதல் நிறுவனம் நஷ்டத்திற்கு தள்ளப்பட்டது. இருப்பினும் இலாபத்தை ஈட்டித்தந்த நைட்ரோகிளிசரின் வெடிமருந்து உற்பத்திற்கு மாற்றாக எமல்ஷன் மற்றும் எம்.எம்.ஏ.என் உற்பத்தியை நிறுவனம் அறிமுகப்படுத்தியிருந்த போதும் நிறுவனத்தின் நிதிநிலைமையில் எவ்வித முன்னேற்றமின்றி தொடர்ந்து இந்நாள் வரை நட்டத்திலேயே இயங்கி வருகிறது.

நிறுவனம் தொடர்ந்து சந்தையில் தனது உற்பத்தி பொருட்களுக்கான வணிகப்பங்குகளை அதிக்கப்படுத்தவும், உற்பத்தி செலவினங்களை குறைக்கவும்

நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. நடப்பு நிதியாண்டில் ஓ.என்.ஜி.சி. அஸ்ஸாம் மற்றும் பரோடா பிரிவுகளிடமிருந்து ரூ. 2 கோடிக்கு கொள்முதல் ஆணையினை பெற்றுள்ளது.

விறகால் எரியூட்டப்படும் நீராவி கொதிகலன் ஆகஸ்ட் 2014 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் நிறுவனத்தின் மசகு எண்ணை செலவில் ஆண்டொன்றுக்கு ரூ.1.20 கோடி அளவிற்கு சேமிக்க இயலும் என்று கருதப்படுகிறது. 2014–15ஆம் நிதியாண்டில் நிறுவனத்தின் விற்பனை ரூ.42 கோடியாகும்.

**9.6. வெடிமருந்துகளின் ஏற்றுமதி**

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் வெடிமருந்துப் பொருட்களை 1998ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது .–

(1) துருக்கி (2)அங்கோலா (3) பிலிப்பைன்ஸ் (4) சிங்கப்பூர் (5) எத்தியோப்பியா (6) ஆஸ்திரேலியா மற்றும் (7) பொலிவியா

இந்நிறுவனத்தின் ஏற்றுமதி ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 8லிருந்து ரூ.9 கோடியாக உள்ளது. நிறுவனம் 2015–16 ல்



ரூ. 6 கோடியளவிற்கு பெரிய ஏற்றுமதி ஆணை ஒன்று எகிப்து நாட்டிலிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் ஏற்றுமதியான பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.12 கோடியாகும். ஏற்றுமதியை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு புதிதாக அயல்நாட்டு வாடிக்கையாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**9.7. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் செயலாக்கம்**

| ஆண்டு | 2013–14 (தணிக்கை செய்யப்பட்டது) | 2014–15 (தற்காலிகமானது) | 2015–16 (மதிப்பீடு) |
|---|---|---|---|
| மொத்த விற்பனையளவு (ரூபாய் கோடிகளில்) | 42.14 | 42.00 | 72.00 |
| நிகர இலாபம்/ நட்டம் (ரூபாய் கோடிகளில்) | (–) 9.74 | (–)14.47 | (+) 1.00 |

இந்நிறுவனம் தற்போது செலுத்த வேண்டிய கடன் விவரங்கள் பின்வருமாறு

| வ எண் | விவரம் | கடன் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1. | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி – வண்டரந்தாங்கல், வேலூர் ரொக்க கடன் அளவு | 8.00 |
| 2. | தமிழக அரசிடமிருந்து வட்டியில்லா கடன், விருப்ப ஓய்வு திட்ட கடன் மற்றும் வழிவகை கடனாக பெற்ற தொகை குவிப்பு வட்டியுடன் 31.03.2014 வரை | 100.41 |

31.03.2014 ஆம் நாளன்று நிறுவனத்தின் குவிந்த நட்டம் ரூ.126.82 கோடியாகும்.

## 9.8. விருப்ப ஓய்வு திட்டம்

பணியாளர் செலவு நிறுவனத்தின் வருமானத்தில் 35 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடு என்ற அளவில் மிக அதிக நிலையில் உள்ளது. இந்நிறுவனம் ரூ.22.09 கோடி கடனாக அரசிடமிருந்து பெற்று 423 பணியாளர்களை விருப்ப ஓய்வு திட்டத்தில் விடுவித்ததில் பணியாளர்களின் எண்ணிக்கையை 393 ஆக குறைந்துள்ளது. தற்போது வெடியூக்கிகளின் தேவை சந்தையில் வெகுவாக குறைந்து அதன் விலையும் மிகவும் குறைந்துவிட்டதால் நிறுவனம் மேலும் சில பணியாளர்களை விருப்ப ஓய்வூதிய திட்டத்தின் கீழ் கொண்டு வர பரிசீலித்து வருகிறது. இத்திட்டத்திற்கு அரசு உதவி தேவைப்படும்.



## 9.9. உற்பத்தி பிரிவுகளின் பயன்பாடு

ஒவ்வொரு உற்பத்தி பிரிவும் அதிக அளவு உற்பத்தி கொள்ளளவை கொண்டுள்ளது. கடந்த காலத்தில் மிகக் குறைந்த அளவே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது உற்பத்தி பிரிவுகளில் உற்பத்தி முழு கொள்ளளவு உற்பத்தி எய்தி வருகிறது.

2013–14 மற்றும் நடப்பு ஆண்டில் எய்தப்பட்ட உற்பத்தி அளவுகள் பின்வருமாறு .–

| உற்பத்தி பிரிவுகள் | 2013–14 | 2014–15 | சதவிகிதத்தில் |
|---|---|---|---|
| மோனோ மீத்தைல் அமீன் நைட்ரேட் (எம்.எம்.ஏ.என்) – மெட்ரிக் டன் | 1040 | 1286.400 | 23.69 |
| எமல்ஷன் – மெட்ரிக் டன் | 3194.513 | 3996.642 | 25.10 |

| | | | |
|---|---|---|---|
| கலவை வெடிமருந்து – மெட்ரிக் டன் | 702.550 | 877.750 | 24.93 |
| வெடித்திரி – இலட்சம் மீட்டர்கள் | 22.330 | 30.050 | 34.57 |
| வெடியூக்கி (இலட்சங்கள் எண்ணிக்கை) | 253.769 | 179.917 | (–)29.10 |

அனைத்து உற்பத்தி பிரிவுகளுக்கும் தேவைப்படும் கச்சாப்பொருட்கள் வழங்க இயலாமையே உற்பத்தியை பெருக்குவதற்கு பெரிய தடையாக உள்ளது. எனினும் நிறுவனம் தேவைப்படும் கச்சாப் பொருட்களை தடையில்லாமல் அனைத்து பிரிவுகளுக்கும் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கையை இந்நிறுவனம் எடுத்து வருகிறது. ஒவ்வொரு தொழிலாளியின் உற்பத்தி திறன் கணிப்பாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு வருகிறது. அனைத்து உற்பத்தி பிரிவுகளும் முழு திறனில் உற்பத்தியை மேற்கொள்வதற்கு ஏதேனும் மனித ஆற்றல் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒப்பந்த அடிப்படையில் மனித ஆற்றல் வழங்கப்பட்டு வருகிறது.



### 9.10. சிங்கரேணி கோலியரிஸ் நிறுவனத்தில் உற்பத்தி அலகு நிறுவி வெடி மருந்துகள் வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை

சிலரி அடிப்படையிலான வெடிமருந்துகளை சிங்கரேணி கோலியரிஸ் நிறுவன இடத்திலேயே வழங்குவதற்கு டெல் நிறுவனம் ஒரு இணை முனைவோர் திட்டம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. ஆரம்பக் கட்ட வேலைகள் முடிவடைந்துள்ளன. அரசின் அனுமதி, நிறுவனத்தின் முதலீடு போன்றவை பசீலிக்கப்பட்டு வருகிறது.

### 9.11. தொழிலாளர் நலன், தொழில் உறவு மற்றும் பாதுகாப்பு

இத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் அபாயகரமான சூழ்நிலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். எனவே தொழிலாளர்களின் பாதுகாப்பை முதன்மையாக கருதி பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகின்றது. அனைத்து தொழிலாளர்களுக்கும் குறித்த காலங்களில் மருத்துவ பரிசோதனை மற்றும் மன அழுத்தம் நீக்குதல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய புதிய ஊதிய ஒப்பந்தம் இறுதி

செய்யப்பட்டு அதற்கான முன்மொழிவு அரசின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

**9.12. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறை**

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையின் செயல்பாடுகள் முக்கிய பங்கு வகிக்கிறது.நடப்பு ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறை தன்னுடைய முயற்சியின் காரணமாக கீழ்க்கண்ட அபிவிருத்திகளை ஏற்படுத்தியுள்ளது.

சிங்கரேணி காலியரிஸ் நிறுவனத்திற்கு விற்கப்படும் பி1 மற்றும் பி5 வெடிமருந்து சிப்பத்தில் கட்டப்பட்டு வரும் முழு செம்பு கம்பிகளுக்குப் பதிலாக செம்புதடவிய உருக்கு கம்பிகளை பயன்படுத்துவதால் நிறுவனத்திற்கு டன் ஒன்றிற்கு ரூ.3000 அளவிற்கு இந்த கம்பிகளின் செலவில் சேமிப்பு ஏற்படும் என்றும் இதன் மூலம் நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.50 இலட்சம் அளவிற்கு செலவில் சேமிப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறை எதிர் வரும் வருடங்களில் மேலும் பல முயற்சிகளை மேற்கொண்டு செலவுகளை குறைத்து கணிசமான அளவிற்கு சேமிப்பை



அடைய வழிவகை செய்யும் என தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் நம்புகிறது.

**9.13. ஏற்றுமதி**

2013–14 மற்றும் 2014–15 ஆம் வருடங்களில் நிறுவனம் ஏற்றுமதி மூலம் முறையே ரூ.9.84 மற்றும் ரூ.9.42 கோடி விற்பனை அடைந்துள்ளது. தற்போது நிலவி வரும் சந்தை தேவைகளை கருத்திற்கொண்டு நிறுவனம் அதிகபடியான வெடிமருந்துகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உரிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் ஏற்றுமதிக்காக மண்டல வாரியாக ஏற்றுமதி முகவர்களை நியமிக்க முடிவு செய்துள்ளது. தனியார் நிறுவனங்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வரும் வெடிமருந்து சந்தையில் நிறுவனம் நிலைத்து நிற்பதற்கு ஏற்றுமதி வாணிபம் மிகவும் உதவும். 2015–16 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதிக்கான விற்பனை இலக்காக ரூ.25 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெடிமருந்து தொழிலில் தற்போது தனியார் துறையில் அதிகப்படியான உற்பத்தியாளர்கள் உள்ளனர். டெல், தனியார் துறையின் உற்பத்தி செலவிற்கு இணையாக தனது உற்பத்தி செலவை கட்டுப்படுத்த இயலாததால் நிறுவனம் நட்டத்தில்

இயங்கி வருகிறது. எனவே டெல் நிறுவனம் பணியாளர்களை தன் விருப்ப ஓய்வு பெறும் திட்டத்தை அமுல்படுத்தி உற்பத்தி செலவை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் நிறுவனம் வெடித்திரி, மோனோ மிதைல் அமைன் நைட்ரேட் மற்றும் சிலரி பொருட்களை ஏற்றுமதி செய்து இலாபகரமாக இயங்கும் 100 சதவீதம் ஏற்றுமதி நிறுவனமாக ஆவதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறது.

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் ஒட்டு மொத்த நட்டம் ரூ.126.82 கோடியாகும். மேலும், தமிழக அரசிற்கு திருப்பி செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை இருந்த போதிலும், நிறுவனம் தற்போதைய நிலையிலிருந்து மீண்டு வர கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.



## 10. தமிழ்நாடு கனிம நிறுவனம்

வளம் நிறைந்த அளப்பறிய செல்வங்களான, கனிம வளங்களை, அறிவியல் முறையில் கண்டறிந்து, அவற்றை தொழில் நுட்ப முறையில் வெட்டி எடுத்து, இலாபகரமாக விற்பனை செய்யும் பணியினை ‘‘தமிழ்நாடு கனிம நிறுவனம்’’ (டாமின்) ஏற்றுள்ளது. அதிக அளவில் கிடைக்கக்கூடிய சிறுவகை கனிமங்களான கருப்பு, வெள்ளை, பாரடைஸோ, பல வண்ண கற்படிவங்கள் (கிரானைட்) மற்றும் பெருவகைக் கனிமங்களான கிராபைட், சுண்ணாம்புக்கல், சிலிகா மணல் மற்றும் வெர்மிகுலைட் ஆகிய கனிமங்களை சீரிய முறையில் வெட்டியெடுத்து அவற்றை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி நியாயமான முறையில் விற்பனை செய்வது தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பணியாகும்.

### 10.1. நோக்கம்

கனிம துறையில் முதன்மையான இடத்தை அடைதல் மற்றும் இயற்கையான கனிம வளங்களை அறிவியல் முறையில் கையாளுதல்.

## 10.2. குறிக்கோள்

- தொடர்ந்து புதிய கனிம வள பகுதிகளை கண்டறிதல்.
- சுரங்க செயல்பாடுகளில் நவீன உத்திகளை கையாள்வதன் மூலம் பாதுகாப்பான வகையில் தரமான கனிம உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல்.
- மதிப்பு கூட்டப்பட்ட கிரானைட் மற்றும் கனிமங்கள் ஏற்றுமதி செய்வதின் மூலம் மாநிலத்திற்கும் நாட்டிற்கும் கனிசமான அன்னிய செலாவணி ஈட்டுதல்.
- குவாரிகள் மற்றும் சுரங்கங்களை மேம்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் பின்தங்கிய மற்றும் கிராமப்புற பகுதி மக்கள் பயனடையக்கூடிய வகையில் வேலைவாய்ப்பினையும் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தியில் தகுதி வாய்ந்த தொழில்நுட்பக் கல்வி பயின்றவர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பினையும் ஏற்படுத்தி தருதல்.
- குவாரிகள் மற்றும் சுரங்கங்களை முறையான வகையில் செயல்படுத்துவதன் மூலம் அதிக மதிப்புள்ள கிரானைட் மற்றும் கனிமங்களை உற்பத்தி செய்தல்.



## 10.3. சுரங்க குத்தகை விவரம்

| வ. எண். | கிரானைட் வகைகள் | சுரங்க குத்தகை எண்ணிக்கை | பரப்புளவு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| 1 | கருப்பு கிரானைட் | 71 | 916.670 |
| 2 | பலவண்ண கிரானைட் | 48 | 751.500 |
| 3 | பெருங்கனிமங்கள் | 18 | 324.942 |
| | மொத்தம் | **137** | **1993.112** |

## 10.4. பணியாளர்கள் விவரம்

| | |
|---|---|
| அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் | 555 |
| தொழிலாளர்கள் | 692 |
| மொத்தம் | 1247 |

## 10.5. சாதனைகள்

- 2013–14 நிதியாண்டில், டாமின் இதுவரை எட்டப்படாத அதிகபட்ச சாதனையாக ரூ.188.87 கோடி அளவிற்கு விற்பனை செய்தது. மேலும் அதிகபட்ச சாதனையாக ரூ. 45.71 கோடிக்கு ஏற்றுமதி செய்தது. அரசுக்கு செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூ.24.24 கோடியாகும். மேலும், இதுவரை எட்டப்படாத அதிகப்பட்ச வரிக்கு முந்தைய நிகர இலாபமாக ரூ.24.69 கோடி ஈட்டியுள்ளது.

- 2014–15ஆம் நிதியாண்டிற்கான விற்பனை மதிப்பு ரூ.155 கோடி (தணிக்கையாகாதது) ஆகும். இது முந்தைய ஆண்டில் எட்டப்பட்டது ரூ.188.87 கோடியாகும். இது டாமின் தொடங்கப்பட்டதிலிருந்து (1978) இரண்டாவது அதிகப்பட்ச சாதனையாகும்.

- ரூ.17.79 கோடி மதிப்பிலான கிரானைட் சீனா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் இதர கிழக்கு ஐரோப்பா நாடுகளுக்கு 2014–15ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

- டாமின் துவங்கப்பட்டதிலிருந்து இதுவரை இல்லாத சாதனையாக இந்தியத்தரமணல் 3,882 மெ. டன் மற்றும் வெர்மிகுலைட் தாது 2,222 டன், 2014–15ஆம் நிதியாண்டில், உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- 2014–15ம் நிதியாண்டில், டாமின் தொடங்கப்பட்டதிலிருந்து (1978) அதிகபட்ச விற்பனை சாதனையாக சுண்ணாம்புகல் ரூ33.04 கோடி, செழுமைபடுத்திய கிராபைட் ரூ.30.33 கோடி, இந்தியத்தரமணல் ரூ.7.10 கோடி மற்றும் விரிவுபடுத்திய வெர்மிகுலைட் ரூ.1.93 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- 2014–15 ஆம் நிதியாண்டில், உற்பத்தி, முறையே கருப்பு கிரானைட் (17327 க.மீ) கிராபைட்தாது (71256 டன்), விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் (1450 டன்), சுண்ணாம்புக்கல் (666190 டன்) செறிவூட்டப்பட்ட கிராபைட்(5848 டன்) மணல் தாது (7647 டன்) செறிவூட்டப்பட்ட மற்றும் மெருகூட்டப்பட்ட பலகைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் (79439 ச.மீ) உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.



- 2014–15ம் நிதியாண்டில், ரூ21.55 கோடி (தணிக்கையாகாதது) (வரிக்கு முந்தைய) நிகர இலாபம் ஈட்டியுள்ளது. இது டாமின் துவங்கப்பட்டதிலிருந்து இரண்டாவது அதிகபட்ச சாதனையாகும்.

- கடந்த 2013–14ஆம் நிதியாண்டில், இதுவரை இல்லாத அதிகபட்சமாக உரிம வரி, முடக்கு வரி மற்றும் பங்கு ஈவுத் தொகையாக ரூ.24.24 கோடி அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு கனிம நிறுவனம், மேலூரில் புதியதாக நிறுவியுள்ள தொழிற்சாலையின் மூலம் நவீன இயந்திரங்கள் கொண்டு மெருகூட்டப்பட்ட கிரானைட் பலகைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகிறது.

- தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு சொந்தமான சிவகங்கை கிராபைட் தொழிற்சாலையில் நவீன உத்திகள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு கனிம நிறுவனம் புதிய கண்டுபிடிப்பாக வெர்மிகுலைட்டிலிருந்து தனித்தன்மை கொண்ட உற்பத்தி உத்திகளை கையாண்டு ‘வெர்மிடைல்ஸ்’ என்னும் பெயரில் டைல்ஸ் உற்பத்தியினை துவக்கியுள்ளது.

## 10.6. 2014–15ஆம் நிதியாண்டில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்

❖ தமிழ்நாடு கனிம நிறுவனம் சுரங்க பயன்பாட்டிற்காக ரூ.12.72 கோடியில் கனரக இயந்திரங்கள் வாங்கப்பட்டு சுரங்கப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

❖ சென்னை எண்ணூரில் உள்ள இந்திய தர மணல் தொழிற்சாலையை ரூ.1.95 கோடியில் நவீனமயமாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ வேலூர் மாவட்டம், செவ்வாத்தூரில் புதிய வெர்மிகுலைட் தொழிற்சாலையை ரூ.1.80 கோடியில் நிறுவ பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ சுரங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கிரானைட் கற்படிவங்களின் உற்பத்தி முறையையும், செயல்பாடுகளையும் அறிவியல்பூர்வமாக ஆய்வு செய்திடவும், ஒரு சுரங்க தணிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் நிறுவனத்தின் புவியியலாளர்கள், சுரங்க பொறியாளர்கள், நில அளவையாளர் மற்றும் இந்திய புவியியல் துறை சேர்ந்த ஓய்வு பெற்ற இயக்குநர் ஆகிய நிபுணர்கள் இடம் பெற்றுள்ளனர். இக்குழு குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒவ்வொரு சுரங்கத்திலும் அறிவியல் பூர்வமான தணிக்கை மேற்கொள்கிறது.



## 10.7. சுரங்க மேலாண்மை மென்பொருள் (Quarry Management System Software)

- குவாரி மற்றும் தொழிற்சாலைகளில் நடைபெறும் தினசரி பணிகளான உற்பத்தி, கற்கள் அனுப்புகை, தொழிலாளர்கள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாடு, உற்பத்திக் கழிவுகள் முதலானவற்றை கணினி மூலமாக நேரடியாக கண்காணிப்பதற்காக, தமிழ்நாடு கனிம நிறுவனம், தனது புதிய உத்திகளை பயன்படுத்தி சுரங்க மேலாண்மை மென்பொருளை உருவாக்கியுள்ளது. இந்த மென்பொருள் உற்பத்தி திறனை மேம்படுத்த உதவுவதுடன் தொழிலாளர்கள் மற்றும் இயந்திரங்களின் திறன்மிக்க பயன்பாடு போன்றவற்றை வெளிப்படையாக கண்காணிக்கவும் பயன்படுகிறது.

- புதிய உத்திகள் மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை சுரங்க மேலாண்மை மென்பொருள் மூலம் மேற்கொண்டு 2013 – 2014 ஆம் ஆண்டு சிறப்பாக செயல்பட்டமைக்காக மாநில அரசுகளின் பொது துறை / கூட்டுறவு / கூட்டமைப்பு மற்றும் சமுகம் போன்ற நிறுவனங்களுக்கான பிரிவின் கீழ் 30.01.2015 அன்று குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற 18வது தேசிய மின் ஆளுமை கருத்தரங்கில், மத்திய அரசின் தேசிய மின் ஆளுமை விருது (National e-Governance Award) என்ற உயரிய விருது டாமின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

- டாமின் நிறுவனம் உருவாக்கிய குவாரி மேலாண்மை மென்பொருளில், மேலும் பல புதிய உத்திகளை

பயன்படுத்தியும் மீதமுள்ள அனைத்து செயல்பாடுகளை கணினி மயமாக்கியும் QMS version.2.0 ஆக தரம் உயர்த்தி வெளியிட உள்ளது.

### 10.8. குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் நிர்வாகம்

டாமின் நிறுவனம் தற்போது மிக நவீன உத்திகளை கையாண்டு உற்பத்தி பெருக்கத்தையும் மற்றும் காற்று, ஒலி மற்றும் நீர் நிலைகள் மாசுபடாமல் முறையாகவும் அறிவியல் பூர்வமாகவும், சுரங்கப் பணிகளை தற்பொழுது செய்து வருகிறது. மேலும் சுரங்கங்களில் சுற்று சூழலை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.



## 11. புவியியல் மற்றும் சுரங்கத்துறை

கனிமங்கள் முக்கியமான பல தொழில்களுக்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவதுடன் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தொழில் வளர்ச்சிக்கும் கணிசமாக பங்காற்றி வருகின்றது. கனிமங்கள் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாக கருதப்படுவதுடன், நாட்டின் செல்வ வளமாகவும் போற்றப்படுகின்றன. மாநிலத்தில் கிடைக்கப்பெறும் கனிம வளங்களும் அதன் விவேகமான பயன்பாடும் மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளிலும் பொருளாதாரச் செழிப்பிலும் பிரதிபலிக்கின்றன.

கனிம வள ஆதாரங்கள் மீளப் பெறமுடியாததாக விளங்குவதால் அக்கனிமங்களை சட்ட ரீதியாக பாதுகாக்க அறிவியல் பூர்வமாகவும் மற்றும் விவேகமாகவும் அகழ்ந்தெடுப்பதின் மூலம் கனிம நிர்வாகத்தின் வாயிலாக கனிசமான கனிம வருவாயினை ஈட்ட முடியும்.

தமிழ்நாட்டில் தொழில் சார்ந்த கனிமங்களான பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக்கல், கார்னட் மணல், சிலிகா மணல், குவார்ட்ஸ், பெல்ஸ்பார், கிராபைட், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, மாக்னசைட், இரும்புத்தாது போன்றவையும்

இவை தவிர, பொதுவாக உபயோகப்படும் சிறுவகை கனிமங்கள், கருப்பு மற்றும் பலவண்ண கிரானைட் கற்களும் கிடைக்கின்றன.

## 11.1. குறிக்கோள்கள்

1) நவீன கனிம ஆய்வு உத்திகளைக் கையாண்டு புதிய கனிம படிவங்களை கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்வதை துரிதப்படுத்துதல்.

2) கனிமம் சார்ந்த தொழிற்சாலைகளை நிறுவ முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு கனிம வளம் குறித்த தகவல்கள் மற்றும் விபரங்களை வழங்குதல்.

3) கனிமங்களை அதிக அளவு பயன்தரத்தக்க வகையில் பயன்படுத்துவதன் மூலம் கனிமத் தொழில்முனைவோர்களிடையே போட்டி மனப்பான்மையினை ஊக்குவித்தல்,

4) மாநிலத்தில் கனிம ஆய்வு பணிகள் மற்றும் சுரங்கப்பணிகள் மேற்கொள்ளும் பொழுது அதற்கு பின்னரும் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

5) சுரங்கப்பணிகள் மற்றும் கனிமம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு தேவையான மனித வளத்தினை மேம்படுத்தி ஊக்குவித்தல்.

6) சுரங்கப்பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு பாதுகாப்பும் நல்வாழ்வும் அளித்தல்.



7) சட்டவிரோதமான சுரங்கப்பணிகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக கனிமங்களை எடுத்துச்செல்பவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

8) சிறந்த கனிம நிர்வாகத்தின் மூலமாக கனிம வருவாயினை அதிகரித்தல்.

## 11.2. புவியியல் மற்றும் சுரங்கத்துறை பின்வரும் முக்கிய பணிகளை செய்து வருகிறது

1. கனிம ஆய்வு மற்றும் கனிமங்களின் மதிப்பீடு.
2. நீலகிரி மற்றும் கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புவி தொழில் நுட்ப ஆய்வுகள்.
3. கனிம நிர்வாகம்.

### கனிம ஆய்வு

இத்துறையின் கனிம ஆய்வுப்பிரிவு மாலிப்டினம், தங்கம் மற்றும் பிளாட்டினம் போன்ற கனிமங்களை கண்டறிவதற்கான ஆய்வுகளை நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், ஈஸ்வரமூர்த்திபாளையம் கிராமம் மற்றும் சேலம் மாவட்டம், சேலம் மற்றும் ஓமலூர் வட்டங்களில் சுண்ணாம்புக் கரடு மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் மேற்கொண்டது. மேலும், புதிய ஆய்வுப்பணிகள் இத்துறையின் மூலம் நடைபெற உள்ளது.

**மலைப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புவி தொழில்நுட்ப ஆய்வுகள்**

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில் பழனி மலைப்பகுதிகளில் மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைப்பகுதிகளில் புவி தொழில் நுட்ப ஆய்வு மையங்கள், ஆய்வுகள் மேற்கொண்டு நிலச்சரிவு ஏற்பட சாத்தியமுள்ள பகுதிகளைக் கண்டறிந்து புவியியல் சிறப்பு வரைபடங்கள் மற்றும் மண்டல வரைபடங்கள் தயாரித்துள்ளது. நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் நிலச்சரிவு நிகழ வாய்ப்புள்ள மலைப் பகுதிகளைக் கண்காணிக்கவும் புவி தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளவும் அரசால் புவி தொழில் நுட்ப ஆய்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. புவி தொழில் நுட்ப மையங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு நிலச்சரிவு அழிவுகளை தடுக்கும் பணிகளுக்குரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றது. மேலும் நிலச் சரிவினால் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் பொது மக்களின் உடைமைகள் மற்றும் உயிரைப் பாதுக்கும் வகையில் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் புனரமைப்பு சம்பந்தமாக தொழில் நுட்ப கருத்துருக்களை அளித்து வருகின்றன.



புவி தொழில் நுட்ப மையங்கள், மலைப்பகுதிகளில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளத் தேர்ந்தெடுக்கும் பகுதிகளை, நிலச்சரிவு பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்துடன் புவி தொழில் நுட்ப ஆய்வுகள் மேற்கொண்டு கட்டுமான பணிகளுக்குக்கான சாத்தியக்கூறு அறிக்கைகள் வழங்கி வருகின்றன.

2014–15ஆம் ஆண்டில் இப்புவி தொழில் நுட்ப மையங்கள் 213 கட்டிடங்கள் மற்றும் வீட்டு மனைகளுக்கு சாத்தியக்கூறு அறிக்கைகள் அளித்துள்ளன.

**11.5. கனிம நிர்வாகம்**

சிறு கனிமங்கள் மற்றும் பெருங்கனிமங்களுக்கான கனிமச் சலுகைகளை உரிய சட்டங்கள் மற்றும் விதிகளின்படி வழங்குவது கனிம நிர்வாகத்தில் அடங்கும். சுற்றுப்புறச் சூழ்நிலைகளை பாதிக்காத வண்ணம் அறிவியல் பூர்வமான முறையில் கனிமங்களை அகழ்ந்தெடுத்தலை உறுதிசெய்தல், கனிமங்களைப் பாதுகாத்தல் மற்றும் கனிம மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல், சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் கடத்துதலை

தடுத்தல், உரிமக்கட்டணம், ராயல்டி மற்றும் இதரத் தொகைகளை வசூலித்தல் மூலமாக மாநிலத்தின் கனிம வருவாயினை அதிகரித்தல் போன்ற கனிம நிர்வாகப் பணிகளை இத்துறை மேற்கொண்டு வருகின்றது.

கனிம நிர்வாகத்தினை திறம்பட மேற்கொள்வதற்காக இத்துறையில் துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் தலைமையில் 28 மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாவட்ட அலுவலகங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் நேரடி நிர்வாக கட்டுப்பாட்டின் கீழும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையரின் ஒட்டு மொத்த கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

நடைமுறையில் உள்ள பெருங்கனிமம் மற்றும் சிறுகனிம குத்தகைகளின் விபரம்

| வ. எண் | கனிமத்தின் பெயர் | நடைமுறையில் உள்ள குத்தகை உரிமங்களின் எண்ணிக்கை | பரப்பு ( ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| பெருங்கனிமங்கள் | | | |
| (1) | கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு | 24 | 48940.00.0 |
| (2) | பழுப்பு நிலக்கரி | 1 | 25900.00.0 |
| (3) | சுண்ணாம்புக்கல், குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பார், கார்னட், இல்மனைட் மற்றும் பிற பெருங் கனிமங்கள். | 917 | 10075.30.0 |
| | மொத்தம் | 942 | 84915.30.0 |
| சிறுகனிமங்கள் | | | |
| (1) | கிரானைட் | 846 | 3490.86.0 |
| (2) | இதர சிறு கனிமங்கள் (கல், மண், கிராவல், சவுடு மற்றும் பல) | 2916 | 5645.38.5 |
| | மொத்தம் | 3762 | 9136.24.5 |
| | நிகர மொத்தம் | 4704 | 94051.54.5 |



## 11.3. கனிம வருவாய்

இத்துறை கனிம மேலாண்மையில் மேற்கொண்ட செம்மையான மற்றும் முனைப்பான நடவடிக்கையின் பலனாக மாநிலத்தின் கனிம வருவாய் தொடர்ந்து அதிகரித்து கொண்டே வந்துள்ளது. அரசுக்கு கிடைக்கும் கனிம வருவாயில் நல்ல முன்னேற்றம் காண்பிக்கும் வகையில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை கடினமான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. 1983–84 ஆம் ஆண்டில் ரூ.2.83 கோடியாக இருந்த கனிம வருவாய் 2014–15ஆம் ஆண்டில் (மணல் வருவாய் நீங்கலாக)

**993.62** கோடியாக பன்மடங்கு உயர்ந்துள்ளது. இது இத்துறை மேற்கொண்ட முயற்சிகளுக்கு நற்சான்றாக அமைந்துள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் மணல் வருவாய் நீங்கலாக பெறப்பட்ட கனிம வருவாய் பின்வருமாறு:–

| ஆண்டு | வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| **2010–11** | **671.38** |
| **2011–12** | **835.84** |
| **2012–13** | **943.99** |
| **2013–14** | **969.70** |
| **2014–15** | **993.62** |
| **2015–16** (ஜூலை மாதம் வரை) | **319.75** |

## 11.4. இணைய வழி சுரங்க குத்தகைப் பதிவேடு

இணையவழி குத்தகைப் சுரங்க பதிவேடு என்பது சுரங்க குத்தகை உரிம பகுதிகளை, புவிதகவல் அமைப்பின் அடிப்படையில் உரிய வரைபடங்களுடன் ஒத்திசைவு செய்து, செயற்கைகோள் நிழற்படங்களின் உதவியுடன் ஒப்பீடு செய்வதாகும். இத்திட்டத்தினை முழுமையாக செயல்படுத்துவதன் வாயிலாக மாநிலத்தின் அனைத்து



கனிமவள பகுதிகளிலும் உரிய அனுமதியின்றி கனிமங்கள் வெட்டியெடுப்பதை கண்டறிந்து தடுக்க இயலும்.

அரசு இதற்காக **2011–12** மற்றும் **2012–13**ஆம் நிதியாண்டின் பகுதி–**2** திட்டத்தில் கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, அரியலூர், கிருஷ்ணகிரி, மதுரை, திருச்சி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் கனிம குத்தகை உரிமம் வழங்கப்பட்ட பகுதிகளை கணினி வாயிலாக பதிவுசெய்து இணைய வழி சுரங்க பதிவேடு (Online Mining tenement registry) தயாரிக்க ரூ.**108** இலட்சம் ஒதுக்கீடு செய்தது.

கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மேற்படி பணிகள் முடிவடைந்துள்ளன. திருச்சி மாவட்டத்திற்கான இணையவழி சுரங்க குத்தகை பதிவேடு தயாரிப்பதற்கு ஆயத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவுற்றதும் இணையவழி சுரங்க குத்தகை பதிவேட்டிற்கான மென்பொருள் மையத்தில் சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி, சென்னை பெருங்குடி, மாநில தகவல் மையத்தில் உள்ள இத்துறையின் கணினி சேவையகத்தில் பதிவேற்றம் செய்யப்படவுள்ளது.

## 12. சர்க்கரைத் துறை

சர்க்கரைத் தொழில் தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான வேளாண் சார்ந்த தொழிலாக விளங்குகிறது. இப் பெருந்தொழில் கிராமங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாக உதவி வருகிறது. நாட்டின் சர்க்கரை உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் நான்காவதாக தமிழ்நாடு உள்ளது. நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு சுமார் 7 முதல் 9 சதவீதமாகும்.

மாநிலத்தில் மொத்தம் உள்ள 46 சர்க்கரை ஆலைகளில் 43 சர்க்கரை ஆலைகள் தற்போது இயங்குகின்றன. இவற்றில் தனியார் துறையில் 25 ஆலைகளும் கூட்டுறவுத்துறையில் 16 ஆலைகளும் மற்றும் பொதுத்துறையில் 2 ஆலைகளும் இயங்கி வருகின்றன.

### 12.1. சாதனைகள்

நமது மாநிலத்தில் இயங்கி வரும் 43 சர்க்கரை ஆலைகள் 2014–15அரவை பருவத்தில் சுமார் 138.73 இலட்சம் டன் கரும்பினை அரவை செய்து 9.17 சதவீத சராசரி



கட்டுமானத்துடன் 12.72 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளன. நடப்பு பருவத்தில் தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் 31.7.2015 வரை 120.16 இலட்சம் மெ.டன் கரும்பு அரவை செய்து 8.71 சதவீத சராசரி கட்டுமானத்துடன் 10.49 இலட்சம் மெ.டன் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன. 2013–14ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் கரும்பு அரவை செய்த விபரம் மற்றும் 2014–15ஆம் அரவைப் பருவத்தில் அரைக்கப்படவுள்ள கரும்பு அளவின் உத்தேச மதிப்பீடு ஆலை வாரியான விவரங்கள் இத்துறையின் செயல்பாட்டு குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

2014–15ம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு, ஒரு டன் கரும்புக்கு ரூ.100 போக்குவரத்து வாகன கட்டணத்துடன் ரூ.2,650/– என மாநில அரசின் பரிந்துரை விலையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி திறனை அதிகரித்து கரும்பு உற்பத்தியை பெருக்கவும் மற்றும் சர்க்கரை ஆலைகள் 100% அரவைத் திறனை அடையும் நோக்குடனும், புதிய தொழில் நுட்பங்களை அடிப்படையாக கொண்ட நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிழல்வலைக் கூடத்தில்

நாற்றுகள் உற்பத்தி செய்தல், பாசன நீர் மற்றும் இரசாயன உரங்களை திறனாகப் பயன்படுத்துதல், நுண்ணீர் பாசனத்தின் மூலமாக நீர் கரையும் உரமிடுதல் ஆகியன நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம், அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் சர்க்கரையை விற்பனை செய்வதில் ஒருங்கிணைப்பு முகவராக செயல்பட்டு வருகிறது. **2013–2014**ம் நிதியாண்டில், **4.40** இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையை விற்பனை செய்துள்ளது. இதன் மதிப்பு மொத்தம் ரூ.**1348.89** கோடியாகும். **2014–15** நிதியாண்டில் **4.36** இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.**1370.63** கோடியாகும். **2015–2016**ம் நிதியாண்டில் ஜுன் **2015** வரை மாதத்தில் **0.99** இலட்சம் மெட்ரிக் டன்கள் சர்க்கரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.**274.54** கோடியாகும்.

உப உற்பத்திப் பொருளான கரும்புச் சக்கை, ஆலை செயல்பாட்டிற்குத் தேவையான நீராவி மற்றும் மின் உற்பத்திக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆலையின் தேவைக்கு மேல் உபரியாக உள்ள கரும்புச் சக்கை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பிற தொழிற்சாலைகளுக்கு விற்கப்படுகிறது. **2014–15**ம் நிதியாண்டில் **32,578** மெ.டன் கரும்புச் சக்கை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.**6.71** கோடியாகும். **2015–2016**ம் நிதியாண்டில் ஜுன் **2015** வரை **20,350** மெ.டன் கரும்பு சக்கை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.**3.99** கோடியாகும்.



சர்க்கரை ஆலையின் மதிப்புமிக்க உப உற்பத்தி பொருளான கழிவுப்பாகானது எரிசாராயம், இரசாயனப் பொருள்கள் மற்றும் கால்நடை தீவன உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகிறது. இரண்டு கூட்டுறவு எரிசாராய ஆலையின் தேவைக்கு போக மீதமுள்ள கழிவுப்பாகு, வடிப்பாலைகள், ரசாயன உற்பத்தியாளர்கள் மற்றும் இதர தேவைக்கு விற்பனை செய்யப்படுகிறது. **2014–15** நிதியாண்டில் **2.09** இலட்சம் மெட்ரிக் டன் கழிவுப்பாகு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ **85.91** கோடியாகும். **2015–2016**ம் நிதியாண்டில் ஜுன் **2015** வரை மாதத்தில் **0.41** இலட்சம் மெட்ரிக் டன் கழிவுப்பாகு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.**16.25** கோடியாகும்.

கழிவு மண், சர்க்கரை ஆலைகளின் ஒரு உப உற்பத்தி பொருளாகும். இது மண்புழு உரம் (வெர்மி கம்போஸ்ட் உரம்) தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. சில சர்க்கரை ஆலைகள், நுண் ஊட்டச்சத்து, நுண் உயிரினங்களைச் சேர்த்து மேம்படுத்தப்பட்ட கழிவு மண் தயாரிக்கவும் இக்கழிவு மண்ணை பயன்படுத்தி வருகின்றனர். கழிவுமண்ணை சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு மண் வளம் பெருக்கிட விநியோகம் செய்கின்றன.

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் எரிசாராய ஆலைகள், 2014–15 நிதியாண்டில் 82.88 இலட்சம் லிட்டர் எத்தனால் மற்றும் எரிசாராயம் விற்பனை செய்துள்ளன. அதன் மதிப்பு ரூ.26.90 கோடியாகும். 2015–2016ம் நிதியாண்டில் ஜுன் 2015 வரை 52.20 இலட்சம் லிட்டர் எத்தனால் மற்றும் எரிசாராயம் விற்பனை செய்துள்ளது. அதன் மதிப்பு ரூ.17.36 கோடியாகும்.

பெட்ரோலுடன் 5 சதவீதம் எத்தனாலை கலப்பதற்கான அனுமதி உள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 9.60 கோடி லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட 8 (6 தனியார் துறையிலும் மற்றும் 2 கூட்டுறவு துறையிலும்) எத்தனால் ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் ஆண்டுக்கு 1.80 கோடி லிட்டர்



எத்தனால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட எத்தனால் ஆலைகள் அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் தற்போது கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் தலா 7.50 மெகாவாட் திறனிலும், சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 5 மெகாவாட் திறனிலும் இணை மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. உற்பத்தி செய்யப்பட்ட உபரி மின்சாரம் மாநில மின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு 2014–2015ம் நிதியாண்டில் ரூ.1.05 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 2015–2016ம் நிதியாண்டில் ஜுன் 2015 வரை, ரூ.0.16 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

### 12.2. இணை மின் உற்பத்தி நிலையம் மற்றும் ஆலைகளை நவீனப்படுத்தும் திட்டம்

183 மெகாவாட் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள், மொத்தம் ரூ.964.88 கோடி செலவில் 12 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகின்றன.

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | மாவட்டம் | மெகா வாட் அளவு | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | நாமக்கல் | 15 | 79.18 |
| 2 | சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை | தர்மபுரி | 15 | 78.83 |
| 3 | தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை | தர்மபுரி | 12 | 60.20 |
| 4 | வேலூார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | வேலூார் | 15 | 79.51 |
| 5 | செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | திருவண்ணா மலை | 15 | 81.03 |
| 6 | கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 15 | 84.12 |
| 7 | கள்ளக்குறிச்சி–2 கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 15 | 76.81 |
| 8 | செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 18 | 94.25 |
| 9 | எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை | கடலூார் | 15 | 75.54 |
| 10 | தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை | மதுரை | 15 | 80.61 |
| 11 | பெரம்பலூார் சர்க்கரை ஆலை | பெரம்பலூார் | 18 | 96.14 |
| 12 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை | தஞ்சாவூர் | 15 | 78.66 |
| | | மொத்தம் | 183 | 964.88 |



இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் முடியும் தருவாயிலுள்ளன. இப்பணிகள் கூர்ந்து ஆய்வு செய்யப்பட்டுள்ளதன் காரணமாக குறிப்பாக வேலூர், செய்யாறு மற்றும் செங்கல்ராயன் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மேற்கண்ட பணிகள் நவம்பர் 2015ல் முடிவுறும். ஏனைய அரசுத்துறை சர்க்கரை ஆலைகளில் இப்பணிகள் முடிக்கப்பட்டு ஒவ்வொன்றாகத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இணை மின் உற்பத்தி திட்டத்துடன், மேற்காணும் 12 சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை உற்பத்திக்குத் தேவையான மின்சக்தி மற்றும் நீராவிப் பயன்பாட்டினைக் குறைத்து அதன்மூலம் மின் ஏற்றுமதி அளவினை அதிகரிக்க ரூ.276.27 கோடி செலவில் ஆலை இயந்திரங்களை நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | மாவட்டம் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | நாமக்கல் | 7.88 |
| 2 | சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை | தர்மபுரி | 11.15 |
| 3 | தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை | தர்மபுரி | 11.21 |
| 4 | வேலூார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | வேலூார் | 37.07 |
| 5 | செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | திருவண்ணாமலை | 14.68 |
| 6 | கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 9.02 |
| 7 | கள்ளக்குறிச்சி–2 கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 10.96 |
| 8 | செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 40.95 |
| 9 | எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை | கடலூார் | 13.63 |
| 10 | தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை | மதுரை | 39.94 |
| 11 | பெரம்பலூார் சர்க்கரை ஆலை | பெரம்பலூார் | 42.72 |
| 12 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை | தஞ்சாவூர் | 37.06 |
| | | **மொத்தம்** | **276.27** |



இப்பணிகளில், தர்மபுரி, கள்ளக்குறிச்சி–1 ,கள்ளக்குறிச்சி–2, சேலம் மற்றும் சுப்ரமணியசிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மேம்பாட்டு பணிகள் முடிவு பெற்றுள்ளன. வேலூார், செய்யாறு மற்றும் செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேம்பாட்டு பணிகள் நவம்பர் 2015க்குள் முடியும்.

**12.3. எரிசாராய ஆலையுடன் கூடிய எத்தனால் ஆலை**

செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நாள் ஒன்றுக்கு 45 கி.லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலையுடன் கூடிய வடிப்பாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன. இதற்கான மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனஅமைச்சகத்தின் தடையில்லாச் சான்றிதழ் பெறப்பட்டு விட்டது. நவீன உற்பத்தித் தொழில் நுட்பம், நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள் மற்றும் தேவையான அனைத்து உள் கட்டமைப்புகளையும் கருத்தில் கொண்டு செய்யப்பட்ட மறு மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தப்பட்ட திட்டச் செலவு ரூ.90 கோடி ஆகும். இதற்கான தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு 45 கி.லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட வடிப்பாலையுடன் கூடிய எத்தனால் ஆலை கள்ளக்குறிச்சி–2 மற்றும் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன. இதற்கான தொழில் நுட்ப ஆலோசகர் அமர்த்தப்பட்டு விரிவான திட்ட நகல் பெறப்பட்டுள்ளது. மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சகம் மற்றும் தமிழ் நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியத்தின் ஒப்புதல் பெறுவதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

**பி. தங்கமணி**
**தொழில் துறை மற்றும்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**